Cambridge Senior & Tamil Teachers Prelim Exam : for 1932.

இரகுவம்மிசம்

அயனெழுச்சிப் படலம்

மூலமும் — உரையும்.

உரைஆசிரியர்,
புன்னாலைக்கட்டுவன்
சி. கணேசையர்

சுன்னாகம் :
தனலட்சுமி புத்தகசாலை
1931. விலை சதம் 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முகவுரை.

அயனெழுச்சிப்படலமென்னுமிது:- யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து அரசாண்ட பரராசசேகரமகாராஜாவின் மருகனாகிய அரசகேசரியினாலே தமிழில் இயற்றப்பட்ட இரகுவம்மிசத்திலுள்ள ஒருபடலமாகும். இது விதர்ப்பநாட்டரசனாகிய போஜராஜனின் சகோதரியாகிய இந்துமதியின் பொருட்டு, அஜமகாராஜன் அயோத்தியினின்றும், விதர்ப்பநாட்டுக்குப் புறப்பட்டுச் செல்லுதலையுணர்த்துகின்றது. அஜனாவான் சூரியகுலத்தரசனாகிய திலீபராஜன் புதல்வனாகிய இரகுராஜனின் புதல்வன்.

இப்படலம், இப்போது வித்தியாபகுதியாரால் ஹேம்பிரீஜ் ஜீனியர் வகுப்புக்கும், தமிழாசிரியர் பிரவேச வகுப்புக்கும் பாடமாக நியமிக்கப்பட்டுள்ளது. என்னால் எழுதப்பட்ட இப்படலவுரைப்பிரதிகள் முழுவதும் விலைப்பட்டு முடிந்தமையால், இரண்டாம் பதிப்பாகிய இது, என் அநுமதிப்படி, தனலட்சுமிபுத்தகசாலைச் சொந்தக்காரரும், ஈழகேசரிப் பத்திராதிபருமாகிய ஸ்ரீமத்: நா. பொன்னையாபிள்ளை அவர்களால் பதிக்கப்பெற்றுள்ளது.

இங்ஙனம்,

புன்னாலைக்கட்டுவன்.
8-6-31.

சி. கணேசையர்,

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம். 84689

அயனெழுச்சிப் படலம்.

புதிதுற விளவ லிங்ஙன் வளர்தலும் போச னென்னும்
விதியமை விதர்ப்பர் வேந்தன் விளங்குதன் னுடன்றோற் றிந்து
மதிமண வினைக்கு வல்லே வம்மினென் றரசர் யார்க்கு
முதியமை யோலை யோடுந் தூதரை யுய்த்திட் டானே.

இ-ள்: புதிது உற இளவல் இங்ஙன் வளர்தலும் – அதிசயம் பொருந்த இளமைப் பருவத்தை யுடையோனாகிய அயன் இப்படி வளர்ந்து காளைப் பருவத்தை யடைதலும், போசன் என்னும் விதி அமை விதர்ப்பர் வேந்தன் – போசன் என்று விதந்து சொல்லப்படும் நீதியமைந்த விதர்ப்பராசன், விளங்கு தன்னுடன் தோற்று இந்துமதி மணவினைக்கு– விளங்குகின்ற தன்னோடு கூடிப்பிறந்த இந்துமதியின் விவாகச் செயலின் பொருட்டு, வல்லே வம்மின் என்று–விரைய வருகுதிர்கள் என்று, அரசர் யார்க்கும் உதிஅமை ஓலையோடும் தூதரை உய்த்திட்டான் – அரசர்கள் யாவருக்கும் பாசுரமமைந்த ஓலையோடும் தூதர்களை அனுப்பினான். எ – று.

வளர்தலும் வேந்தன் மணவினைக்கு உய்த்திட்டான் என இயைக்க. வம்மினென்று என்பது இடைப்பிறவரல். உதி ஆகுபெயர். (க)

உய்த்தபின் வரவிட் டானீ டுள்ளுறை யோலை யாசை
பத்தினி னெட்டும் வென்றோ னங்கது பரிந்து கேளாத்
தத்துமாப் போச னோடுந் தமர்கொள்கை தகவென் றுணிற்
சித்திரத் திலக மன்ன மைந்தநீ சேறி யென்றான்.

இ-ள்: உய்த்தபின் – (அவ்வாறு அரசர் யார்க்கும் தூதரை) விடுத்த பின்பு, நீடு உள்ளுறை ஓலை வரவிட்டான் – விரிவான பாசுரம் பொருந்திய ஓலையை (இரகுவுக்கு) வரவிடுத்தான், ஆசை பத்தினில் எட்டும் வென்றோன் அங்கது பரிந்து கேளா – திக்குகள் பத்திலே எட்டையும் வென்றவனாகிய அவ்விரகு அவ்வோலையை விரும்பிக் கேட்டு, தத்துமாப் போசனோடும் தமர்கொள்கை தகவுஎன்று – பாய்கின்ற குதிரைப் படையையுடைய போசராசனோடும் சுற்றமாந் தன்மையைக் கொள்ளுதல் தகுதி என்று நிச்சயித்து, ஆணில் சித்திரத் திலகம் அன்ன மைந்த நீ சேறி என்றான் – புருடர்களுக்குள்ளே அழகிய திலகம் போன்ற புதல்வனே! நீ (இம்மணவினைக்குச்) செல்லுதி என்றான். எ – று.

894.811

84684C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுறை – உள்ளே உறுதலையுடையது=பாசுரம். தம் புதல்வனுக்கு மணம்புரிதல் வேண்டுமென்று எண்ணியிருந்தவனுதலினுலே அம் மணவோலையை விரும்பிக்கேட்டான் என்பார் அங்கது பரிந்துகேளா என்றும், குலமுதலியவற்றாற் போசராசன் சிறந்தவனே என ஆராய்ந்து தாஞ் சம்பந்தஞ் செய்தற்கேற்ற தகுதியையுடையவன் இவனே என நிச்சயித்தான் என்பார் தத்துமாப் போசனோடுந் தமர்கொள்கை தகவு என்று என்றும், தன்புதல்வனும் இம்மணவினைக்குரிய பருவ மாதியவற்றை யுடையனெனக் கண்டு விடுத்தான் என்பார் ஆணிற் சித்திரத்திலக் மன்னன் மைந்தநீ சேறி என்றான் என்றுங் கூறினர். கேளா என்று என்றான் என முடிக்க. உம்மையால் ஆகாயத்தையும் வென்றவனென்பது பெறப்படும். (உ)

ஏந்தனு மரசர் கோமா னிணையடி தொழுது போற்றிப்
போந்தனன் றிரண்ட சேனை பூத்தது படல தூளி
யோய்ந்தன பறவை யான வொண்கிரி சுரித்திட் டேய்ந்து
சாய்ந்தன வாழி யேழிற் றழைத்தது தமர மாதோ.

இ – ள்: ஏந்தலும் – பெருமையிற் சிறந்தோனாகிய அயனும், அரசர் கோமான் இணையடி தொழுது போற்றிப் போந்தனன் – அரசர்க்கரசனாகிய இரகுவினது இரண்டாகிய பாதங்களையும் வணங்கித் துதித்துப் புறப்பட்டான், சேனை திரண்ட – அப்பொழுது சேனைகள் வந்து கூடின, படல தூளி பூத்தது – (அதனால்) படலமான தூளிகள் உண்டாயின, பறவையான ஓய்ந்தன – (அதனால்) பறவைகளாயின பறத்தலையொழிந்தன, ஒண் கிரி சுரித்திட்டு ஏய்ந்து சாய்ந்தன – அந்தச் சேனைகளினது நடையின் அதிர்ச்சியினால்) ஒள்ளிய மலைகளானவை உள்வாங்கிச் சேர்ந்து விழுந்தன, தமரம் ஆழிஏழின் தழைத்தது – அவற்றின் ஆரவாரம் எழுகடல்களின் ஒலியினும் பார்க்க அதிகப்பட்டது. எ – று.

உம்மை – சிறப்பு. ஆழிஏழு – ஆகுபெயர். (௩)

ஆதரத் தசலந் துஞ்சி யகல்விசும் பாற்றின் மெல்ல
மாதரத் தசைந்து போகு மழைமுகிற் புறங்க ளெங்குங்
காதரத் துவரி யுண்ட கடியன வுருப்ப மெல்லாம்
போதரத் தூளி போர்ப்பப் போயின புரவி யீட்டம்.

இ – ள்: ஆதரத்து அசலம் துஞ்சி – ஆதாரமாகக்கொண்டு மலைகளிலே கிடந்து, அகல் விசும்பு ஆற்றில் மெல்ல அசைந்து மாதரத்துப் போகும் – பின் அகன்ற ஆகாயவழியில் மெல்லவாக அசைந்து பெரிய மேன்மையோடும் செல்லுகின்ற, மழை முகில் புறங்கள் எங்கும் – கருமையுடைய முகிலின் புறங்கள் எங்கும், காதரத்து உவரி உண்ட கடியன உருப்பம் எல்லாம் போதரத் தூளி போர்ப்ப – விருப்பத்தோடும் கடலையுண்ட கொடிய வெப்பமெல்லாம் போகுமாறு பூதூளி மூட, புரவி யீட்டம் போயின – குதிரைக்கூட்டங்கள் சென்றன. எ – று.

அத்துச் சாரியை. ஆதரத்து என்பதற்கு விருப்பத்தோடு எனினுமாம். துஞ்சிப்போகும் மழை என இயைக்க. (௪)

மேக்குலா மரசர் சீர்த்தி விடர்கொண்டாம் பிலஞ்ச லிக்கப்
போக்கிவெம் மதநாற் றத்திற் றிக்கயக் கைப்பைப் பொத்தி.
யாக்குமம் மதயா றுந்தி யலைகட லுவரை யெல்லா
நீக்கியங் கினிதிற் போன நெடுங்கர வரைக ளெல்லாம்.

இ – ள். மேக்கு உலாம் அரசர் சீர்த்தி விடர் கொண்டு ஆம் பிலம் சலிக்கப் போக்கி – மேலாக விளங்குகின்ற அரசர்களுடைய கீர்த்திகளை (அடிவைப்பானே நிலம்) பிளப்புக்கொள்ளுதலாற் றோன்றிய பாதலஞ் சலிக்கும்படி (அதன்கட்) போக்கி, வெம் மத நாற்றத்தில் திக்கய பை கைபொத்தி – வெவ்விய மத நாற்றத்தினாலே திக்குயானைகளின் பைபோன்ற கைத்துளையைப் பொத்தி, ஆக்கும் அ மதயாறு உந்தி அலைகடல் உவரையெல்லாம் நீக்கி – பிலுற்றுகின்ற அந்த மதயாற்றைச் செலுத்தி திரைபொருந்திய கடலிலுள்ள உவர்த்தன்மை முற்றையும் ஒழித்து, அங்கு நெடும் கர வரைகளெல்லாம் இனிதில் போன – அங்கே நீண்ட கையையுடைய மலைபோன்ற யானைகளெல்லாம் இனிதாகச் சென்றன. எ – று.

திக்கயம் வடநூன்முடிபு. பை என்பதற்குப் பாம்பின் படம்போன்ற கை எனினுமாம். கை–ஆகுபெயர். இதன்கண் புளிப்பு, கைப்பு, உவர்ப்பு என்னுஞ் சுவையின் பேதங்களுந் தொனித்தல் காண்க. ஆம்பிலம் – புளிப்பு. போக்கிப் பொத்தி நீக்கிப் போன என வினைமுடிபு செய்க. (ரு)

தங்கொளி யதனின் மேருச் சயிலமார் புதைத்துச் சாயாக்
கங்குல்கா லறுத்து நீண்ட கதலிகை யாடை யாலே
மங்குலின் றலையி னெற்றி மணிமுடி யதனின் வானத்
திங்களின் வயிறு கீறிச் சென்றன தேர்களெல்லாம்.

இ – ள்: தங்கு ஒளியதனின் மேருச் சயில மார்பு உதைத்து – தம்மிடத்தில் நிலையுற்ற வொளியினாலே மேருமலையின் மார்பையுந் தாக்கி, சாயாக் கங்குல் காலறுத்து – கெடாத இருளையு மழித்து, நீண்ட கதலிகை ஆடையாலே மங்குலின் தலையின் எற்றி – நெடிய கொடியின் புடவையாலே மேகத்தின் றலையிலே அடித்து, மணி முடியதனின் வானத் திங்களின் வயிறு கீறி – மணிகளழுத்திய முடியினாலே ஆகாயத்திலுள்ள சந்திரனுடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு, தேர்களெல்லாம் சென்றன – தேர்களெல்லாம் சென்றன. எ – று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிய விலாத தோற்ற நெடும்பொரு ணிலைமை தன்னாற்
பேரிய லுடைய தத்த நகரொடும் பெயர்தல் போலச்
சூரியன் மரபில் வந்த தோன்றலைச் சூழ்ந்து வந்த
ஆரியர் முதல பாடை யரசரு மளப்பி லாரே.

இ - ள்: நேர் இயல் இலாத தோற்ற நெடும்பொருள் நிலைமை தன்னால் (தத்தம் பரிசனங்கள் கொண்டுவருகின்ற) வேறுபாடான தோற்றத்தையுடைய மிக்க பொருள்களின் றன்மையினால், பேர் இயல் உடைய தத்தம் நகரொடும் பெயர்தல் போல — பெருமையின் இயல்பையுடைய தங்கள் தங்கள் நகரங்களோடும் வருதல்போல, சூரியன் மரபில் வந்த தோன்றலைச் சூழ்ந்து வந்த — சூரியவம்மிசத்திற் பிறந்த அயனைச் சூழ்ந்துவந்த, ஆரியம் முதலபாடை அரசரும் அளப்பிலார் — ஆரியம் முதலிய பாஷைகள் வழங்குகின்ற நிலங்களிலுள்ள அரசர்களும் அளவில்லாதவர்கள். எ - று.

நேர் இயல் இல்லாத தோற்றம் — ஒப்பான தன்மை இல்லாத தோற்றம். எனவே வேறுபாடான தோற்றம் என்பது பெற்றாம். ஒவ்வொரு நகரத்துப் பொருள்களும் தத்தம் உருவ பேதத்தினாலே தத்தம் நகரத்தினைக் காண்பித்தனவாதலின் நேரி......போல என்றார். பாடை - ஆகுபெயர். பாடையையுடைய அரசர் என்றல் சிறப்பின்று. (கக)

துன்றிய கால மூன்றுஞ் சூழ்ந்துசெய் செயல்கள் யாவும்
மன்றல்சே ரிறைவற் காற்றும் வண்ணமே மனத்த தாகச்
சென்றுறு பொருள்க ளொன்றுந் தெளிபுலப் படாதியோகத்
தொன்றிய மோனர் போல வுசாக்கைய ரொருங்கு போனார்.

இ - ள்: துன்றிய காலம் மூன்றும் சூழ்ந்துசெய் செயல்கள் யாவும் — நெருங்கிய திரிகாலங்களிலும் நிகழ்வனவற்றை ஆலோசித்துச் செய்யும் செயல்களெல்லாம், மன்றல்சேர் இறைவற்கு ஆற்றும் வண்ணமே மனத்தது ஆக — விவாகத்தை அடையும் அரசனாகிய அயனுக்குச் (செய்ய வேண்டியவற்றை ஆலோசித்துச்) செய்யுஞ் (செயல்களின்) தன்மையாகவே மனத்துட் பொருந்த, சென்று உறு பொருள்கள் ஒன்றும் தெளிபுலப்படாது — (வேறாக) வந்து அடைகின்ற விடயங்களொன்றுந் தெளிந்த தம் அறிவிற் பொருந்தாது, யோகத்து ஒன்றிய மோனர்போல — யோகநிலையிற் பொருந்திய மௌனிகளைப்போல, உசாக்கையர் ஒருங்குபோனார் — மந்திரிமார்களும் ஒருங்குசென்றார்கள். எ - று.

வண்ணமாக என்பதில் ஆக என்பது எஞ்சி நின்றது. யாவும் ஆக ஆக என வினையும். ஆகப்போனார், படாதுபோனார், போலப்போனார் எனத் தனித்தனிமுடிக்க. யோகத்து ஒன்றிய மோனர்போல என்பதற்கு யோகத்தினால் மனமொருப்பட்ட மௌனிகளைப்போல எனப் பொருள்

கொண்டு படாது என்பதை அதனோடு முடிப்பினுமாம். உசாக்கையர் — உசாவுதலுடையோர்.

இயல்வருங் கழுநீர் பற்றி யிடங்கையின் வலங்கை மார்பிற்
றுயல்வருந் தோறு மாலை திருத்துத றொழிலே யாக
மயல்வருங் குழைகள் பொற்ப வாண்முகந் துளங்கி மாரன்
னயல்வரும் பரிசிற் போனா ராடவ ரனேக ரம்மா.

இ - ள்: இடங்கையில் இயல்வரும் கழுநீர் பற்றி — இடங்கையிலே அழகுபொருந்திய செங்கழுநீர்மலரைத் தாங்கி, வலங்கைமார்பில் துயல்வருந்தோறும் மாலை திருத்துதல் தொழிலேயாக — வலக்கையானது மார்பிலே அசையுந்தோறும் (விலகாதபடி)மாலையைத் திருத்துதலே தொழிலாகப் பொருந்த, மயல்வருங் குழைகள் பொற்ப வாள் முகம் துளக்கி — விரும்பப்படுகின்ற குண்டலங்கள் பொலியும்படி ஒளிபொருந்திய முகத்தை அசைத்துக்கொண்டு, அயல் — அரசன் பக்கத்தே, மாரன்வரும் பரிசில் — மன்மதன்வருந் தன்மைபோல, ஆடவர் அனேகர் போனார் — ஆடவர்களனேகர் போனார்கள். எ - று.

அம்மா அசைநிலை. பற்றித் துளக்கிப் போனார் எனவும், ஆகப்போனார் எனவுமுடிக்க. பொற்ப என்னுஞ் செயவெனச்சம் காரியப்பொருட்டு. நிகழ்வுப்பொருட்டாகக்கோடல் இத்துணைச் சிறப்பின்று. இடங்கை வலங்கை என்பன "மெல்லெழுத்துறழு மொழியுமாருளவே — செல்வழியறிதல் வழக்கத்தான" என்னுஞ் சூத்திரவிதிபெற்று வந்தன. ஈண்டு ஆடவர் என்றது விகடம் பேசுபவர் முதலாயினோரைப்போலும்.

நிரம்பினர் நெருக்க லாது விசைபட நிமிர வெற்றும்
பிரம்பின ரழல்பெய் கண்ணர் பேரொலி பிறக்குஞ் சொல்லர்
பரம்பிட ருறுத்த வைத்த வொட்டக முதல பாங்கர்
வரம்பில செம்பொன் மூடை காத்தனர் வளைந்து போனார்.

இ - ள்: நிரம்பினர் நெருக்கலாது விசைபட நிமிர எற்றும்பிரம்பினர் — (கஞ்சுகி மாக்கள் ஆயினோர்) நிறைந்து வந்தவர்களாகிய சனங்கள் (மூடையை) நெருக்காதபடி விசைபொருந்த உயரும்படி ஓங்கி அடிக்கும் பிரம்பினராயும், அழல் பெய் கண்ணர் — நெருப்பைச் சொரிகின்ற கண்களையுடையராயும், பேரொலி பிறக்கும் சொல்லர் — பேரொலியுண்டாகும் சொல்லையுடையராயும், பரம்பிடர் உறுத்த வைத்த ஒட்டகம் முதல பாங்கர் — பாரமானது பிடரை உறுத்தும்படி (செம்பொன்மூடைகளைச்) சுமத்திய ஒட்டகம் முதலியவற்றின் பக்கத்திலே, வரம்பு இலசெம்பொன்மூடை காத்தனர் வளைந்து போனார் — அளவில்லாதனவாய (அந்தச்) சிவந்த பொன்னைப் பொதிந்த மூடைகளைக் காத்துக்கொண்டு அவற்றைச் சூழ்ந்து சென்றார்கள். எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமிர—காரியப்பொருட்டு. பிரம்பினர், கண்ணர், சொல்லர், காத்தனர் என்பன வினையெச்சமுற்றுக்கள். பாகர் வளைந்து போனர், காத்தனர் வளைந்துபோனர் எனத் தனித்தனிமுடிக்க. வரம்பில மூடை என இயையும். (௧௪)

சாலுந்தண் டடத்தை நீத்து விண்ணிடந் தழுவிப் பாரிற்
காலுந்தி விரிந்த செய்ய கமலங்க ளனந்த முண்டேற்
போலுஞ்செங் கவிகை மானும் பொன்னபொற் கமல மேய்க்கும்
பாலவெண் பதும மொக்கும் பசிய பச்சிலையை யன்றே.

இ – ள்: சாலுந் தண் தடத்தை நீத்து – மிகுந்த குளிர்ச்சி பொருந்திய தடாகத்தைவிட்டு, விண் இடம் தழுவி – ஆகாயத்தினிடத்தையடைந்து, பாரில் கால் உந்தி விரிந்த – பூமியிலே நாளத்தைச் செலுத்தி அலர்ந்த, செய்ய கமலங்கள் அனந்தம் உண்டேல் செங்கவிகை போலும் – செந்தாமரை மலர்கள் அளவில்லாதன உண்டாயின் அவற்றைச் செங்குடைகள் ஒக்கும், பொன்ன பொற்கமலம் மானும் – பொன்னாலாகிய குடைகள் (அவ்வாறான) பொற்றாமரைமலர்களை ஒக்கும், பால வெண்பதுமம் ஒக்கும் – வெண்குடைகள் (அவ்வாறான) வெண்டாமரை மலர்களை ஒக்கும், பசிய பச்சிலையை ஒக்கும் – பச்சைக்குடைகள் (அவ்வாறான) பசிய இலைகளை ஒக்கும். எ – று.

அற்புதவுவமை. சாலுந்தண்டடத்தைநீத்துவிண்ணிடந்தழுவிப்பாரிற் காலுந்திவிரிந்த என்பதைப் பொற்கமலம் முதலியவற்றோடும் ஒட்டுக. செய்யகமலம், பொற்கமலம், வெண்கமலம், பச்சிலை என்பன முரண் தோன்ற நின்றன. (௧௫)

திருக்குலாம் கதலி கைக்கா னுழைந்துமேற் சென்ற வானி
தருக்கினு லிடைந்து மீள விறங்கவுந் தகாதிங் கென்னுச்
சுருக்கிலா விரிந்த தோற்றச் சுடர்நெடுங் கவிகைக் கொள்ளை
நெருக்கினு லாற்ற லாது நடுங்கின நின்ற வன்றே.

இ – ள்: திருக்குலாம் கதலிகைக் கான் நுழைந்து மேல் சென்ற வானி – அழகு விளங்குகின்ற சிறுகொடிகளின் கூட்டத்துள் நுழைந்து மேலேசென்ற நெடுங்கொடிகள், சுருக்கு இலா விரிந்த தோற்றச் சுடர் நெடும் கவிகைக் கொள்ளை நெருக்கினுல் தருக்கினுல் இடைந்து – பலவாகப் பரந்ததோற்றத்தையுடைய ஒளிபொருந்திய உயர்ந்த குடைக் கூட்டத்தின் செருக்கத்தினுல் (தங்) கெறுவங்காரணமாக வருத்தமுற்று, இங்கு மீள இறங்கவும் தகாது என்று – இங்கே மீள இறங்கவுங்கூடாதென்று, ஆற்றலாது நடுங்கின நின்ற – அந்நெருக்கை ஆற்றமுடியாது நடுங்கிக்கொண்டு நின்றன. எ – று.

நெருக்கினுல் இடைந்து எனவும், வானி இடைந்து என்னுகின்ற எனவு முடிக்க. விரிதலைக் குடையின்விரிவுக் காக்குதல் இத்துணைச் சிறப்பின்று. நடுங்கல் – அசைதல். தற்குறிப்பேற்றம். (௧௬)

எண்பட்ட தேர்க ளெண்ணிற் கிரண்டுபட் டன திண் யானை
பண்பட்ட புரவி யெண்ணிற் படாதன பதாதி யீட்டங்
கண்பட்ட வளவை கொண்ட கருத்தினுக் கடங்கா வேலை
மண்பட்ட தெனலாஞ் சொல்லில் வாயுளார் தமக்கு மாதோ.

இ – ள்: திண் யானை எண்பட்ட தேர்கள் எண்ணிற்கு இரண்டு பட்டன – திண்ணிய யானைகள் மதிக்கப்பட்ட தேர்களின் அளவிற்கு இருமடங்கு பொருந்தின, பண்பட்ட புரவி எண்ணிற்படாதன – பண்ணுதல் செய்யப்பட்ட குதிரைகள் அளவிற்கு மேற்பட்டன, பதாதி ஈட்டம் கண்பட்ட அளவைகொண்ட – பதாதிக்கூட்டம் கண்ணுக்குத்தோன்றிய அளவாகவுள்ளன, கருத்தினுக்கு அடங்கா – (அன்றி) மனக் கணிப்புக்கு அடங்காதனவாகும், சொல்லில் வாயுளர்தமக்கு வேலை மண்பட்டது எனலாம் – (அளவை ஒருவாறு தொகாது) சொல்லுகில் வாய்ச்சாமர்த்திய முள்ளவர்களால் கடற்கரையிலுள்ள மணல் பொருந்திய அளவு எவ்வளவோ அவ்வளவு என்று சொல்லிமுடிக்கலாம். எ – று.

அடங்கா என்பதை முற்றாக்காது பெயரெச்சமாகக் கொண்டு மண்ணோடுமுடித்துப் பொருள் கூறினுமமையும். அளவைகொண்ட – ஒரு சொல். அளவை – கணக்கு. எனவே கண்ணுல் மதிப்பதன்றி எண்ணி மனத்தாற் கணித்தல் கூடாதென்பதாம். கண்ணுக்குக் காணப்பட்ட அளவையுடையனவே கருத்தினுக்கடங்கா எனினுமாம். வாயுளார்க்கு என்னலாம் என இயைக்க. குவ்வுருபு எதுப்பொருட்கண் வந்தது. (௧௭)

தேரொலி யல்ல தேரிற் றிரண்மணித் திமிலம் வாசித்
தாரொலி யல்ல வாயிற் கனைகுரற் றமரம் யானைப்
பேரொலி யல்ல கண்டை நாதத்திற் பெருக்க மெண்ணி
லோரொலி யல்ல வானோ ரூர்செவி டுறுத்த தெல்லாம்.

இ – ள்: வானோர் ஊர் செவிடு உறுத்தது – தேவரூரைச் செவிடு செய்ததாகியஒலி, தேர்ஒலி அல்ல தேரில் திரள் மணித்திமிலம் – தேரொலியாகும் அல்லாதது (எதுவெனில்) தேரிற்கட்டிய திரண்ட மணிகளினோசையாகும், வாசித் தார் ஒலி அல்ல வாயிற் கனைகுரல் தமரம் – (இன்னுட் எதுவெனில்) குதிரைகளின் கழுத்திற்கட்டிய மணிகளினொலியாகும் அல்லாதது (எதுவெனில்) அவைகள் வாயாற் கனைக்கின்ற குரலொலியாகும், யானைப் பேரொலி அல்ல கண்டை நாதத்தின் பெருக்கம் – (இன்னும் எதுவெனில்) யானைகளின் பெரிய பிளிற்றொலியாகும் அல்

லாதது (எதுவெனில்) அவற்றின் கண்டாமணியி லுண்டாகின்ற ஒலியின் மிகுதியாகும், எண்ணில் ஒரொலி அல்ல எல்லாம் – ஆராயில் (அதனைச் செவிடுபடுத்தியதாகியஒலி) ஒரொலியல்லஎல்லாவொலியுமேயாம். எ – று.

அல்ல என்பனவற்றுள் இறுதியதொழிந்தன துவ்விகுதி கெட்டு நின்றன. ஒலியின் பன்மை நோக்கி அல்ல என்றாரெனினு மமையும். அல்ல என்பதை வாசி முதலியவற்றின் முன்னும் கூட்டிமுடிக்கினு மமையும். இனி உறுத்ததாகிய ஒலி தேரொலி மாத்திரமல்ல தேரிற் பிரண்மணித் திமிலமுமாம் என முடித்துப் பொருள் கூறி ஏனையவடிகளையு மிங்ஙனமே முடித்துப் பொருள் கூறினுமாம். (௧௮)

அல்லுண்ட பகலை யெல்லா மயலுண்ட வார மன்ன
வில்லுண்ட வுரவு வீரர் மிகலுண்ட வேதி யென்றா
லெல்லுண்ட திகிரி வாள கிரிப்புறத் திருளுண் டென்னுஞ்
சொல்லுண்ட தறியுங் காலைத் தொலைவுண்டு சுருங்கு மன்றே.

இ – ள்: அல் உண்ட பகலை எல்லாம் அயல் உண்ட ஆரம் – இருளையுண்ட சூரியனுடைய ஒளிமுழுதையும் பக்கங்களிலே உண்டன முத்துக்கள், அன்ன வில் உண்ட உரவுவீரர் மிகல் உண்ட வேதி – அந்த ஒளியையுண்டன வலிய வீரர்களது மிகுதியான வாட்படைகளினொளி, என்றால் – இப்படியானால், எல் உண்ட திகிரி வாள கிரிபுறத்து இருள் உண்டு என்னும் சொல் உண்டு – ஒளிபொருந்திய சக்கரவாளகிரிக் கப்புறத்து இருள் உண்டு என்னுஞ் சொல் உளது, அஃது அறியும் காலைத் தொலைவுண்டு சுருங்கும் – அவ்விருளும் ஆராயுமிடத்து (இவ்வொளிக்கு) அழிந்து சுருங்கும். எ – று.

அஃது அது என விகாரமாய் நின்றது. என்றால் தொலைவுண்டு சுருங்கும் என இயைக்க. (௧௯)

எய்திடா நின்ற வாசி யினமணிச் சிவிகை யால
மைதொடா நின்ற வேழ மரகதக் கொடிஞ்சித் திண்டேர்
மெய்தொடா விரைந்த வென்னி லடிக்கொரு விலங்க லங்ஙன்
செய்திடா வேகற் குண்டே செல்லுநர் செல்லு மாறே.

இ – ள்: எய்திடா நின்ற வாசி – செல்லுகின்ற குதிரைகளும், இனமணிச் சிவிகை – கூட்டமான இரத்தினங்களையுடைய சிவிகைகளும், ஆலம் மைதொடாநின்ற வேழம் – நீரையுடைய மேகமண்டலத்தைத் தீண்டுகின்ற யானைகளும், மரகதக் கொடிஞ்சித் திண்தேர் – மரகதத்தாலாய கூம்பையுடைய திண்ணிய தேர்களும், மெய்தொடா விரைந்த என்னில் – ஒன்றன்மெய்யை ஒன்று தீண்டாமல் விரைந்து சென்றன என்றாலும், அடிக்கு ஒருவிலங்கல் அங்ஙன் செய்திடாது எகற்கு உண்டே – அடிக்கொருதடையை அங்கே செய்யாமற் செல்லுதற்குக்கூடுமோ. எ – று.

ஒகாரம் எதிர்மறை. செய்தே சென்றன என்பதாம். முற்பட்டன அடிஎடுத்து வைத்தபின்புதான் பிற்பட்டன அடிஎடுத்து வைக்கவேண்டும்; அவ்வளவும் தடைப்பட்டு நிற்கும் என்பதாம். என்னிலும் என்பதிலுள்ள உம்மை தொக்குநின்றது. உம்மை அதுவுங் கூடாதென்பது தோன்ற நின்றது. (௨௦)

முற்பட்டா ரடியு மொய்ம்பு முரிநெருக் கஞ்சி நொய்திற்
பிற்பட்டார் பதமு நோக்கிப் பிடிப்பது கொள்ள லல்லாற்
சொற்பட்டார் நிற்ற லென்று சொல்லுவ தன்றி யுண்டே
யெற்பட்டா ரணிகொ டானை யிடைப்பட்டா ரியங்க லேனே.

இ – ள்: முற்பட்டார் அடியும் – முன்னே பொருந்திச் செல்லுகின்றவர்களுடைய பாதங்களையும், மொய்ம்பு முரி நெருக்கு அஞ்சி நொய்தில் பிற்பட்டார் பதமும் நோக்கிப் பிடிப்பது கொள்ளல் அல்லால் – புயங்களின் வலிமை அழிதற்குக் காரணமாகிய நெருக்கிற்குப்பயந்து விரைவிலே பின்னேபொருந்திச் செல்கின்றவர்களுடைய அடிகளையும் பார்த்துச் செல்வதை நிச்சயித்தறிவதேயன்றி, சொற்பட்டார் – இயங்குகின்றாரோ நிற்கின்றாரோ என்று ஆராய்ந்து சொல்லுதலைப் பொருந்தினோர், எல்பட்டு ஆர் அணிகொள் தானை இடைப்பட்டார் இயங்கல் – ஒளிபொருந்தி நிறைந்த ஆபரணங்களைக்கொண்ட சேனைகளினிடையே பொருந்திச் செல்பவர்களுடைய செல்லுதலை, நிற்றல் என்று சொல்லுவது அன்றி உண்டே – நிற்றல் என்று சொல்லுவதேயன்றி செல்லுதல் என்று அறிந்து சொல்லுவதும் உண்டா? (இன்று). எ - று.

வினா இன்மை குறித்து நின்றது. அல்லால் உண்டே எனமுடிக்க. அன்றி இடைப்பிறவரல். முன்னே போகின்றவர்களுடைய அடிப்பெயர்ப்பானும், பின்னே போகின்றவர்களுடைய அடிப்பெயர்பானும் இவர்கள் செல்லுகின்றார்கள் என்று அறிவதேயன்றி, அயனுடைய சேனையின்கண்ணே செல்லுகின்றவர்களை இவர்கள் நிற்கின்றார்கள் என்று சொல்லுவதேயன்றிச் செல்லுகின்றார்கள் என்று சொல்லுதல் கூடாதென்பது இதன் கருத்து. (௨௧)

அழுந்தவா மதிபோய்ச் சால வளப்பதற் காய்ந்து தாழ
விழுந்தவா மென்னின் முற்றுங் கட்புலம் விரித்து நோக்கித்
தழுந்தவா வலிகொள் சேனை தனித்தனி பிரிக்க லாதங்
கெழுந்தவ றெளிதி னாமோ வெம்மனோ ரியம்பு மாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ-ள்: அழுந்து அவா மதிபோய் அளப்பதற்கு ஆய்ந்து தாழ விழுந்த என்னில் — அழுந்திய ஆசையையுடைய அறிவானது சென்று அளவிடும்பொருட்டு மிகவுமாராய்ந்து (முடியாது) மிகவு மாழ்வுற விழுந்தது என்றால், தழும் தவா வலிகொள் சேனை முற்றும் — தழுவிய தவருத வலியைக்கொண்ட சேனைகள் முழுவதையும், கட்புலம் விரித்து நோக்கி — கட்புலத்தைப் பரப்பிப் பார்த்து, தனித்தனி பிரிக்கலாது எழுந்தவாறு — தனித்தனி பிரித்து எண்ணுது (மனத்தின்கண்) எழுந்தபடி, எம்மனோர் இயம்புமாறு எளிதின் ஆமோ — எம்மையொத்தோர்கள் சொல்லுந்தன்மை எளிதின் முடியுமோ? (முடியாது என்றபடி.) எ — று.

ஓகாரம் எதிர்மறை. விழுந்தது என்பதில் துவ்விகுதியும், தழும் என்பதில் வகர உகரமும் தொக்குநின்றன. ஆம் — சாரியை. என்னின் ஆமோ எனவும், நோக்கி இயம்புமாறு ஆமோ எனவுந் தனித்தனிமுடிக்க. நோக்கிஎன்பதைப் பிரிக்கலாது என்பதன் முதனிலையோடு முடித்துப் பொருள் கொள்வாருமுளர். (௨௨)

வேறு.

எல்லு லாந்தகை யின்மணிப் பூணினன்
மல்லன் மாமணங் காண்பதொர் மாதராற்
செல்லு லாமதித் திண்கவி கைக்கழை
வில்லி சேனை யெழுந்து மிடைந்ததே.

இ-ள்: எல் உலாம் தகை இன் மணிப்பூணினன் மல்லன் மாமணம் — ஒளிபரந்த தகையினையுடைய இனிய இரத்தினுபரணங்களையுடையவனுகிய அஜனது பொலிவமைந்த பெருமை பொருந்திய விவாகத்தை, காண்பது மாதரால் — காணவேண்டுவதாகிய ஆசையினுல், செல் உலாம் மதித்திண்கவிகை — செல்லுதல்பொருந்திய சந்திரனுகிய திண்ணிய குடையையும், கழை வில்லிசேனை எழுந்து மிடைந்தது — கருப்பம்வில்லையுமுடைய மன்மதனுடைய சேனைகள் எழுந்து நெருங்கின. எ — று.

ஓர் — அசை. கழைவில்லி — கருப்புவில்லையுடையவன். அவன்சேனை பெண்கள். (௨௩)

துற்று மாமணிக் கச்சுடைத் தூமுலை
வெற்றி வேழமு மேதகு நாண்மலர்க்
கற்றை வார்குழற் காமரு கங்குலாங்
கொற்ற வேழமுங் கொண்டு நடந்ததே.

இ-ள்: துற்றும் மாமணிக் கச்சு உடைத் தூமுலை வெற்றி வேழமும் — நெருங்கிய பெரிய இரத்தினக் கச்சையுடைய சுத்தமாகிய முலைகளாகிய வெற்றிபொருந்திய யானையையும், மேதகு நாள்மலர்க் கற்றை வார்குழல் காமரு கங்குலாம் கொற்றவேழமும் — மேன்மைபொருந்திய

புதிய மலரையணிந்த கற்றையான நீண்ட கூந்தலாகிய விரும்புகின்ற இருளென்னும் வெற்றிபொருந்திய யானையையும், கொண்டு நடந்தது — கொண்டு (அச்சேனை) சென்றது. எ — று.

கற்றை — தொகுதி. எழுவாய் அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. குழற் காமரு கங்குலாம் கொற்றவேழம் என்பது உருவகவுருவகம். ஆசிரியர் கழைவில்லிசேனை என்றதற்கேற்ப வேழமெனக் கூறியதூஉம், அதனை வெற்றிவேழம், கொற்றவேழம் எனச் சொற்சித்திரந்தோன்ற வைத்ததூஉம் வியக்கப்படத்தக்கனவென்க. (௨௪)

மண்ணு மெல்லிதழ் வார்கன கக்குழைத்
தண்ண வில்லொடு சார்பழி யஞ்சிய
வெண்ண மில்ல விரும்புரு வக்கழை
வண்ண வில்லும் வளைக்குபு சென்றதே.

இ-ள்: மண்ணும் மெல் இதழ் வார் கனகக்குழைத் தண்ண வில்லொடு — (அச்சேனை) செய்யப்பட்ட மெல்லிய ஓலையோடணிந்த நீண்ட பொன்னுலாகிய குழையினது குளிர்ச்சிபொருந்திய வில்லோடு, சார் பழி அஞ்சிய எண்ணம் இல்ல இரும் புருவக் கழைவண்ண வில்லும் — (தன்னிடத்தே) அடைகின்ற பழிக்கு அஞ்சிய எண்ணம் இல்லாத பெரிய புருவமாகிய அழகிய கருப்புவில்லையும், வளைக்குபு சென்றது — வளைத்துச் சென்றது. எ — று.

மண்ணும் என்பதற்கு ஒப்பமிட்ட எனினுமாம். முன்னைவில் ஒளி. ஆசிரியர் இங்கும் சேனை என்றதற்கேற்ப வில்லென்றதூஉம், அதனைத் தண்ணவில் வண்ணவில் எனச் சொற்சித்திரந்தோன்ற வைத்ததூஉம் வியக்கப்படத்தக்கவென்க. (௨௫)

மாலை வம்பு கமழ்ந்தெழு வண்குயக்
கோல வம்பொடு கூற்றுங் குலைந்திடச்
சால வெம்புந் தவத்தரை வென்றகண்
ணீல வம்புந் திருத்தி நிமிர்ந்ததே.

இ-ள்: மாலை வம்பு கமழ்ந்து எழு வண்குயக் கோலவம்பொடு — (அச்சேனை) மாலையின் மணங்கமழ்ந்தெழுகின்ற அழகிய முலையிலணிந்த அழகியவம்போடு, கூற்றும் குலைந்திடச் சாலவெம்பும் தவத்தரை வென்ற கண் நீல அம்பும் — இயமனும் மனம் குலைவுறும்படி மிகவும் விரும்பப்படும் தவத்தையுடையாரையும் வென்ற கண்ணுகிய கரிய அம்பையும், திருத்தி நிமிர்ந்தது — திருத்திச் சென்றது. எ — று.

84689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பு – கச்சு. அஃது இங்கே கண்ணழிக்கும் வகையானே அம்பு எனவுந் தோன்றுமாறு கோலவம்புஎன விசேடணத்தோடு புணர்க்கப்பட்டது. குலைந்திட என்னுஞ் செயவெனெச்சத்தை, திருத்தி என்னும் வினையோடு முடிக்குக. திருத்துதல் செவ்விதாக்கல். உம்மை எச்சம். கூற்றமும் மனங்குலைய இரு அம்பையும் திருத்திச் சென்றன என்றபடி. ஆசிரியர் இங்கும் கழைவில்லிசேனை என்றதற்கியைய அம்பு என்றதூஉம் அதனைக் கோலவம்பு, நீலவம்பு எனச் சொற்சித்திரந் தோன்ற வைத்ததூஉம் வியக்கப்படத்தக்கன என்க.

கள்ளு லாவுங் கடிமலர்த் தார்ப்பொலி
கொள்ளை மாவுங் குரைகடற் றோன்றிய
தெள்ளு மாரமு தச்செழுந் தேமொழிக்
கிள்ளை மாவுந் தொடுவிரை கின்றவே.

இ - ள் : கள் உலாவும் கடிமலர்த் தார்ப்பொலி கொள்ளை மாவும் – (அச்சேனை) தேன்பரந்த வாசனைபொருந்திய மலர்களாலாகிய மாலையிற் பொலிகின்ற கூட்டமான மாவையும், குரைகடல் தோன்றிய தெள்ளும் ஆர் அமுதச் செழும் தேம் மொழிக் கிள்ளை மாவும் கொடு – ஒலிக்கின்ற கடலிற்றோன்றிய அரிய அமுதம்போலும் செழிய இனிய மொழியென்னும் கிள்ளையாகிய மாவையும் கொண்டு, விரைகின்றது – விரைந்து செல்கின்றது. எ - று.

முன்னைய மா – வண்டு. இது சொல்லளவில் குதிரையெனவுந் தோன்றநின்றது. பின்னைய மா - குதிரை. ஆசிரியர் இங்கும் சேனை என்றதற்கியைய மா என்றதும், அதனை, கொள்ளைமா, கிள்ளைமா எனச் சொற்சித்திரம்தோன்றவைத்ததூஉம் வியக்கப்படத்தக்கனவென்க. (௨௭)

நொய்தி லாதெழு நோன்படை யோடுதன்
செய்தி யேதரு சின்னமும் போதர
வெய்து றுவிள வேனிற் றலைவன்வே
றெய்து மேயுட னேகின னென்பதே.

இ - ள் : தன் நொய்து இலாது எழு நோன்படையோடு – தனது மெலிவின்றி எழுந்த வலிய சேனையோடு, தன் செய்தியேதரு சின்னமும் போதர – தனது செயல்களையே எடுத்து இசைக்கின்ற (மொழியென்னுங் குயிலாகிய) வெற்றிச் சின்னமும் போக, வெய்து உறு இள வேனில் தலைவன் வேறு எய்துமே – வெப்பத்தைத் தராத இளவேனிற் பருவத்துக்குத் தலைவனாகிய மன்மதன் தான் வேறாகச் செல்லுவானோ?, உடன் ஏகினன் – தானும் அவர்களோடு கூடச் சென்றான். எ - று.

என்ப, ஏ அசைகள். வினா எய்தாமை தோன்ற நின்றது. செயல் – வென்றியானசெயல்கள். தன் என்பது தாப்பிசையாக முன்னும் பின்னும் சென்றியைந்தது. விரதிகளையும் வெல்லத்தக்கபடை என்பார் நோன்படை என்றார். (௨௮)

வம்பு லாவு மராட்டத்து மாப்பல
பம்பு சேனை யிதனொடும் பைபையக்
கம்பு சேணின் றொலிப்பக் கலந்துட
னம்பி சேனையு நன்னர் நடந்தவே.

இ - ள் : வம்பு உலாவு மராட்டத்து மாப் பல பம்பு சேனை இதனொடும் – வாசனைபரந்த கூந்தலின்கண் வண்டுகள் பல ஒலிக்கின்ற (கழைவில்லி) சேனையாகிய இதனோடும், கம்பு சேண் நின்று ஒலிப்ப – சங்குகள் (தம் ஒலி) தூரத்திலே நிலைபெறுமாறு ஒலிப்ப, நம்பி சேனையும் கலந்து உடன் பை பைய நன்னர் நடந்த – அயனுடைய சேனையும் கலந்து ஒருங்கே மெல்ல மெல்ல நன்கு சென்றன. எ – று.

சேனையிதனொடும் நம்பிசேனையும் கலந்து உடன் பை பைய நடந்த என இயைக்க. ஒலிப்ப என்னுஞ் செயவெனெச்சம் நடந்த என்னும் வினைமுற்றோடு முடியும். இதன் முதலடி யிரண்டும் புதுமைபொருந்திய மராட்டதேசத்துக் குதிரைகள் பலவாகிய பரந்த சேனையாகிய இதனோடும் என்பதுந் தோன்ற நின்றன. (௨௯)

வேறு.

நன்னடைப்பி டிக்குலங்க ணவ்வியங்க ணாரையே
வென்னிடைப்ப ரித்தல்செய்து மெல்லமெல்ல வேகின
சொன்னடைப்ப தம்வருந்தி டாச்சுமப்ப தன்றியே
சென்னடைக்கு டைந்தபோது பின்னையென்கொல் செய்வதே.

இ - ள் : பிடிக்குலங்கள் – பிடிக்கூட்டங்கள், நவ்வியங்கண்ணாரை வென்னிடைப் பரித்தல் செய்து – மான்போலும் கண்களையுடையவர்களாகிய மகளிரை முதுகிற்றாங்கி, நல் நடை மெல்லமெல்ல ஏகின – நல்ல வழியில் மெல்லமெல்லச் சென்றன, செல் நடைக்கு உடைந்தபோது – (அவர்களுடைய) செல்லுகின்ற நடைக்குத் தோற்ற பொழுது, சொல் நடைப்பதம் வருந்திடாச் சுமப்பது அன்றி – சொல்லுகின்ற நடையினாற் கால்கள் வருந்திச் சுமப்பதல்லாமல், செய்வது பின்னை என் – செய்யக்கிடந்தது வேறு யாது? எ – று.

வினா இன்மைதோன்ற நின்றது. வென்றாரைத் தோற்றார் சுமப்பதியல்பாதலின் சுமப்பதன்றிப் பின்னை யென்கொல் செய்வதென்றார். ஏதுத்தற்குறிப்பு. (௩௦)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவுநல்லெ ழிற்கொடேப டைக்கணார்கண் மேவிய
விரவுவேலர் தம்மொடும்வி ளங்குவார்க ளாயினு
மிரவைவெல்லி யற்பசும்பொ னிட்டிழைத்த தட்டினு
லரவவல்கு லுக்குடைந்த தேருமன்ன வாமரோ.

இ - ள்: பரவு நல் எழில் கொடு – துதிக்கப்படும் நல்ல அழகைக் கொண்டு, படைக்கணார்கள் விரவு வேலர் தம்மொடும் மேவி விளங்குவார் களாயினும் – படைபோலுங் கண்களையுடைய பெண்கள் நெருங்கிய வேலையுடையவர்களாகிய வீரர்களோடும் (தன்னிடத்தே) இருந்து விளங்குவார்களானும், இரவை வெல் இயல் பசும்பொன் இழைத்த தட்டினால் அரவ அல்குலுக்கு உடைந்த தேரும் – இராக்காலத்தை வெல்லுகின்ற வியல்பையுடைய பசியபொன்னை அழுத்திச்செய்த தட்டினால் பாம்பின் படம்போன்ற அல்குலுக்குத் தோற்ற தேர்களும், அன்ன – அத் தன்மையன. எ - று.

அன்ன என்றது சுமந்து சென்றமையை. படைக்கணார்களும் வேலரும் தன்னிடத்தே விளங்குவார்களாயினும் தேர் அல்குலுக்குத் தோற்றதென்பார். பரவுநல் லெழிற் கொடேப டைக்கணார்கண் மேவிய – விரவு வேலர் தம்மொடும்வி ளங்குவார்க ளாயினும்... ...அல்குலுக்குடைந்த தேரும் என்றார். விளங்குவார்களாயினும் உடைந்ததேர் என இயைக்க. உடைந்த தேர் என்றது சுமத்தலுக்குக் காரணங்கூறியவாறு. ஆம், அரோ அசைகள். இதுவுமேலையணி. (௩௧)

வல்லியற்று ரங்கமேகு கிற்பதும்ம னங்கொளா
ரெல்லியற்பொன் மாதர்மீதி ருப்பதும்மு ணர்ந்திடா
வல்லியற்க துப்பினரு மாவுமாத லாற்பரி
செல்லுகிற்ப தோபொனார்தி றத்தையோதெ ரிப்பதே.

இ - ள்: அல் இயல் கதுப்பினரும் – இருள்போன்ற கூந்தலையுடையவர்களாகிய பெண்களும், வல் இயல் துரங்கம் ஏகுகிற்பதும் மனங்கொளார் – வலிய நடையையுடைய குதிரை செல்லுவதையுஞ் சிந்தியார், மாவும் – குதிரையும், எல் இயல் பொன் மாதர் மீது இருப்பதும் உணர்ந்திடா – ஒளியின் இயல்பையுடைய இலக்குமிபோன்ற மகளிர்கள் இருத்தலையும் அறியமாட்டா, ஆதலால் – ஆகையினால், பரி செல்லுகிற்பதோ – குதிரை செல்லுதலையோ, பொனார் திறத்தையோ – இலக்குமி போன்ற மகளிர்களுடைய அஞ்சாதிருக்கும் இயல்பையோ, தெரிப்பது – யாம் விதந்துகூறுவது. எ – று.

பெண்களும் குதிரைகளின் விரைவுக்கு அஞ்சாதிருக்கின்றார்கள்; குதிரைகளும் பெண்கள் தம்மீதிருப்பதைச் செலவின் எண்ணத்தால்

மறந்துவிட்டன என்பார் பரி செல்லுகிற்பதோ பொனார்திறத்தையோ தெரிப்பதோ என்றார். செல்லுகிற்பதையோ என்பதில் ஐயுருபு விகாரத்தாற் றொக்கது. உம்மைகள் எச்சத்தோடு சிறப்பு. (௩௨)

குலப்பொன்னாரை யேயெடுத்தல் செய்தும்விற்கு லங்கொடா
ணிலத்துறாது சிற்சிலர்நி ரந்துதாங்க வேகலா
னலத்தியானம் யாவுமுற்ற வண்ணநண்ணு மோபடித்
தலத்தியாதி னுஞ்சிறந்த தகைபடைத்த சிவிகையே.

இ – ள்: குலப் பொன்னாரையே எடுத்தல் செய்தும் – உயர்ந்த பொன்போலும் மகளிரையே தாங்கியும், வில்குலம் கொள்தாள் – ஒளிக் கூட்டத்தைக் கொண்ட (தன்) கால்கள், நிலத்து உறாது – நிலத்திற் பொருந்தாமல், சிற்சிலர் நிரந்து தாங்க ஏகலால் – சிற்சிலர் நிறைந்து தாங்கச் செல்லுதலால், சிவிகை படித்தலத்து யாதினுஞ் சிறந்த தகை படைத்த – சிவிகை பூமியிலே எவற்றினுஞ் சிறந்த மேன்மையைப் படைத்தன, நலத்து யானம் யாவும் உற்றவண்ணம் நண்ணுமோ – (அங்ஙனமின்றி அது) அழகையுடைய மற்றைய வாகனங்களெல்லாம் பொருந்திய பொதுவியல்பைத் தானும் பொருந்துமோ? (பொருந்தாது என்றபடி.) எ – று.

உம்மை சிறப்பு. ஓகாரம் எதிர்மறை. எடுத்தல் செய்தும் ஏகலால் படைத்த என இயையும். ஏகலாலென்பதை நண்ணுமோ என்பதன் எதிர்மறையோடு முடிப்பாருமுளர். தான் பிறரைச் சுமப்பது கால்கள் நிலத்திற் பொருந்தச் செல்வதன்றிப் பொருந்தாமற் செல்லல் முடியாது. இது அங்ஙனஞ் சென்றதென்பார் பொன்னாரையே யெடுத்தல் செய்தும் ஏகலால் என்றும், தன் சிறப்பிற்கேதுவாகத் தான் வேறாகிய சிறப்பியல்பைப் பொருந்துமென்பார் உற்றவண்ணம் நண்ணுமோவென்றுங் கூறினார். ஒருவரைச் சுமந்துசெல்வதைப் பின்னொருவர் சுமப்பதின்று. இது அங்ஙனமின்றிப் பிறர் சுமக்கச் சென்றதென்பார் எடுத்துந் தாங்க ஏகலால் என்றாரெனினுமாம். வேறு இயல்பு சிறப்பாக மதிக்கப்படுமியல்பு. இனித், "தாங்க ஏகின" எனப் பாடங்கொள்வாருமுளர். இப்பொருட்கு உற்றவண்ணம் நண்ணுமோ என்பதற்கு, (அவை) சென்றவண்ணஞ் செல்லுமோ என்பது பொருள். (௩௩)

கொம்பனார லத்தகங்கு ழைத்திடாவி டிற்படி
வெம்புபாத வைப்பினுக்கு மென்மைசெய்வ தெங்ஙனே
யும்பர்வேள ரார்கள்மார்பு குத்தமாலை யாறெலா
மம்பொன்மாலை யல்லவாகி லாரமாலை யாகுமே.

இ – ள்: ஆறு எல்லாம் – வழியெல்லாம், (கிடப்பன) உம்பர் வேளனார்கள் மார்பு உகுத்தமாலை (ஆகும்) – மேலுலகத்துள்ள மன்மதனை யொத்தவர்களாகிய ஆடவர்களது மார்பு சொரிந்த மாலைகளாகும், (அல்ல

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசில்) அம்பொன் மாலை (யாகும்) – அவைகளல்லவாயின் அழகிய பொன்னரிமாலைகளாகும், அல்லவாகில் ஆரமாலை ஆகும் – அவைகளல்லவாயின் முத்துமாலைகளாகும், கொம்பனார் அலத்தம் குழைத்து இடாவிடின் – (இங்ஙனமாகப்) பூங்கொம்புபோன்றவர்களாகிய மகளிர் செம்பஞ்சுக்குழம்பைக் குழைத்து ஊட்டாதொழிந்தால், படி – பூமியானது, வெம்பு பாத வைப்பினுக்கு மென்மை செய்வது எங்ஙன் – (கடத்தலால்) வெதும்புகின்ற பாதங்களின் மிதிப்பிற்கு மென்மையைச் செய்வதெப்படி? எ – று.

இடாவிடில் இம்மாலைகள் உறுத்துமென்பதாம். எங்ஙனம் என்பது இன்மை குறித்து நின்றது. (௫௪)

நிறையுமுள்ள வேகயானை நீலமேக மென்னலா
யறையுமுள்ள மல்லவென் றயிர்க்குமோம ருப்பிணைப்
பிறையுமுள்ள மதமழைப்பி றப்புமுள்ள வோடைமின்
முறையுமுள்ள வுலகமஞ்சு முதிர்முழக்கு முள்ளவே.

இ – ள்: நிறையும் உள்ள வேக யானை – நிறைந்த மனோவேகத்தையுடைய யானைகளை, நீல மேகம் என்னலாய் அறையும் உள்ளம் அல்ல என்று அயிர்க்குமோ – நீலமேகங்களென்று சொல்லுகின்ற மனம் (அவை) அல்லவென்று சந்தேகிக்குமோ? சந்தேகிக்கமாட்டாது. என்னையெனின்,) மருப்பு இணைப் பிறையும் உள்ள – (அதன்கண்) இருகோடுகளாகிய பிறைகளுமுள்ளன, மழைப்பிறப்பும் உள்ள – மதமாகிய மழைத்தோற்றமுமுள்ளன, ஓடை மின் முறையும் உள்ள – ஓடையாகிய மின்னின் முறைமையுமுள்ளன, உலகம் அஞ்சும் முதிர் முழக்கும் உள்ள – உலகமஞ்சுகின்ற முதிர்ந்த முழக்கமுமுள்ளன. எ – று.

ஓ எதிர்மறை. பிறைமுதலிய விருத்தலால் அயிர்க்காதென்றபடி. மருப்பிணைப்பிறைமுதலிய எதுவால் யானை மேகமாதல் சாதிக்கப்பட்டது. எதுவோடுகூடிய மயக்கவணி. பன்மைகுறித்து உள்ள என்றார்; அவ்விகுதி தொக்கதுமாம். (௫௫)

தென்னிரந்த தேரைமேரு வென்றுசெப்ப லன்றியே
முன்னியங்க லொன்றுகொண்டு மல்லவென்ன முடியுமோ
பொன்னிலங்கு முடியனந்த முறும்விசும்பு புகுமரா
நன்னிலந்தொ டும்வரத்தி னாரிருக்கை மருவுமே.

இ – ள்: தென் நிரந்த தேரை மேரு என்று செப்பல் அன்றி – அழகு பொருந்திய தேரை மேருமலை என்று சொல்லுதலேயன்றி, முன்னியங்கல் ஒன்றுகொண்டு அல்ல என்ன முடியுமோ – முன்னரே செல்லுதலாகிய ஒன்றினால் (அஃது) அல்ல என்று சொல்லமுடியுமோ? (முடியாது என்றபடி. என்னையெனில்,) பொன் இயங்கு முடியனந்தம் உறும் – (அத்தேர்) பொன்னாலாகிய விளங்குகின்ற முடிகள் பலவற்றையும் பொருந்தும், விசும்புபுகும் – ஆகாயத்தில் உயர்ந்திருக்கும், அரா நிலம் தொடும் – (உருளையினால்) பாதலத்தைத் தீண்டும், வரத்தினார் இருக்கை மருவும் – மேலோராகியவரசரிருத்தலைப் பொருந்தும். எ – று.

ஓ எதிர்மறை. முடியனந்தமுறன் முதலிய எதுவால் தேர் மேருவாதல் சாதிக்கப்பட்டது. இதுவேற்றுமையோடும் எதுவோடுங் கூடிய மயக்கவணி. (௫௬)

சினத்தியங்கு மாருதச்செ றிப்பினிற்சி றக்குமா
வனைத்தையுந்தெ ரித்ததல்ல வென்னிலல்ல வாகுமோ
கனத்துறுந்து கட்கிளைத்த கல்லெனக்க லித்தமா
மனத்தையுந்த ணித்தசெல்க திக்கண்மெய்ம்ம றைந்தவே.

இ – ள்: சினத்து இயங்கு மாருதச் செறிப்பினில் சிறக்கும் மா அனைத்தையும் – கோபத்தோடு செல்லுகின்ற காற்றின் வேகத்திலும் சிறந்த குதிரைகளனைத்தையும், தெரித்து – காற்றென்று இருட்டாந்தத்தோடு காண்பித்து, அஃது அல்ல என்னில் அல்ல ஆகுமோ – அஃதல்லவென்றால் அல்லனவாகுமோ? (ஆகாதென்றபடி. என்னையெனில்,) கனத்து உறும் துகள் கிளைத்த – (அவைகள்) மிக்கெழுகின்ற துகளை உண்டாக்கின, கல்லெனக் கலித்த – கல்லென்று ஒலித்தன, மா மனத்தையும் தணித்த – பெரிய மனத்தையும் தணியச்செய்தன, செல் கதிக்கண் மெய் மறைந்த – செல்லுகின்ற கதிக்கண் மெய் மறையப்பெற்றன. எ – று.

ஓகாரம் எதிர்மறை. துகட்கிளைத்தன் முதலிய எதுவால் குதிரை காற்றாதல் சாதிக்கப்பட்டது. எதுவோடுகூடிய மயக்கவணி. (௫௭)

தகைத்திறத்த மன்னவர்த யங்குபால சாமரை
திகைக்கணின்றி ரட்டன்மாத ரார்முகங்கள் செவ்வியே
யுகைக்குலைந்த மதியிறங்கி யுருகிமெய்நெ டுத்துரு
மிகைப்படைத்தி ரண்டுபாலும் வெப்பின்வீழ்த லொக்குமே.

இ – ள்: தகைத் திறத்த மன்னவர் தயங்கு பால சாமரை – மேன்மைத் தன்மையையுடைய அரசர்களுடைய விளங்குகின்ற இருபக்கத்திலுமுள்ள சாமரைகள், திகைக்கணின்று இரட்டல் – திக்குகளிலே நின்று இரட்டுதல், மாதரார் முகங்கள் செவ்வி எயுகைக்கு உலைந்த மதி – பெண்களது முகங்களிற் பொருந்திய அழகை ஒத்தற்கு முடியாது உலைந்த சந்திரன், இறங்கி உருகி மெய் நெடுத்து – (ஆகாயத்தைவிட்டு) இறங்கி உருகி வடிவு நீண்டு, உரு மிகப்படைத்து – வடிவைப் பலவாகக்கொண்டு, இரண்டு பாலும் வெப்பின் வீழ்தல் ஒக்கும் – (அவ்வரசர்களுடைய) இருபக்கத்திலும் மனவெப்பினோடு வீழ்தலை நிகர்க்கும், எ – று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டல் ஒக்கும் என இயைக்க. பால என்பதற்குப் பால்போன்ற சாமரை என்றல் சிறப்பின்று. சாமரைகள் பலவாதலின் உரு மிகப் படைத்து என்றார். தற்குறிப்பேற்றமென்னு மலங்காரம். (௩அ)

முப்பெருந்தி றத்துமூரி முரசுமும்ம தம்பொழி
செப்பருந்தி றற்கராச லத்துவென்றெ ழிப்பன
வெப்பெருங்கு லத்தமேக மும்விசும்பி றங்கியே
யுப்பருந்தி வெற்பிருந்தொ ருமுழங்க லொக்குமால்.

இ – ள்: முத்திறத்து பெரும் மூரி முரசும் – மூவகையான பெரியவலிமைபொருந்திய முரசுகளும், மும்மதம்பொழி செப்பு அருந்திறல் காரசலத்து வென் தெழிப்பன – மும்மதத்தைச் சொரிகின்ற சொல்லுதற்கரிய வலிமையைக் கொண்ட யானையின் முதுகிலே (கிடந்து) ஒலித்தல், எப் பெரும் குலத்த மேகமும் – எந்தப் பெரிய கூட்டமான மேகங்களும், விசும்பு இறங்கி – ஆகாயத்தினின்று மிறங்கி, உப்பு அருந்தி – கடனீரை யுண்டு, வெற்பு இருந்து ஒரு முழங்கல் ஒக்கும் – (மீண்டு வந்து) மலையின் மேலிருந்து குறைவின்றி முழங்கலை ஒக்கும். எ – று.

தெழிப்பன ஒக்கும் எனமுடிக்க. மும்முரசாவன :— மணமுரசு, கொடைமுரசு, வெற்றிமுரசு என்பன. மும்மதமாவன கைம்மதம், கோசமதம், கன்னமதம் என்பன. (௩௯)

பரியமால் களிற்றின்மே லெடுத்தபச்சை யின்னொடே
கரியசெய்ய வெளியவொண் படத்தமைத்த கதலிகை
யுரியமேக தனுவிலங்க லுச்சிமேலொர் காலதாய்ப்
பெரியகூனி மிர்ந்துருப்பி றிந்துநின்ற தொக்குமே.

இ – ள்: பரிய மால் களிற்றின்மேல் எடுத்த – பருத்த பெரிய யானையின்மேல் உயர்த்திய, பச்சையினொடு கரிய செய்ய வெளிய ஒண் படத்து அமைத்த கதலிகை – பச்சைப் புடைவையினாலும் கரிய புடைவையினாலும் சிவப்புப் புடைவையினாலும் வெள்ளைப் புடைவையினாலும் செய்த கொடிகள், உரிய மேக தனு – பொருந்திய வான வில்லு, விலங்கல் உச்சிமேல் ஓர் காலதாய்ப் பெரிய கூன் நிமிர்ந்து உருப் பிறிந்து நின்றது ஒக்கும் – மலையின் உச்சியின்மேல் ஓர் காலையுடையதாய்ப் பெரிய தனது வளைவு நிமிரப்பெற்று வடிவு (வேறுவேறாகப்) பிரிவுற்று நின்ற தன்மையை ஒக்கும். எ – று.

எடுத்த கதலிகை ஒக்கும் எனமுடிக்க. உருப் பிறிந்து நின்றதொக்கும் என்றது பல நிறம்பற்றி. படத்தைப் பச்சை என்பதோடும், கரிய செய்ய வெளிய என்பவைகளை படத்தோடு தனித்தனியுங் கூட்டி முடிக்க. இது அற்புதவுவமை. (௪0)

நற்படைக்க டைக்கணவ்வி யன்னசெவ்வி நங்கைமா
ரெற்பரித்தி லங்குசிங்க வேறெனச்செல் வேலவர்
கற்பகத்தை யொக்கிலொப்பர் காமவல்லி கான்மத
வெற்பையொக்கி லொப்பர்மென் பிடிக்குலத்தை மீளவே.

இ – ள்: நல் படைக் கடைக்கண் நவ்வி அன்ன செவ்வி நங்கைமார் – நல்ல படைபோன்ற கடைக்கண்ணையுடைய மானையொத்த இளமைப்பருவத்தைக்கொண்ட மகளிர், எல் பரித்து இலங்கு சிங்க ஏறு எனச் செல் வேலவர் கற்பகத்தை ஒக்கில் – ஒளியைத் தாங்கி விளங்குகின்ற சிங்கவேற்றைப்போலச் செல்லுகின்ற வேலையேந்தியவர்களாகிய வீரர்கள் கற்பகமரங்களை யொத்தால், காமவல்லி ஒப்பர் – (தாம்) காமவல்லியை யொப்பார்கள், கால் மத வெற்பை ஒக்கில் மீள மென் பிடிக்குலத்தை ஒப்பர் – அவர்கள் காலுகின்ற மதத்தையுடைய மலைபோலும் யானையை ஒப்பார்களாயின் (தாங்கள்) மீண்டு மெல்லிய பிடிக்கூட்டத்தை ஒப்பார்கள். எ – று.

ஆடவர்களுக்குப் பெண்கள் ஒத்தவியல்புடையவர்கள் என்றபடி. கடைக்கண் முன்மொழி நிலையல்; மதிநுட்பம் என்பதுபோல. கான்மத வெற்பு என்பதற்கு கானிற்றோன்றிய யானை எனினுமாம். கான் – காடு.

அனந்தவேளு லப்பில்பொன் னளப்பில்கற்ப கத்தொடை
புனைந்தமாலொ ரார்றணிந்து போவதுள்ள தாவதேல்
வனைந்தமாலை யிளைஞர்மாதர் மன்னரார்தி றத்துநேர்
நினைந்துகூற லாகுமல்ல வென்னினேரு மில்லையே.

இ – ள்: அனந்தவேள் – அளவில்லாத மன்மதர்களும், உலப்பு இல் பொன் – அளவில்லாத இலக்குமிகளும், அளப்பு இல் கற்பகத் தொடை புனைந்த மால் – அளவில்லாத கற்பகமாலையையணிந்த மால்களும், ஓர் ஆறு அணிந்துபோவது உள்ளதாவதேல் – ஓர் வழியில் அணிகொண்டு செல்வது உள்ளதாகுமேல் (அவர்களை,) வனைந்த மாலை இளைஞர் – அணிந்த மாலையையுடைய ஆடவர்களும், மாதரார் – பெண்களும், மன்னரார் திறத்து – அரசர்களுமாகிய இவர் பக்கத்து, நேர் நினைந்து கூறல் ஆகும் – ஒப்பாகக் கருதிச் சொல்லுதல் கூடும், அல்ல எனில் நேரும் இல்லை – (அங்ஙனம் அணிந்துபோவது) உள்ளதல்ல என்றால் (அவர்கள்) ஒப்பாதலும் இல்லை. எ – று.

மால் விட்டுணு. உள்ளதாவதேல் ஆகும் என முடிக்க. நிரனிறை.

வேலைசெய்த மும்மதச்சே ருக்கினோடி வேழநீள்
சோலைசெய்த கானெலாந் துகட்படத் துகைத்தன
மாலைசெய்த போதுவாய் மலர்ந்துநின்ற வேழிலைம்
பாலைசெய்த வஞ்சமென்கொல் பன்னிநின்று பகர்வதே.

84689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ — ள்: வேழம் — யானைகள், வேலை செய்த மும்மதச் செருக்கின் ஓடி — கடற்பெருக்கை உண்டாக்கிய மும்மதத்தாலாய களிப்பினோடும் ஓடிப்போய், நீள் சோலை செய்த கானெலாம் துகள்படத் துகைத்தன — நெடிய சோலையாகப்பொருந்திய காடெல்லாம் துகளாகும்படி (அவற்றை) உழக்கின, மாலைசெய்த போது வாய் மலர்ந்து நின்ற — மாலைக்காலத்திலே பூவின்முகம் மலர்ந்துநின்ற, ஏழிலம் பாலை செய்த வஞ்சம் பன்னிநின்று பகர்வது என் — ஏழிலம் பாலைப்பூச் செய்த வஞ்சனையைச் சொல்லிநின்று விதப்பது என்னை? எ — று.

ஏழிலம்பாலைப்பூ மதநாற்றத்தை வீசுதலின் தம் பகை உளதுபோலும் என்று கருதி யானைகள் காடுமுழுதும் உழக்கிய என்பார் இவ்வாறு கூறினர். இங்ஙனமே "பாத்துயானையின் பதங்களிற் படுமதநாறக் — காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித்தோடிப் — பூத்தவேழிலைப் பாலையைப் பொடிப்பொடியாக்கிக் — காத்திரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு" என்று பிறரும் கூறுதல் காண்க. (௪௩)

சேறணிந்த குங்குமத்த னத்தெறிந்து சேறலா
னீறணிந்த சுண்ணமேநி லம்புனைந்து போகுவார்
வீறணிந்த மெல்லிழைப்ப ரம்பொறுது வீழ்த்துநீ
ளாறணிந்து மெல்லவேய னத்தினங்கொ துங்குவார்.

இ — ள்: குங்குமச் சேறு அணிந்த தனத்து எறிந்து சேறலால் — குங்குமக்குழம்பையணிந்த முலைகளின்கண் எறிந்து செல்லுதலால், நீறு அணிந்த சுண்ணம் நிலம் புனைந்து போகுவார் — துகளான சுண்ணங்களை நிலத்தில் அலங்கரித்துச் செல்வார்கள், (சிலர்), வீறு அணிந்த மெல் இழைப்பரம் பொறாது வீழ்த்து — பெருமையையணிந்த மெல்லிய ஆபரணத்தின் பாரத்தைத் தாங்க முடியாது (கீழே) வீழ்த்தி, நீள் ஆறு அணிந்து மெல்ல அன்னத்தின் அங்கு ஒதுங்குவார் — நெடிய வழியை அலங்கரித்து மெல்லவாக அன்னத்தைப்போல அங்கே செல்வார்கள் (சிலர்.) எ — று.

சிலர் மகளிரின் முலைகளில் எறியும் பொற்சுண்ணங்களால் வழியை அலங்கரித்துச் செல்வார்கள்; சிலர் ஆபரணங்களை வீழ்த்தி அவ்வழியை அலங்கரித்துச் செல்வார்கள் என்பது இதன் கருத்து. ஒதுங்கல் — நடத்தல். இதனை; "செந்தளி ரொதுங்கமிளிர் சீறடி யொதுங்கி" எனப் பிறர் கூறுமாற்றானுமறிக. (௪௪)

குசைவலம்வ லித்துமற்றை யிடமுறக்கு றுக்கியும்
திசைமுகந்தி ரித்துமாவு கைத்தொர்காளை செல்வன
விசைதருஞ்சொன் மாதராரி ருங்கணம்பி ரண்டுபால்
விசைபடும்வி னைத்தொழிற்கு விலகியேகல் போலுமே.

இ — ள். குசை வலம் வலித்தும் — கடிவாளத்தை வலப்பக்கத்தே இழுத்தும், மற்றை இடமுறக் குறுக்கியும் — மற்றை இடப்பக்கமாகக் குறுக்கியும், திசைமுகம் திரித்துமா உதைத்து ஓர் காளைசெல்வன — (தான் செல்லவேண்டிய) திக்கினிடத்தே திருப்பிக் குதிரையைச் செலுத்திக்கொண்டு ஒரு ஆடவன் செல்லுதல், இசைதரும் சொல் மாதரார் இருங்கண் அம்பு — பண்ணை ஒத்த சொல்லையுடைய பெண்களது பெரிய கண்களாகிய அம்புகள், இரண்டு பால் விசைபடும் வினைத்தொழிற்கு விலகி ஏகல் போலும் — இருபக்கங்களாலும் விசையாக வந்துபடுகின்ற போர்த்தொழிற்கு விலகிச் செல்லுதலைப் போலும். எ — று.

செல்வன போலும் எனமுடிக்க. வலித்தும் குறுக்கியும் திரித்து உதைத்துச் செல்வன என வினையெச்சங்களை முடிக்க. (௪௫)

விடையினிற்செல் வாடொராட வன்விளங்கு மன்னமென்
னடையினிற்செல் வாளொர்மங்கை நாமநண்ணி வினவலுந்
தொடையினிற்கு ழற்கழற்றி யெறியவிற்றொ டைக்கைவேள்
படையினிற்ப னிப்புறுப தைத்துளம்வெ தும்பினான்.

இ — ள்: விடையினின் செல்வான் ஒரு ஆடவன் — (நடையினால்) இடபம்போலச் செல்பவனாகிய ஒரு ஆடவன், விளங்கும் அன்னம் மென்னடையினின் செல்வாள் ஓர் மங்கை நாமம் நண்ணி வினவலும் — விளங்குகின்ற அன்னத்தினது நடைபோன்ற மெல்லிய நடையோடு செல்பவளாகிய ஒரு மகளினது பெயரை அடைந்து கேட்டவளவில், குழல் கழற்றித் தொடையினின் எறிய — (அவள்) தன் கூந்தலினின்றுங் கழற்றி மாலையினால் (அவன்மேல்) எறிய, வில் தொடைக்கை வேள் படையினில் பனிப்பு உறா — வில்லையும பாணத்தையும் ஏந்திய கையையுடைய மன்மதனது பாணத்தினால் நடுங்கி, பதைத்து உளம் வெதும்பினான் — பதைத்து மனம் வெதும்பினான். எ — று.

அவள் மாலை தன்மேனியில் தீண்டுதலால் ஆசைமிக்கு வருந்தினான் என்றபடி. (௪௬)

வேறு.

சேய செங்கைச் செழுங்குழன் மாதர்கண்
மேய வோரிரு நோக்கம் விளைத்தலர்
லேய வன்புட னேகுவ மீளுவ
வாய வவ்வழி யாடவ ராவியே.

இ — ள். சேய செங்கைச் செழும் குழல் மாதர்கண் — சிவந்தகையையுஞ் செழிய கூந்தலையுமுடைய மகளிரது கண்களானவை, மேய

ஓரிரு நோக்கம் விளைத்தலால் - பொருந்திய இருவகைப் பார்வையையுஞ் செய்தலால், அவ்வழி-அவ்விடத்து, ஆடவர் ஆவி - ஆடவருடைய ஆன்மா, ஏய அன்புடன் ஏகுவ மீளுவ ஆய - பொருந்திய அன்போடு செல்லுவனவும் மீளுவனவுமாயின எ - று.

செம்மை - வாளாமொழி. இருநோக்கு - நோய்நோக்கும் சிறப்பு நோக்கும். நோய்செய்தலால் ஏகுவனவும், அன்புசெய்தலால் மீளுவனவுமாயின என்க. "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு - நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" என்றார் பிறரும். (௪௭)

முன்செல் வாள்குழன் முன்னர் வலித்திடப்
பின்செல் வாள்விழி பின்னரி னீர்த்திட
மின்செய் வேற்கையொ ராடவன் வேறுபின்
னென்செய் வானடு நின்றிட ரெய்தினான்.

இ-ள்: முன் செல்வாள்குழல் முன்னர் வலித்திட - (தனக்கு) முன்செல்பவளது கூந்தலானது (தன்னை) முன்னே பிடித்திழுப்பவும், - பின் செல்வாழ் விழி பின்னரின் ஈர்த்திட - பின்னே செல்பவளது கண்கள் பின்னே தன்னைப் பிடித்திழுக்கவும், மின்செய் வேல் கை ஒரு ஆடவன் வேறு பின் என்செய்வான் - மின்னலைச் செய்கின்ற வேலையேந்திய கையையுடைய ஓராடவன் பின் வேறு யாது செய்வான், நடு நின்று இடர் எய்தினான் - (அவ்விருவர்க்கும்) நடுவே நின்று வருத்தமுற்றான். எ - று.

பகையை வெல்லவல்ல வீரனாயினும் குழலுங் கண்ணுமாகிய இவற்றிற்குத் தோற்று மெலிவுற்று வருந்தினான் என்பார் வேற்கையொராடவனென்றும், இருவரிழுக்கும்பொழுது நடுவே நின்று வருந்துதலன்றிப் பிறிதொன்றுஞ் செய்தல் கூடாதென்பார் வேறு பின்னென்செய்வான் என்றுங் கூறினார். வலித்திடவும், ஈர்த்திடவும் நின்று இடர் எய்தினான் என முடிக்க. (௪௮)

எஞ்ச லின்றியொ ரேந்திழை தன்மனந்
துஞ்ச மற்றொரு தோகையை யுள்ளினா
னெஞ்சி டம்பெற லின்மையி னிட்டிரன்
கஞ்ச னென்றொரு காளை வெதும்பினான்.

இ-ள்: ஒரு காளை - ஒரு ஆடவன், எஞ்சல் இன்றி ஓர் ஏந்திழை தன்மனம் துஞ்ச - நீங்காது ஓர் பெண் தன் மனத்திற் கிடப்பவும் - மற்று ஒரு தோகையை உள்ளினான் - மற்றொரு பெண்ணைத் தன் மனத்தில் நினைத்தான், நெஞ்சு இடம் பெறல் இன்மையின் கஞ்சன்

நிட்டூரன் என்று வெதும்பினான் - அப்படி நினைத்தற்கு மனம் இடம் பெறாமையினாலே பிரமன் கொடியவனென்று மனம் வெதும்பினான். எ - று.

மற்று - பிறிது என்னும் பொருளில் வந்தது. இடம் பெறக்கூடிய இருமனத்தைத் தனக்குச் சிருட்டியாமையினாலே பிரமனை நிட்டூரன் என்றான் என்க. (௪௯)

மெய்யு மெல்லனிச் சம்முலை வெற்பிடை
தொய்யு மென்றதர் தொய்ந்தவோர் கோதையை
கையி னாலெடுத் தற்கொரு காளையென்
செய்து மென்று திகைத்துநின் றேங்கினான்.

இ-ள்: மெய்யும் மெல் அனிச்சம் - (இவள்) தேகமும் மென்மையான அனிச்சப்பூ, முலை வெற்பு - முலைகளும் மலை, இடை தொய்யும் என்று - (இவளை யான் பற்றில்) இடையும் ஒசியும் என்று, அதர் தொய்ந்த ஓர் கோதையை - வழியில் (நடையால்) இளைப்புற்ற ஓர் பெண்ணை, கையினால் எடுத்தற்கு - கையினாலே அவளைத் தூக்குதற்கு, ஓர் காளை என் செய்தும் என்று திகைத்து நின்று ஏங்கினான் - ஒரு ஆடவன் என்செய்வேம் என்று திகைப்புற்று நின்று ஏக்கமடைந்தான் எ - று.

உம்மை எச்சம். மெய் மென்மையாயிருத்தலால் தீண்டலுங் கூடாது; முலை மலையாயிருத்தலாற் சுமத்தலுங் கூடாது; இடை முரிந்துபோகுந் தன்மையை யுடையதாயிருத்தலாற் பற்றுதலுங் கூடாது என்று கருதித் திகைத்தான் என்பார் இங்ஙனங் கூறினார். முலை வெற்பு ஆதலால் இடை முரியும் என்றல் இத்துணைச் சிறப்பின்று. (௫௦)

தங்கொர் மாதுதன் கேளொரு தையலை
நங்கை யிந்நெறி நன்னெறி யென்றலு
மங்க ணென்னினைந் தாள்கொல்க ணம்பினாற்,
கொங்கை யானை தனைக்குளிப் பாட்டினாள்.

இ-ள்: தங்கு ஓர் மாது - (பக்கத்தே) பொருந்திய ஒரு பெண்ணானவள், தன் கேள் ஒரு தையலை நங்கை இந்நெறி நன்னெறி என்றலும் - தன்னுடைய'கன் ஒருபெண்ணை (நோக்கி) பெண்ணே! இவ்வழி நீ செல்லுதற்கு நல்லவழி என்று சொல்லுதலும், அங்கண் என் நினைந்தாள் கொல் கண் அம்பினால் கொங்கை யானை தனைக் குளிப்பாட்டினாள் - அங்கே அவள் என்ன நினைத்தாளோ அதனை யாம் அறியேம்; தனது கண்ணீரினாலே முலையாகிய யானையைக் குளிப்பாட்டினாள்; (எனவே கண்ணீர் சொரிந்தாள் என்றபடி.) எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாது குளிப்பாட்டினுள் என இயைக்க. அவள்மேற் காதலுடைய னுய்க் கூறினுன் என்று கருதிக் குளிப்பாட்டினுள் என்க. (௫௧)

தொள்ளைப் பேருணர் வோடுமோர் தோன்றரு
னள்ளற் ருமரை யான முகத்தினீர்
கள்ளத் தாமிரு கண்வழிச் சென்றுநும்
முள்ளத் தாமென் னுயிர்சுக மோவென்ருன்.

இ-ள்: தொள்ளைப் பேருணர்வோடும் - உள்ளீடற்றதாகிய பெரிய அறிவோடும், ஓர் தோன்றல் - ஒரு ஆடவன், அள்ளல் தாமரை ஆன முகத்தினீர் - சேற்றிற்ருேன்றிய தாமரைபோன்ற முகத்தையுடையீர், கள்ளத்து ஆம் இருகண் வழிச்சென்று - கள்ளத்தோடு பொருந்திய இருகண்களின் வழியே சென்று, நும் உள்ளத்து ஆம் என் உயிர் சுகமோ என்ருன் - உமது மனத்திற் பொருந்திய எனது உயிர் சுகமாக இருக்கின்றதோ என்ருன். எ-று.

உணர்வோடும் என்ருன் என இயைக்க. நும்பார்வையோடும் எம் முயிரைக்கவர்ந்து கொண்டுசென்றீர்என்பான் இங்ஙனங் கூறினுன். (௫௨)

விண்பு தைத்தயல் வெம்மத வேழமொன்
றெண்பு தைத்து வரத்தனி யென்செய்வாள்
பண்பு தைத்தவொர் சொல்லிதன் பங்கயக்
கண்பு தைத்துக் கடும்பய நீக்கினுள்.

இ-ள்: பண் புதைத்த ஓர் சொல்லி - தன் இனிமையாற் பண்ணினினிமையைமறைத்த சொல்லையுடைய வொருபெண்ணுனவள், விண்புதைத்து அயல் வெம்மத வேழம் ஒன்று எண்புதைத்து வர - ஆகாயத்தை மறைத்துக்கொண்டு பக்கத்தே வெவ்விய மதத்தையுடைய யானையொன்று (தன்) அறிவைக் கெடுத்து வர, தனி என் செய்வாள் - ஒருத்தி என்ன செய்வாள், தன் கண் புதைத்துக் கடும் பயம் நீக்கினுள் - தனது தாமரைமலர்போலும் கண்களைப் புதைத்துத் தன் மிக்க பயத்தை நீக்கினுள். எ-று.

அச்சமான பொருள்களைக் கண்டவிடத்து மகளிர் கண்புதைத்த லியல்பாதலின் இங்ஙனம் கூறினுர். (௫௩)

வண்ண யானை வரக்களி றென்றுபோர்
பண்ண வாகம் பதைப்பொடு பாங்கினோர்
தண்ண மாதைத் தழீஇயவ டன்முலை
யண்ணல் யானையு மத்தனை யாகுமே.

இ-ள்: வண்ண யானை வர - அழகிய யானையொன்று வர, களிறு ஒன்று போர் பண்ண - (அதனேடு) வேறு களிறென்று எதிர்த்துப் போர்செய்ய, ஆகம் பதைப்பொடு - (அதனுல்) மனம் பதைத்தலோடு, தன் பாங்கின் ஓர் தண்ண மாதைத் தழீஇயவள் தன்முலை அண்ணல் யானையும் அத்தனை ஆகும் - தன் பக்கத்தில் நின்ற ஓர் அன்பையுடைய ஓர் பெண்ணைத் தழுவியவளது முலையாகிய பெருமைபொருந்திய யானையும் அவ்வளவினதாகிய போரையுடையதாகும். எ-று.

அவ்வளவு போரினை இதுவுஞ் செய்த தென்பார் அத்தனையாகுமென்ருர். எனவே அச்சமிகுதியால் இறுகத் தழுவிக்கொண்டாள் என்பது பெறப்பட்டது. பண்ணத் தழீஇயவள் என இயைக்க. (௫௪)

கஞ்சத் தாளையன் ஞளையோர் காளையென்
னெஞ்சக் கோயிலுண் மேவிய நீர்நெடுந்
தஞ்சத் தாமயற் ருடிறந் தேபுறம்
வஞ்சத் தேகிய மாயமென் னேவென்ருன்.

இ-ள்: ஓர் காளை - ஒரு ஆடவன், கஞ்சத்தாளை அன்னுளை - இலக்குமியையொத்தவளாகிய ஒரு பெண்ணை, என் நெஞ்சக் கோயிலிலுண்மேவிய நீர் - எனது மனக்கோயிலுள்ளே பொருந்தியிருந்த நீர், நெடும் தஞ்சத்து ஆம் மயல் தாள் திறந்து - நெடிய தஞ்சமாகப் பொருந்திய மயக்கமாகிய தாளைத்திறந்து, புறம் - புறத்தே, வஞ்சத்து ஏகிய மாயம் என்னே என்ருன் - வஞ்சனையோடு சென்ற மாயம் என்னே என்ருன். எ-று.

மயக்கம் மனத்துள் வைத்துக்கொண்டிருந்ததாதலின் மயல்தாள் என்றும், அவ்வாறு அம்மயக்கம் வைத்துக்கொண்டிருந்தமையாற்ருன் நான் உயிரோடிருந்தேன் என்பான் தஞ்சத்தாம் மயல் என்றும் கூறினுன். (௫௫)

தேனு லாமலர் சிந்துமச் சேணெறி
போன போன விடந்தொறும் பொங்கிய
நான நீரெறி நன்னதி யுங்கொலை
யானை மாமத வாழியு மாயதே.

இ-ள்: தேன் உலாம் மலர் சிந்தும் அச் சேண் நெறி - வண்டுகள் சஞ்சரிக்கின்ற மலர்கள் சிதறிக்கிடக்கின்ற அந்தத் தூரமான வழி, போன போன இடந்தொறும் - சென்ற சென்ற இடந்தோறும், பொங்கிய நான நீர் எறி நல் நதியும் - கிளருகின்ற மிருகமதத்தோடு கூடிய பனிநீரை வீசுதலாலுண்டான நல்ல ஆறும், கொலை யானை மாமத ஆழியும் ஆயது - கொலைத்தொழிலையுடைய யானையின் பெரிய மதத்தாலாய கடலுமாகியது. எ-று.

அடுக்குப்பன்மைபற்றி வந்தது. தொறும் இடப்பன்மை குறித்து நின்ற இடைச்சொல். எறிநதி வினைத்தொகை. நெறி ஆயது என முடிக்க. இடந்தொறும் இடைப்பிறவரல். (௫௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாழ்பொதி யத்திற் பிறந்திடு
மந்தக் கால்வர வைகிய வந்நெறி
கந்தக் காவுறை கண்மலர்க் குப்பையுஞ்
சந்தச் சேறுந் தழீஇய கிடந்ததே.

இ – ள்: அந்தத் தாழ் பொதியத்தில் பிறந்திடும் மந்தக் கால் வர வைகிய அந்நெறி – அந்த அடிவாரத்தையுடைய பொதியமலையிற் பிறந்த தென்றல் வர (அதனைப் பொருந்திக் கிடந்த) அவ்வழியானது, கந்தக்கா உறை கள் மலர்க் குப்பையும் – வாசனையையுடைய சோலையிற் பொருந்திய தேனையுடைய மலர்க்குவியலையும், சந்தச் சேறும் தழீஇய கிடந்தது – சந்தனக்குழம்பையும் தழுவியதாய்க் கிடந்தது. எ – று.

நெறி குப்பையும் சேற்றையுந் தழுவிக் கிடந்தது என இயைக்க. தழீஇயது என்பதில் துவ்விகுதி கெட்டுநின்றது. ஆடவரும் மகளிரும் செல்லுதலால் இவ்வாறு கிடந்தது என்க. செல்வோர் இளைப்பை நீக்கக் கூடிய வழி என்பார் மந்தக் கால்வர வைகிய அந்நெறி என்றார். (௫௭)

மெத்தும் பூமரக் கானிழன் மிக்கதாய்ச்
சித்தம் வவ்விக் கிடந்தவச் செந்நெறி
வித்த வெய்யிலி னோடும்வெண் ணித்திலப்
புத்த வெண்ணில வோடும் பொலிந்ததே.

இ – ள்: மெத்தும் பூமரக் கான் நிழல் மிக்கதாய் – மிகுதியான பூமரக் காட்டின் நிழல் மிகப்பெற்றதாய், சித்தம் வவ்விக்கிடந்த அச் செந்நெறி – செல்வோர் மனத்தைத் (தன்பாற்) கவர்ந்துகிடந்த அந்தச் செவ்விதானவழி, வித்தவெய்யிலினோடும் – பொன்னினின்றுந் தோன்றிய வெய்யிலினோடும், வெண் நித்திலப் புத்த வெண்ணிலவோடும் பொலிந்தது – வெண்மையாகிய முத்தினின்றும் தோன்றிய புதிய வெள்ளிய நிலவோடும் பொலிவுற்றது. எ – று.

நெறி வெய்யிலினோடும் நிலவோடும் பொலிந்தது என இயைக்க. (௫௮)

வேறு.

நிறுத்தலில் சீதள நிரப்பித் தென்றல்வந்
திறுத்தலி னந்நெறி யெங்கு மங்கைமார்
வெறுத்தலில் குங்குமச் சேற்றை மேதகப்
பொறுத்தலிற் புதுமணம் பொருந்திற் றென்பவே.

இ – ள்: இறுத்தல் இல் சீதளம் நிரப்பித் தென்றல் வந்து இறுத்தலின் – தடுத்தலில்லாத குளிர்ச்சியை நிறைவித்துத் தென்றல் வந்து தங்குதலாலும், மங்கைமார் வெறுத்தல் இல் குங்குமச் சேற்றை மேதகப் பொறுத்தலில் – பெண்கள் வெறுக்கப்படாத குங்குமக்குழம்பை மேன்மையுற அணிதலாலும், அந் நெறி எங்கும் புதுமணம் பொருந்திற்று – அவ்வழி எங்கும் புதியமணம் உண்டாயது. எ – று.

இறுத்தலினாலும் பொறுத்தலினாலும் பொருந்திற்று என இயைக்க. இனி, "வெறுத்தலிற் குங்குமச் சேற்றை" எனப் பாடங் கொண்டு, தென்றல் வருதலால் குங்குமச்சேற்றை மகளிர் வெறுத்தலால் அச்சேற்றை வழிகள் பொறுத்தலால் புதுமணம் பொருந்திற்று எனப் பொருள்கூறித், தென்றல் சீதளம் நிரம்பலால் வெப்பத்தை உண்டாக்க அதனோடு குங்குமக்குழம்பும் அதிகம் வெப்பத்தை உண்டாக்கலின் அதனை மகளிர் வெறுத்துநீக்க அதனை வழிகள் தாங்கலால், புதுமணம் பொருந்திற்று என்பது கருத்தாகக் கொள்வாருமுளர். (௫௯)

தூநெறி தழுவுவெண் டூளி சூழ்ந்தெழ
நானெறி தருந்திறற் படைந டத்தலால்
வானெறி யெங்கணு மண்ணிற் றோன்றிடக்
கானெறி யெங்கணுங் கடலி னின்றதே.

இ – ள்: தூ நெறி தழுவு வெண் தூளி சூழ்ந்து எழ – சுத்தமாகிய இயல்பினைக் கொண்ட வெண்மையாகிய துகள்கள் சூழ்ந்து எழும்ப, நால் நெறி தரும் திறல் படை நடத்தலால் – நால்வகையைக் கொண்ட வலிமைபொருந்திய சேனைகள் செல்லுதலால், வான் நெறி எங்கணும் மண்ணில் தோன்றிட – ஆகாயவழி எங்கும் பூமியைப் போலத் தோன்ற, கான் நெறி எங்கணும் கடலின் நின்றது – காட்டின்கணுள்ள வழியெங்கும் கடல்போல் நிலைபெற்றது. எ – று.

சேனைகள் பரந்து செல்லுதலாற் கடல்போலக் காணப்பட்டது என்பார் கடலினின்றதே என்றார். (௬௦)

கவிகையிற் கவரியிற் கதலி கைக்குழாங்
குவிகையிற் றாளவெண் கோவை கொண்டுமா
ரவிகையிற் போதையுங் குவிக்கு மீங்கதிர்ச்
சிவிகையிற் பொலிந்தது செல்லு மாறரோ.

இ – ள்: கவிகையின் – குடையினாலும், கவரியின் – சாமரைகளினாலும், கதலிகைக் குழாம் குவிகையின் – கொடிக்கூட்டம் குவிதலாலும், வெண் தாளக் கோவைகொண்டு மா ரவிகையிற் போதையும் குவிக்

கும் – வெண்மையாகிய முத்துக்கோவையினால் பெரிய சூரியனுடைய கையிலுள்ள தாமரைப்பூவையுங் குவிக்கின்ற, சீர் கதிர் சிவிகையில் – குளிர்ந்த கிரணங்களையுடைய சிவிகையினாலும், செல்லும் ஆறு பொலிந்தது – செல்லுகின்ற வழியானது பொலிவடைந்தது. எ – று.

குவிதல் – கூடுதல். (௬௧)

பெருங்குடை யாதப மறைப்பப் பேதையர்
கருங்குழ லிருளினைக் காட்ட மன்னவர்
நெருங்குபொன் மவுலியி னிறைந்த செம்மணி
யருங்கதி ருதயமே யல்ல தில்லையே.

இ – ள்: பெருங்குடை ஆதபம் மறைப்ப – பெரியகுடை வெய்யிலை மறைத்தலால், பேதையர் கருங்குழல் இருளினைக் காட்ட – பெண்களது கரிய கூந்தல் இருளைக் காண்பிக்க, மன்னவர் நெருங்கு பொன் மவுலியின் நிறைந்த செம்மணி அரும் கதிர் உதயமே அல்லது இல்லை – (அவ்விருளை நீக்குதற்கு) அரசர்களது நெருங்கிய பொன்னாலாகிய முடிகளில் நிறைந்துள்ள மாணிக்கமாகிய அரிய சூரியனுடைய தோற்றமே யன்றி வேறு இல்லை. எ – று.

மறைப்பைக் காட்ட இல்லை எனமுடிக்க. காட்ட நிகழ்வுப் பொருட்டு. இனி மறைப்பக் காட்ட உதயமென்று சொல்வதேயன்றி வேறொன்றல் இல்லை எனினுமாம். (௬௨)

நெறியெழுந் துகளினாற் றமது நீணிறம்
பிறிதுறு பதாகையஞ் சேனை பெட்புறச்
சிறியபுன் கதனிடைத் தென்றல் சீகர
மெறியுநன் மதைநதிக் கரையி னெய்தினான்.

இ – ள்: நெறி எழும் துகளினால் – வழியில் எழுகின்ற தூளியினால், தமது நீள் நிறம் பிறிதுறு பதாகை சேனை பெட்புற – தமது மிக்க நிறம் வேறுபட்ட கொடிகளையுடைய சேனைகள் விரும்பும்படி, சிறிய புன்கதனிடைத் தென்றல் சீகரம் எறியும் – சிறிய புன்கமரங்களினிடத்தே தென்றல் நீர்த்துளிகளை வீசுகின்ற, நன்மதை நதிக்கரையின் எய்தினான் – நருமதையாற்றங்கரையை (ச்சென்று) அடைந்தான். எ – று.

துகளினால் பிறிதுறு பதாகை என இயைக்க. வழியிளைப்பை நீக்கத்தக்க கரை என்பதுபோதர, சிறிய புன்கதனிடைத் தென்றல் சீகரமெறியும் நன்மதைநதிக்கரை என்பப்பட்டது. முதனூலினும், "ச நர்மதா ரோதசி சீகரார்த்ரை: மருத்பிராநர்த்தித நக்தமாலே – நிவேசயாமாச விலங்கிதாத்வா" எனக் கூறப்பட்டிருக்கின்றது.

வயற்கரும் புறழ்தரு மழலை யின்சொலார்
கயற்கரும் புனைவிழிக் குறியைக் கண்ணுறா
வியற்கரும் புடைமல ரியங்கு சேக்கைமேற்
செயற்கரும் புதுப்பட மாடஞ் செய்ஞ்ஞரும்.

இ – ள்: வயல் கரும்பு உறழ்தரும் மழலை இன் சொல்லார் கயல் கரும் புனைவிழிக் குறியைக் கண்ணுறா – வயற்கண் வளரும் கரும்பு போன்ற மழலையாகிய இனிய சொல்லையுடைய மகளிரது கயல்போன்ற கரிய மையையணிந்த கண்களின் புணர்ச்சிக்குறிப்பைக் கண்டு, இயற்கு அரும்பு உடை மலர் இயங்கு சேக்கைமேல் – இயலோடு அரும்புகள் விரிந்த மலரால் செய்த சயனத்தின்மேல், செயற்கு அரும் புதுப்பட மாடம் செய்ஞ்ஞரும் – செய்தற்கரிய புதிய படத்தாலாகிய வீட்டைச் செய்கின்றாரும். எ – று.

இயல் – முறை. பெண்களது குறிப்பு நோக்கையறிந்து புணர்தற்பொருட்டு சயனங்களின்மேல் மறைவின்பொருட்டுப் படாம்வீட்டை அமைத்தார் என்பார், இன்சொலாற் கரும் புனைவிழிக் குறியைக் கண்ணுறா...புதுப்படமாடஞ் செய்ஞ்ஞருமென்றார். இது முதலிய பன்னிரு செய்யுட்களும் ஒருதொடர். (௬௩)

சன்னுவிட் டெழுநதி தழைத்த தாண்மலர்
மன்னுவிட் டுவினுர மருவு மாதைநேர்
மின்னுவிட் டிடையவர் விளங்கு மென்குழற்
பின்னுவிட் டணிமலர் மாரி பெய்ஞ்ஞரும்.

இ – ள்: சன்னு விட்டு எழு நதி தழைத்த தாள் மலர் மன்னு – சன்னு முனிவரால் விடப்பட்டு எழுந்த நதியாகிய கங்கை தோன்றிய பாததாமரைகளைப் பொருந்திய, விண்டுவின் உரம் மருவு மாதை நேர் – விட்டுணுவின் மார்பிற்பொருந்திய இலக்குமியை யொத்த, மின்னு இட்டு இடையவர் விளங்கும் மென்குழல் பின்னுவிட்டு – மின்போலும் நுணுகிய இடையை யுடையவர்களாகிய மகளிரது மெல்லிய குழலின் பின்னலைக் குலைத்து, அணிமலர் மாரி பெய்ஞ்ஞரும் – அணிந்த மலர்களை மழை போலச் சொரிகின்றாரும். எ – று.

நடந்து இளைத்தவர்க்குக் குழலின்மேலணிந்த பூக்கள் பாரமாகலின் அவற்றை நீக்கினார் என்பார் பின்னுவிட்டணிமலர் மாரிபெய்ஞ்ஞரும் என்றார். (௬௪)

திறங்கிடை யன்னவா யவர்சென் னேரினுய்
திறங்கிடை யாவிடை யோடுஞ் செல்லலாய்ப்

84689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறங்கிடை யாயபொற் பெரிய பூண்கவர்ந்
தூறங்கிடை யொருவகை யுய்ய வுய்ஞ்ஞரும்.

இ – ள்: நிறம் கிடை அன்ன வாயவர் – நிறமானது செங்கிடையை யொத்த வாயையுடையவர்களாகிய மகளிர், செல் நேரில் உய்திறம் கிடையா இடையோடும் செல்லல் ஆப் – செல்லுகின்ற வழியில் உய்கின்ற தன்மை கிடையாத இடையோடும் துன்பப்பட்டு பிறங்கு இடை ஆய பொன் பெரிய பூண் கவர்ந்து – விளங்குகின்ற இடையிற் பொருந்திய பொன்னுலாகிய பெரிய ஆபரணங்களைக் கவர்ந்து, உறங்கு இடை ஒருவகை உய்ய உய்ஞ்ஞரும் – சோர்வடைந்த அந்த இடையானது ஒருவாறு உய்ய உய்கின்றாரும். எ – று.

வாயவர் ஆய்க்கவர்ந்து உய்ஞ்ஞரும் என இயைக்க. (௧௬)

கன்றலஞ் சுவதலான் மருங்கு காலிணை
யொன்றலங் கணிப்பினென் றொதுங்கி யொண்கணார்
மின்றலம் படிந்தெனப் படஞ்செய் வேவியுண்
மன்றலம் பூவணை வதிதல் செய்ஞ்ஞரும்.

இ – ள்: கணிப்பின் – மதிக்குமிடத்து, கால் இணை கன்றல் அஞ்சுவது அல்லால் – இருகால்களும் கன்றுதலை அஞ்சுவதன்றி, மருங்கு ஒன்றலம் என்று ஒதுங்கி – பக்கத்தே வைக்கப் பெறேம் என்று சென்று, ஒண் கண்ணார் – ஒள்ளிய கண்களையுடைய மகளிர், மின் தலம் படிந்தென – மின்னல் பூமியிற் படிந்தாற்போல, படம் செய் வேவியுள் – படத்தாற் செய்த வீட்டினுள்ளே, மன்றல் அம் பூவணை வதிதல் செய்ஞ்ஞரும் – வாசனைபொருந்திய பூஞ்சயனத்தில் இருக்கின்றாரும்.

படிந்தால் என்பது படிந்து என விகாரமாய் நின்றது. படிந்தென வதிதல்செய்ஞ்ஞரும் என இயைக்க. வதிதல்செய்ஞ்ஞரும் என்பது ஒரு சொல். (௧௭)

முன்றெரி யற்குரு முலைமு கம்பொதி
குன்றெரி யர்க்கனேர் குலப்பொற் றார்கொளாச்
சென்றெரி யற்பிறழ்ந் தென்னச் செண்பக
மென்றெரி யற்றொகை மேகம் வேய்ஞரும்.

இ – ள்: முன் தெரியற்கு உரு முலை முகம் பொதி – முன்னரே காணக்கூடாத முலைமுகத்தில் அணிந்த, குன்று எரி அர்க்கன் நேர் குலப் பொன் தார்கொளா – மலையிற்பிரகாசிக்கின்ற சூரியனையொத்த

உயர்ந்த பொன்னரிமாலையைக் கழற்றி, எரி சென்று அல் பிறழ்ந்தென்ன – அக்கினி சென்று இருளில் கிடந்து விளங்கினாற்போல, மென் செண்பகத் தெரியல் தொகை மேகம் வேய்ஞரும் – மென்மையான செண்பகப்பூமாலையின் கூட்டத்தை மேகம்போன்ற கூந்தலிலணிவாரும். எ – று.

பொதிதார் என இயைக்க. முலை முகத்தில் விளங்கும் பொன்னரிமாலை மலைமீது விளங்கும் சூரியனைப்போல விளங்கிற்று என்க. பாரமாயிருத்தலினாலும் குளிர்ச்சியைத் தாராமையாலும் பொற்றாரைக்கழற்றிக், குளிர்ச்சியைத் தந்து இளைப்பைநீக்கு மியல்புடைத்தாதலின் செண்பகமாலையை வேய்ந்தனர் என்க. செண்பகமாலையை அக்கினிபோலவும் கூந்தல் இருள்போலவும் இருந்தனவாதலின் சென்றெரியற் பிறழ்ந்தென்ன என்றார்.

அலத்தக மிதிப்பினு மஞ்சுற் சீறடி
நிலத்தக மியைந்தகொ னெடுங்க ணீர்க்கென
நலத்தக வுட்கொடு நரந்த மப்பிவிற்
குலத்தக வரிக்குர னெகிழங் கொண்ணரும்.

இ – ள்: நெடும் கண்ணீர்க்கு – நீண்ட கண்களையுடையவர்களாகிய உங்களுக்கு, அலத்தகம் மிதிப்பினும் அஞ்சும் சீறடி – (மென்மையாகிய) செம்பஞ்சின்மீது மிதிப்பினும் (அதற்கும்) அஞ்சுகின்ற சிறிய அடிகள், நிலத்து அகம் இயைந்த கொல் எனு – (வலிதான) நிலத்திற் பொருந்திச் சென்றனவோவென்று, நலத் தகவு உட்கொடு நரந்தம் அப்பி – அதன் தன்மையை மனத்திற்கொண்டு (அக்காலின்) எரிவுதீரக் கஸ்தூரியை யப்பி, வில் குலத்து அக அரிக்குரல் நெகிழம் கொண்ணரும் – ஒழிக்கூட்டத்தைத் தன்னிடத்தேகொண்ட (தவளையின் குரல்போன்ற) குரலையுடைய கிண்கிணி மாலைகளைக் கழற்றுவாரும். எ – று.

காலிற்கு வருத்தம் கொடுக்குமென்று நெகிழத்தைக் கொள்ளுகின்றார் என்க. உம்மை அடியின் மென்மையைச் சிறப்பித்து நின்றது. (௧௮)

நானமுற் றிமிர்ந்துசெந் தளத்து நண்ணிய
தானமுற் றியவட சயிலந் தாங்கியே
மானமுற் றியநெறி நடந்து மானனீ
ரீனமுற் றிறுநுசுப் பிளைத்த தென்மரும்.

இ – ள்: மான் அன்னீர் – மான்போன்றீர்!, நானம் முன் திமிர்ந்து – கஸ்தூரி முன்னரே அப்பப்பெற்று, செம் தளத்து நண்ணிய தானம் முற்றிய – சிவந்த சந்தனத்தோடு பொருந்திய இடம்மிக்க, வடசயிலம் தாங்கி – மேருவைச் சுமந்து, மானமுற்றிய நெறி நடந்து – மிகவுஞ்

௨

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரமான வழியைநடந்து, இறநுசுப்பு ஈனம் உற்று இளைத்தது என்ம ரும் – முரிகின்ற இடை பங்கமுற்று இளைப்படைந்தது என்று சொல் வாரும். எ–று.

தாங்கி நடந்து இளைத்தது என, வினைமுடிபு செய்க. நடந்து என் னும் செய்தெனெச்சம் ஏதுப்பொருட்டு. மேரு–முலை; ஆகுபெயர். (௭௦)

நாமலை நித்தில நகுமென் கச்சினைத்
தேமலை தார்மலைச் சிலவர் கொள்ளவே
கோமலை யிடிக்குரற் குறுங்கண் மும்மத
மாமலை முகபடாம் வாங்கு வார்களும்.

இ–ள்: நாம் அலை நித்திலம் நகும் மென்கச்சினை – அச்சம் பொ ருந்திய கடலிற்றோன்றிய முத்துக்கள் விளங்குகின்ற மெல்லிய கச்சினை, தேம் அலை தார்மலைச் சிலவர் கொள்ள – தேன் அலைகின்ற மாலையை அணிந்த மலையினின்றும் சிலர்கொள்ள, கோமலை இடிக்குரல் குறும் கண் மும்மத மாமலை – அரசர்களோடு பொருகின்ற இடிபோலும் குரலையும் சிறிய கண்களையும் மும்மதங்களையுமுடைய பெரிய மலைகளினின்றும், முகபடாம் வாங்குவார்களும் - முகபடாத்தைக் கழற்றுபவர்களும். எ–று.

சிலர் மலையினின்றும் கச்சினைக் கொள்ளச் சிலர் மலையினின்றும் முகபடாம் வாங்குவார்களென்க. ஈண்டு மலைகள் தம்மையடுத்துநின்ற விசேடணங்களானும், தம்மினின்றுங் கொள்ளப்பட்ட பொருள்களானும் முலையையும் யானையையும் உணர்த்திநின்றன. (௭௧)

அருங்குகச் சிலம்பனை யனைய வாடவ
ரொருங்குகச் சொய்யென வொருவி நிற்பவே
மருங்குகச் சுரப்பிநின் றாற்றி வாம்பரி
நெருங்குகச் சுறுவிரி நெகிழ்க்கிற் பார்களும்.

இ–ள்: அரும் குகச் சிலம்பனை அனைய ஆடவர் – அரிய குமரனை யொத்த ஆடவர்கள், ஒருங்கு கச்சு ஒய்யென ஒருவி நிற்ப – ஒருங்கே வெறுத்து விரைவாக நீங்கி நிற்ப, மருங்கு உகச்சு உரப்பி நின்று – பக் கத்தே செலுத்தி உரப்பி நின்று, ஆற்றி – இளைப்பாற்றி, வாம் பரி நெ ருங்கு கச்சு உறு விரி நெகிழ்க்கிற்பார்களும் – பாய்கின்ற குதிரைகளினது நெருங்கிய கச்சின் மிக்க விரியை நெகிழ்ப்பவர்களும். எ–று.

குகச்சிலம்பன் இருபெயர் ஒருபொருண்மேல்வந்தன. நெகிழ்ப்பார் பாகர் எனக்கொள்க. (௭௨)

ஆம்பரித் தனமுகி லகட்டிற் றூளைநேர்
கூம்பரித் திடுநெடுங் கொடிஞ்சி நீங்கியே
தாம்பரிக் குரற்சிறு தார்க டள்ளுறு
வாம்பரிப் பிடர்நுகம் வாங்கு வார்களும்.

இ–ள்: ஆம் பரித்தன முகில் அகட்டில் தூளை நேர் கூம்பு அரித் திடும் – நீரைத்தாங்கியவாய மேகத்தின் வயிற்றிற் பொருந்திய துகளை (மேலே) அடைந்த கூம்பு அரிக்கின்ற, நெடும் கொடிஞ்சி நீங்கி – நெடிய தேரைவிட்டு நீங்கி, தாம்பு அரிக் குரல் சிறு தார்கள் தள்ளுறு – கயிற் றிற்கோத்த தவளையின் குரல்போன்ற குரலையுடைய சிறிய கிண்கிணி மாலைகளைத் தள்ளி, வாம் பரிப் பிடர் நுகம் வாங்குவார்களும் – பாய்கின்ற குதிரையின் பிடரினின்றும் நுகத்தைக் கழற்றுவார்களும். எ–று.

நீங்கித் தள்ளுறு வாங்குவார்களும் என வினைமுடிபு செய்க. தள் ளுறு என்பது செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். (௭௩)

மாதபத் திரவியை மறைக்கும் வான்றிக
ழாதபத் திரநிழ லகன்றி டாவணிப்
பாதபத் திரணறுஞ் செவ்விப் பன்மலர்ச்
சீதபத் திரநிழல் செல்கின் றார்களும்.

இ–ள்: மா தபத்து இரவியை மறைக்கும் – பெரிய ஒளியையுடைய சூரியனை மறைக்கும், வான் திகழ் ஆதபத்திர நிழல் அகன்றிடா – ஆகா யத்தில் விளங்குகின்ற குடையின் நிழலை நீக்கி, அணிப் பாத பத்திரன் நறும் செவ்விப் பன்மலர் சீதபத்திரநிழல் – அழகிய மாக் கூட்டத்தின் நறிய பருவத்தையுடைய பல மலர்களைக்கொண்ட குளிர்ந்த இலைகளின் நிழலில், செல்கின்றார்களும் – செல்லுகின்றவர்களும். எ–று.

அகன்றிடாச் செல்கின்றார்களும் என முடிக்க. (௭௪)

தேற்றுகிற் பார்களும் திங்கள் வேர்வினை
மாற்றுகிற் பார்களு மதுர வாசகஞ்
சாற்றுகிற் பார்களுஞ் சந்தத் தாலழு
லாற்றுகிற் பார்களு மாயி னாரரோ.

இ–ள்: தேற்றுகிற்பார்களும் – (இளைப்பை நீக்கித்) தெளிவிப்போர் களும், திங்கள் வேர்வினை மாற்றுகிற்பார்களும் – சந்திரன்போலும் முகத்திலுள்ள வேர்வையை மாற்றுவோர்களும், மதுர வாசகம் சாற்று கிற்பார்களும் – (இளைப்பை யாற்றுமாறு) இனிய வார்த்தைகள் சொல்

வோர்களும், சந்தத்தால் அழல் ஆற்றுகிற்பார்களும் ஆயினூர்கள் — சந்தனத்தால் காலிலுள்ள வெப்பத்தைத் தணிப்போர்களுமாயினூர்கள். எ-று.

திங்கள் உவமை யாகுபெயர். முன்னர்ப்போந்த ௬௪-ம் செய்யுண் முதலியவற்றிலுள்ள செஞ்ஞரும் என்பதுமுதலிய வினைப்பெயர்களை இச் செய்யுளில் ஆயினூர் என்பதனேடு முடிக்க. (௭௫)

வேறு.

பொன்னெடுங் கிரியை விட்டு வெள்ளியம் பொருப்பிற் பொற்பா
ரன்னெடுங் குகரம் புக்க வரியிள வேற்றை யொக்க
நன்னெடுந் தேரி னீங்கி நடுமுளை விசித்த நாண்கொண்
மின்னெடும் படாஞ்செய் மாடம் புக்கனன் விளங்கு வேலான்.

இ-ள்: நெடும் பொன் கிரியை விட்டு — நெடிய பொன்மலையை விட்டு, வெள்ளி அம் பொருப்பின் பொற்பு ஆர் அல் நெடும் குகரம் புக்க — வெள்ளிமலையின் அழகுபொருந்திய இருளைக்கொண்ட நெடிய குகையிற் புகுந்த, இள அரி ஏற்றை ஒப்ப — இளைய சிங்கேற்றை யொப்ப, விளங்குவேலான் — விளங்குகின்றவேலையுடையவனாகிய அயன், நல் நெடும் தேரின் நீங்கி — நல்ல நெடிய தேரினின்றும் நீங்கி, நடுமுளை விசித்த நாண் கொள் — நடுமுளையிற் கட்டிய கயிற்றைக் கொண்ட, மின் நெடும் படாம் செய் மாடம் புக்கனன் — ஒளி பொருந்திய நெடிய படாத்தினூற் செய்யப்பட்ட மாளிகையினுள்ளே புகுந்தான். எ-று.

படாம் — வஸ்திரம். பொன்மலை தேருக்கும் வெள்ளிமலை படாம் வீட்டிற்கும் அரியிளவேறு அயனுக்கும் உவமை என்க. இது ஒரு வயிற் போலியுவமையணி. (௭௬)

மூட்டின நிகள வன்கண் முரித்தன முன்னம் யாவும்
வீட்டின வியாள மஞ்ச மிதித்தன வென்கொ லாமற்
பாட்டின வடவி வேலை படமத வருவி பாயப்
பூட்டின தருக்க டோறும் புகர்முகப் பொருப்பை யெல்லாம்.

இ-ள்: பாட்டின அடவி வேலை பட மதம் அருவி பாய — பக்கத்திலுள்ள பெருமை பொருந்திய காடானது கடலாகுமாறு மதமாகிய அருவி பெருக, புகர் முகப் பொருப்பு எல்லாம் — புள்ளிபொருந்திய முகத்தையுடைய மலைகளெல்லாம், தருக்கடோறும் பூட்டின — மரங்கடோறும் கட்டப்பட்டன, மூட்டின நிகள வன்கண் முன்னம் முரித்தன — (அப்பொழுது அவைகள்) மூட்டப்பட்ட விலங்குகளின் வலிய பொருத்துக்களை முன்பு முரித்தன, யாவும் வீட்டின — மரமுதலிய எவற்றையும் அழித்தன, வியாளம் அஞ்ச மிதித்தன — பாம்பு அஞ்சும்படி மிதித்தன, என்கொல் — இங்ஙனம் செய்தது யாது காரணமோ அறியேம். எ-று.

ஐ — சாரியை. கட்டிய கோபத்தால் இங்ஙனம் செய்தது என்பார் என்கொலாமற்...... பூட்டின என்றார். ஆம், ஆல் அசைகள். புகர்முகப் பொருப்பு — யானை. (௭௭)

கண்களிற் காண லாகாக் கடுங்கதிக் காலை யார
வண்கையிற் பிடித்திட் டொன்றி னடுக்கவும் வல்லர் போலா
மெண்கணிப் பெய்த நட்ட முளைதொறு மிறுகப் பற்று [லாம்.
மொண்கயிற் ருர்த்தார் வல்லே யுருக்கொண்ட வொலியை யெல்

இ-ள்: உருக்கொண்ட ஒலியை எல்லாம் — வடிவைக்கொண்ட காற்றையெல்லாம், எண் கணிப்பு எய்த நட்ட முளைதொறும் — நோக்கிய மனமிளகும்படி நட்ட முளைகடோறும், பற்றும் ஒண் கயிற்று வல்லே இறுக ஆர்த்தார் — தாம் பற்றிய ஒள்ளிய கயிற்றினூல் இறுகுற விரைவிற் கட்டினூர்கள், கண்களின் காணல் ஆகாக் கடும் கதிக் காலை — கண்களாற் பார்க்க முடியாத (எனவே அரூபமான) மிக்க வேகத்தையுடைய காற்றை, ஆர வண் கையின் பிடித்திட்டு ஒன்றின் அடுக்கவும் வல்லர் போலாம் — நன்கு அழகிய கையினூற் பிடித்து ஒன்றிற் சேர்த்துக் கட்டவும் வல்லர் போலும் எ-று.

உருக்கொண்டஒலி — குதிரை. முளைதொறும் ஆர்த்தார் என இயைக்க. (௭௮)

உழைமுக வுருக்கொ டிங்க ளுச்சிக்கொண் டொளிரும்பால்வெண்
மழைமுகம் பொதிந்த வன்ன மாளிகை வதிதல் செய்யும்
தழைமுக மாலை மார்பத் தருக்களு மநேகம் பாலிற்
குழைமுக மொளிர வைகுங் கொடிகளு மநேக மன்றே.

இ-ளீ: உழைமுக உருக்கொள் திங்கள் உச்சிகொண்டு ஒளிரும் — மான்களங்கத்தைத் தன்னிடத்தேயுடைய பூரண வடிவைக்கொண்ட சந்திரனை உச்சியிற்கொண்டு விளங்கும், பால் வெண் மழைமுகம் பொதிந்த அன்ன — பால்போலும் வெள்ளிய மேகங்கள் ஓரிடத்தில் மூடிக்கொண்டாற்போன்ற, மாளிகை வதிதல் செய்யும் — படாம் வீட்டில் இருக்கும், தழைமுக மாலைமார்பத் தருக்களும் அநேகம் — தழையைத் தன்னிடத்தேயுடைய மாலையை யணிந்த மார்பினையுடைய விருட்சங்களும் பல, பாலிற் குழைமுகம் ஒளிரவைகும் கொடிகளும் அநேகம் — அத்தருக்களின் பக்கத்தே குழைகள் முகத்தில் விளங்க இருக்கும் கொடிகளும் பல, எ-று.

உழை — ஆகுபெயர். ஒளிரும் மாளிகை என முடிக்க. தழைமுக மாலை மார்பத் தரு என்றது ஆடவரை. குழைமுக மொளிரவைகும் கொடி என்றது மகளிரை. (௭௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான்கெழு நீழ றோறுங் கதிர்த்தலைக் கண்டத் துள்ளே
தேன்கெழு மலரஞ் செவ்விச் சேக்கையிற் சிங்க வேற்றி
னூன்கெழு குறங்கிற் சென்னி யுறுத்தியங் குறங்கு கின்ற
மான்களுஞ் சிலகள் சூழ்ந்த மயில்களுஞ் சிலக ளன்றே.

இ—ள்: கான்கெழு நீழல்தோறும் — காட்டிற் பொருந்திய மாநீழல்தோறும், கதிர்த் தலைக் கண்டத்து உள்ளே — ஒளியைத் தன்னிடத்தேகொண்ட திரைச்சீலையி னுள்ளே, தேன் கெழு மலர் அம் செவ்வி சேக்கையில் — தேன்பொருந்திய மலர்களாலாகிய அழகிய சயனத்தில், சிங்க ஏற்றின் ஊன் கெழு குறங்கில் சென்னி உறுத்தி அங்கு உறங்குகின்ற — சிங்க ஏறுகளது ஊன்பொருந்திய தொடையிற் றலையை வைத்து அங்கே நித்திரை செய்கின்ற, மான்களும் சிலகள் — மான்களும் சில, சூழ்ந்த மயில்களும் சில — அவற்றைச் சூழ்ந்த மயில்களும் சில. எ—று.

சிங்கவேறு என்றது தலைவரை. மான்கள் என்றது தலைவியரை. மயில்கள் என்றது தோழியரை. சிலகள் என்பவற்றிலுள்ள கள் அசைகள்.

இன்னறும் பனிநீ ராடி யிருந்தளம் பொதிந்து முக்கத்
துன்னரு மிளங்கால் வீச வுலாவுவ வுறைவ வெல்லாம்
பொன்னருஞ் சிலம்பும் வீரக் கழல்களுந் தாளிற் பூண்ட
வன்னமும் விடையு மான வணிநிழ றோறு மம்மா.

இ—ள்: இன் நறும் பனி நீர் ஆடி இருந்தளம் பொதிந்து — இனிய பனிநீரில் மூழ்கிய பெரிய சந்தனக்குழம்பை அப்பி, உக்கத்து உன்னரும் இளங்கால் வீச — பேராலவட்டத்தினது நினைத்தற்கரிய இளங்காற்று வீச, அணி நிழல்தோறும் உலாவுவ உறைவ எல்லாம் — அழகிய மாநீழல் தோறும் உலாவுவனவும் இருப்பனவுமா யுள்ளனவெல்லாம், பொன் அரும் சிலம்பும் வீரக்கழல்களும் தாளிற் பூண்ட அன்னமும் விடையும் ஆன — பொன்னாலாகிய அரிய சிலம்புகளையும் வீரக்கழல்களையும் காலில் அணிந்த அன்னங்களும் இடபங்களுமா யிருந்தன. எ—று.

பொதிந்தும் என்பதிலுள்ள உம்மை அசைநிலை. சிரணிறை அன்னம் என்றது பெண்களை. விடை என்றது ஆடவர்களை (௮௧)

தளைபட மனையு மன்றுஞ் சதுக்கமு மறுகுங் கோணுங்
கிளையுறு கடையு நீளத் தாணியுங் கெழீஇய தோற்ற
மளவறு சிறப்பின் மிக்க வயோத்தியைக் கொடுவந் தார
வளநதிக் கரையி னங்கண் வைத்ததும் போலு மன்றே.

இ—ள்: தளைபட மனையும் மன்றும் சதுக்கமும் மறுகுங் கோணும் கிளையுறு கடையும் நீள் அத்தாணியும் கெழீஇய தோற்றம்—கட்டப்பட்ட படித்தாலாகிய வீடுகளும் மன்றுகளும் நாற்சந்திகளும் நெடுந்தெருக்களும் சுற்றுத்தெருக்களும் கூட்டமானகடைகளும் நெடிய அரசிருக்கையும் விளங்கிய தோற்றமானது, அளவு அறு சிறப்பின் மிக்க அயோத்தியைக் கொடுவந்து — அளவில்லாத சிறப்பினால் மிக்க அயோத்திநகரைக் கொண்டுவந்து, ஆர வளநதிக் கரையின் அங்கண் வைத்ததும் போலும் — பொருந்தும்படி வளத்தைக்கொண்ட நருமதையாற்றங்கரையிலே அங்கே வைத்ததையும் ஒக்கும். எ—று.

கொடுவந்து வைத்ததும் போலும் என இயைக்க. (௮௨)

வேறு.

ஆபவா றாகிய பொழுதி னன்பினோர்
கூயவா றெழுந்தெதிர் குழுமிக் கூடியே
யேயவா றேகியல் காண வெய்தினார்
மேயவா றெய்திய விழுமம் விட்டுளார்.

இ—ள்: ஆய ஆறு ஆகிய பொழுதின் — அவ்வாறாகிய சமயத்தில், அன்பினோர் கூயவாறு எழுந்து — (தத்தம்) நாயகர் அழைத்தபடியே எழுந்து, எதிர் குழுமிக் கூடி — எதிரே திரண்டு கூடி, மேய ஆறு எய்திய விழுமம் விட்டுளார் — தாம் வந்த வழியை நடந்ததாலாய துன்பத்தை விட்டவர்களாய், ஏய ஆறு ஏகு இயல் காண எய்தினார் — அங்கே பொருந்திய ஆறு பெருகும் இயல்பினைக் காணும்படி சென்றார்கள். எ—று.

விட்டுள்ளார் வினையெச்சமுற்று. (௮௩)

உந்தியி னாப்பண்மீ தோங்கு மொண்மதச்
சந்தமே தோன்றலொண் டரங்க மேயபாற்
சிந்துவி னுலகெலா மளந்த சேவடிச்
சுந்தர னெடிதுறத் துயிறல் போன்றதே.

இ—ள்: உந்தியின் நாப்பண் — ஆற்றின் நடுவே, மீது ஓங்கும் ஒண் மதச் சந்தம் தோன்றல் - மேலாகக் கிளருகின்ற மதத்தின் நிறம் தோன்றுதல், ஒண் தரங்கம் மேய பாற் சிந்துவின் — ஒள்ளிய திரை பொருந்திய பாற்கடலில், உலகெலாம் அளந்த சேவடிச்சுந்தரன் — உலகமனைத்தையும் அளந்த சிவந்த அடியையுடைய விஷ்ணு, நெடிது உறத் துயிறல் போன்றது — நீளுற அறிதுயில் செய்வது போன்றது. எ—று.

தோன்றல் போன்றது என இயைக்க. இது பண்பும்வடிவும் பற்றி வந்த வுவமை யலங்காரம். உலகமளந்தபொழுது கொண்ட வடிவொடு துயின்றது போன்ற தென்பார், உலகெலாமளந்த சேவடிச் சுந்தரன் நெடிதுறத் துயிலல் போன்றது என்றார். (௮௪)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிதர வெங்கய மழுந்தி யங்கைமூச்
செறிதரப் புற்புத மெழுத றன்னுருப்
பெறுமவன் சாபமே பிரிந்து வான்செல
மறிபுனன் மேற்பதம் வைப்ப போன்றதே.

இ—ள்: வெம் கயம் அழுந்தி – வெவ்விய யானையானது நீரினுள்ளே அமிழ்ந்தி, அங்கை மூச்சு எறிதர – அழகிய துதிக்கையினல் மூச்சினை விட, அறிதரப் புற்புதம் எழுதல் - இஃது என்னே என்று சிந்திக்கும்படி குமிழி எழுதல், தன் உருப் பெறுமவன் சாபம் பிரிந்து – அதன் வடிவத்தைப் பெற்றோனாகிய பிரியம்வதன் தன் சாபம் நீங்கப்பெற்று, வான் செல – ஆகாயத்திற் செல்லும்படி, மறி புனல் மேல் பதம் வைப்ப போன்ற – திரை மறிகின்ற நீரின்மீது தன் அடியை வைத்தலைப் போன்றது- எ—று.

எழுதல் போன்றது என முடிக்க. (அரு)

கனைகுர லழித்தொகைக் காட்சி காண்குவா
ரினையவு நோக்கியுள் வியக்கு மெல்லையிற்
றுனைவரும் வானவர் நடுங்கத் தோற்றுநஞ்
சென்வொரு கரிபுன லிடையெ ழுந்ததே.

இ—ள்: கனை குரல் அளித் தொகைக் காட்சி காண்குவார் – மதத்தில் வீழ்ந்து ஒலிக்கின்ற குரலையுடைய வண்டுக் கூட்டத்தின் தோற்றத்தைப் பார்ப்பவர்களாய், இனையவும் நோக்கி உள் வியக்கும் எல்லையில் – (இங்கே வண்டுகள் வீழ்தற்குக் காரணமென்னை யென்று நோக்குதலால்) இவற்றையும் பார்த்து மனதில் அதிசயிக்கும் பொழுது, துனைவரும் வானவர் நடுங்கத் தோற்றும் நஞ்சு என – நெருங்கிய தேவர்கள் நடுங்கும்படி தோற்றிய நஞ்சைப்போல, ஒரு கரி புனலிடை எழுந்தது – ஒரு யானை அவர்க ளஞ்சும்படி நீரினிடத்தே எழுந்தது. எ—று.

வியக்கும் எல்லையில் எழுந்தது என்க. உவமை அடைக்கியைப் பொருளடை வருவிக்கப்பட்டது. (அசு)

மிடல்புரி கன்னபா கத்தின் வீழ்மதக்
கடல்கழு வுண்டிடக் கடையிற் றீயினைச்
சுடருற விரண்டுசெய் தொருமைத் தூநிறத்
தடவரை விழித்தெனத் தடங்கண் டோற்றிட.

இ—ள்: மிடல் புரி கன்ன பாகத்தின் வீழ் மதக் கடல் – வலிமை பொருந்திய காதினின்றும் வீழ்கின்ற மதக் கடலானது, கழுவுண்டிட – ஆற்றுநீராற் கழுவுண்ணவும், கடையில் தீயினைச் சுடர் உற இரண்டு செய்து – ஊழித்தீயை ஒளிபொருந்த இரண்டாகப் பகுத்துத் தன்னிடத்தே

கொண்டு, ஒரு மைத் தூநிறத் தடவரை விழித்தென – ஒரு கரிய சுத்தமாகிய நிறத்தையுடைய பெரியமலை விழித்தாற்போல, தடம் கண் தோற்றிட – விசாலித்த கண்கள் தோற்றவும். எ—று.

கோபாக்கினியினுற் கண்கள் சிவந்து காட்டிற்று என்பார் இங்ஙனம் கூறினர். (அஎ)

சாடிய கடந்தொறுங் கன்ன சாமர
நீடிய துளியிரு மருங்கு நீடரச்
சேடியல் வெம்முகப் புகர்க டீப்பட
வோடிய பொன்னினின் றழகொ டோங்கிட.

இ—ள்: சாடிய – (தனக் கெதிர்படு மவைகளைத்) தாக்கும்படி, கடந்தொறும் – கதுப்புக்கடோறும், கன்ன சாமரம் நீடிய துளி இருமருங்கும் நீள்தர – காதாகிய சாமரத்தின் மிக்குள்ள துளிகள் இருபக்கத்திலும் மிகச் சொரியவும், சேடு இயல் வெம் முகப் புகர்கள் – பெருமை பொருந்திய வெவ்விய முகத்திலுள்ள புகர்நிறப்புள்ளிகள், தீப்பட ஓடிய பொன்னின் நின்று அழகொடு ஓங்கிட – அக்கினிபட அதன்கண் உருகி ஓடிய பொன்னைப்போல நின்று அழகோடு விளங்கவும். எ—று.

சாடிய நீடர என முடிக்க. சாடிய என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு கடத்தோடு முடித்து வீசுந்தோறும் தாக்குகின்ற கடமெனப் பொருள் கோடலுமாம். தீப்பட ஓடிய பொன் களங்க நீங்கி மிகப் பிரகாசிக்குமாதலின் அதனை உவமை கூறினர் என்க. (அஅ)

வடிந்தன நீலநூல் வகிர்ந்து போட்டென
விடிந்தன ரேகைக ளிலங்க நீண்முகில்
படிந்தென விருக்கவான் கிரியிற் பாய்ந்துகூர்
மடிந்தன கோட்டிள நிலவு வாய்த்திட.

இ—ள்: வடிந்தன நீல நூல் வகிர்ந்து போட்டென – நீண்டனவாகிய நீல நிறம்பொருந்திய நூல்களைப் பிரிவுசெய்து (தன்மீது) போட்டாற்போல, இடிந்தன ரேகைகள் இலங்க – இடிந்தனவாகிய செங்கற்பொடி ரேகைகள் விளங்கும்படி, நீண்முகில் படிந்தென இருக்கவான் கிரியில் பாய்ந்து கூர் மடிந்தன கோட்டு – நெடிய மேகம் படிந்தாற்போல இருக்க மென்னும் பெரிய மலையிலே பாய்ந்து கூர்மழுங்கிய கோட்டின்கண், இள நிலவு வாய்ந்திட – இளமையாகிய நிலவு சிறப்பவும். எ—று.

வடிதல் – நீளல். போட்டென இலங்கப் பாய்ந்து மடிந்த கோடு எனவும், படிந்தெனப் பாய்ந்து எனவும் முடிக்க. நீலநூலை வகிர்ந்து போட்டாற்போல விளங்க என்றதனுல் இடையிடையே நீலரேகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிற்றென்பது பெறப்பட்டது. எனவே நீராடுகையினாலே காவிக் கற்பொடிகண் முதலியன கழுவுப்படலால் பலவர்ணமான ரேகை தோன்றிற்றென்பது கருத்து. (௮௯)

தாவிகற் காரிமெய்க் கரிய சட்டையிற்
றாவிகற் சைவல மாகஞ் சுற்றிட
மீவிசைத் தெதிரெதிர் வெடிவெண் சாமரப்
பூவினிற் புழைக்கரந் திவலை போதர.

இ-ள்: தா இகல் காரி மெய்க் கரிய சட்டையின் – அழிவைத்தருகின்ற போரையுடைய வயிரவக்கடவுளின் மெய்யிலுள்ள கரிய சட்டையைப்போல, தா இகல் சைவலம் ஆகம் சுற்றிட – சுத்தமாகிய வலிய பாசி உடம்பைச் சுற்றிக்கொள்ளவும், மீ விசைத்து எதிர் எதிர் வெடி வெண் சாமரப் பூவினில் – மேலாக விசைகொண்டு எதிர் எதிராக மேற்கிளருகின்ற வெள்ளிய சாமரையினது பொலிவைப்போல, புழைக்கரம் திவலை போதர – துளைபொருந்திய துதிக்கையினின்றும் திவலை சொரியவும். எ–று.

பயிற்றிய யானைகள் கையிற் சாமரையைவைத்து வீசுதலின், வெடி வெண் சாமரப் பூவினில் என்றார். வெடித்தல் – கிளர்தல் "வெடிவால்" என்பதுபோல. (௯0)

நன்செலி னார்ப்பன முழக்க நச்சரா
மன்செவி புகப்பிர வாக மேறியே
முன்செல வார்திரை கிழித்து முந்துபு
பின்செலா நின்றதப் பெரிய யானையே.

இ–ள்: நன்செலின் ஆர்ப்பன முழக்கம் – நல்ல மேகத்தைப்போல ஆரவாரிப்பனவாகிய முழக்கம், நஞ்சு அரா மன் செவிபுக – நஞ்சினையுடைய சேஷன் என்னும் பாம்பின் செவியிற் புகவும், அப் பெரிய யானை – அந்தப் பெரியயானையானது, பிரவாகம் ஏறி முன்செல – பெருக்கானது மேலேறி முன்னேசெல்ல, வார் திரை கிழித்து முந்துபு பின்செலாநின்றது – (துதிக்கையினால்) நீண்ட திரையைக் கிழித்துக்கொண்டு முற்பட்டு அப்பிரவாகத்துக்குப் பின்னே சென்றது. எ–று.

அ௭-ம் செய்யுள் தொடங்கி இச்செய்யுள்வரையிலுமுள்ள சமூவண்டிட என்பது முதலிய எச்சங்களை இச்செய்யுளில் செலாநின்றது என்பதோடு முடிக்க. முன்செலப் பின்செலாநின்றது என இயைக்க. காரியப்பொருட்டு. (௯௧)

எண்மறத் திறல்கொளக் கரியி னேழ்மதக்
கண்மலர்ப் புனலினாற் கணத்த டைப்பினுந்
தண்மலர்த் தெரியலான் றானை யானையி
னொண்மதச் சுவடுகொண் டுடைந்த வூற்றரோ.

இ– ள்: எண் மறத் திறல்கொள் அக்கரியின் ஏழ்மதக் கண் – மதிக்கப்படுகின்ற மறவலியைக் கொண்ட அந்த யானையினது ஏழ்வகை மதங்களையும் சொரிகின்ற துளைகள், மலர்ப் புனலினால் கணத்து அடைப்பினும் – மலரையுடைய நீரினாற் கணப்பொழுதினுள்ளே அடையுண்டாலும், தண்மலர்த் தெரியலான் தானையின் ஒண் மதச் சுவடுகொண்டு – குளிர்ந்த மலர் மாலையை யணிந்தவனாகிய அயனது சேனையின் கண்ணுள்ள யானையின் ஒள்ளிய மதச்சுவட்டினால், ஊற்று உடைந்த – அந்தக் கண்கள் மதப்பெருக்கு உடை யுண்டன. எ – று.

ஆற்று நீரினால் மதக்கண் அடையுண்டாலும் அரசனுடைய யானையின் மதச்சுவட்டினால் அக்கண்கள் ஊற்று உடைந்தது என்றது அரசனுடைய யானைகளின் மதச்சுவட்டை மணந்தவுடன் கோபித்து மதம் பிலிற்றலால் கண்கள் திறந்தன என்றபடி. கண் ஊற்று உடைந்த என்றது சினைவினை முதலொடு முடிந்தது. (௯௨)

ஊறிய மதச்சுவ டுயிர்த்திட் டொண்டிற
லேறிய தானைவெங் கரிகள் யாவையு
மீறிய பாரைமா மரங்கள் வேரற
நூறியொண் டிசைகளி னொடியிற் போயவே.

இ – ள்: ஊறிய மாமதச் சுவடு உயிர்த்திட்டு – (அந்த யானையின் மதக்கண்களினின்றும்) ஊறிய மதச்சுவட்டை மணந்தறிந்து, ஒண்திறல் ஏறிய தானை வெம் கரிகள் யாவையும் – ஒள்ளிய திறலான் மிக்க சேனையிலுள்ள வெவ்விய யானைகளனைத்தும், மீறிய – அடங்காதனவாய், பாரை மா மரங்கள் வேர் அற நூறி – பருத்த அரையையுடைய மரங்களை வேரறும்படி அழித்து, எண் திசைகளில் நொடியில் போய – எட்டுத் திக்குகளிலும் நொடிப்பொழுதினுள்ளே சென்றன. எ – று.

உயிர்த்திட்டு மீறியவாய் நூறிப்போய என வினைமுடிபுசெய்க. அரசனுடைய சேனையிலுள்ள யானைகள் அந்த யானையின் மதச்சுவட்டை மணந்து வெருண்டு அடங்காதனவாய்த் தங்களைக் கட்டிய மரங்களையும் முரித்து நான்கு திக்குகளினும் ஓடிய என்பது கருத்து. (௯௩)

வேறு.

பொன்னிடா நின்ற வைவே லேந்துபு புலியிற் சீறி
வென்னிடா தனைய வேக வேழமா விலங்க றன்னை
முன்னிடா நின்று மாதர் முதிர்வட முலைக்கொல் யானை
பின்னிடா நின்று தத்தம் பெயரினை விளக்கு கிற்பார்.

இ – ள்: பொன் இடாநின்ற வைவேல் ஏந்துபு – இரும்பாற்செய்த கூரிய வேலைத் தாங்கி, புலியின் சீறி – புலிபோலச் சீறி, வெண் இடாது

84689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறங்கொடாது,; அனையவேகவேழமா விலங்கல் தன்னை முன்னிடா நின்று – அந்த வேகத்தையுடைய யானையாகிய பெரிய மலையை முற்பட்டு நின்று, மாதர் முதிர் வட முலை கொல் யானை பின்னிடா நின்று – பெண்களது முதிர்ந்த கச்சை அணிந்த முலையாகிய கொல்லுகின்ற யானையைப் பின்னிட்டு, தத்தம் பெயரினை விளக்குகிற்பார் – தத்தம் கீர்த்தியை விளக்குவார்கள் (சிலர்). எ – று.

இரும்புக்குக் கரும்பொன் என்னும் பெயர் உண்மையின் பொன் என்றார். யானைக்கு அஞ்சிப் பெண்கள் பின்னே நிற்க தாம் யானைக்கு முற்படுதலின், வேழமா விலங்க றன்னை முன்னிடா நின்று மாதர் முதிர் வட முலைக் கொல்யானை பின்னிடா நின்று என்றார். யானைக்கு முன்னிட்டுப் பின்னிட்டு என்பதுந் தோன்றிற்று. (௬௪)

விடங்குடித் திருண்டு கால வேலென விளங்கு கண்கள்
குடங்கையினடங்குங்கொல்லோவெனக்குறித்தளப்பபோலத்
தடங்கையிற் புதைத்து நெஞ்சம் வெரீஇவருந் தையலாரை
யிடங்கையிற்றழுவிவைவேல்வலங்கைதொட்டெதிர்த்துநிற்பார்.

இ – ள்: விடம் குடித்து இருண்டு கால வேல் என விளங்கு கண்கள் – நஞ்சைப் பருகி இருண்டு காலத்தைச் செய்கின்ற வேல்போல விளங்குகின்ற கண்களானவை, குடங்கையின் அடங்குமோ எனக் குறித்து அளப்ப போல – உள்ளங்கையினுள்ளே அடங்குமோ (அளந்துபார்ப்போம்) என்று கருதி அளத்தல்போல, தடம் கையின் புதைத்து – (அச்சத்தினாலே) விசாலித்த கைகளான் மறைத்து, நெஞ்சம் வெரீஇ – மனம் அஞ்சி, வரும் தையலாரை – வருகின்ற பெண்களை, இடங்கையின் தழுவி வைவேல் வலங்கை தொட்டு – இடக்கையினாற் றழுவிக் கூரிய வேலை வலக்கையில் எடுத்து, எதிர்த்து நிற்பார் – (அந்தயானையை) எதிர்த்து நிற்பார்கள் (சிலர்) எ – று.

இடங்கை, வலங்கை என்பன "மெல்லெழுத்துறழு மொழியுமாருளவே, செல்வழி யறிதல் வழக்கத்தான" என்னுஞ் சூத்திர விதியினன் மெல்லெழுத்துப்பெற்று நின்றன. (௬௫)

கற்றையங் கூந்த றாழ்ந்து காறடுத் தொருங்கு கட்டித்
தெற்றிட வருந்தி யேகுஞ் செல்வியர் சிலம்பி ரண்டை
மற்றடுத் துடைய தோர் நுண் வல்லிமென் மருங்கு லிற்ற
திற்றதென் றிரங்கியாவி யேகவு மேகல் செய்வார்.

இ – ள்: கற்றை கூந்தல் தாழ்ந்து – தொகுதியான கூந்தல் குலைவுற்றுத் தாழ்ந்து, கால் தடுத்து ஒருங்கு கட்டித் தெற்றிட – காலை (ஓடவிடாது) தடுத்து ஒருங்கே கட்டிப் பின்னிக்கொள்ள, வருந்தி ஏகும் செல்வியர் – (அதனால்) வருந்தி ஓடுகின்ற மகளிர்கள், சிலம்பு இரண்டை அடுத்து உடைய நுண் வல்லி மெல் மருங்குல் – (கண்டோர்) மலைகள் இரண்டினைப் பொருந்திய நுண்ணிய கொடிபோலும் மெல்லிய இடை, இற்றது இற்றது என்று இரங்கி – முரிந்தது முரிந்தது என்று இரங்கும்படி, ஆவி ஏகவும் ஏகல் செய்வார் – உயிர் போகவும் (அதனையுநோக்காது) ஓடுவார்கள். எ–று.

மலைகள் இரண்டு என்றது முலைகளிரண்டையும். மற்று – அசைநிலை. இரங்கி என்னும் செய்தெனெச்சம் செயவெனெச்சமாகத் திரிக்கப்பட்டது. (௬௬)

காழ்வரு மணிகடொக்க கனகநூ புரங்கள் காலிற்
சூழ்வவும் பாதம் வைக்குந் தொறுமணிக் காஞ்சி யற்றுத்
தாழ்வவுங் கலசக் கொங்கைக் குங்குமத் தளங்கள் சிந்தி
வீழ்வவும் வினையே லெங்ங னேகுவார் மின்ன னாரே.

இ–ள்: காழ்வரும் மணிகள் தொக்க கனக நூபுரங்கள் காலிற் சூழ்வவும் – வயிரம்பொருந்திய மணிகள் செறிந்த பொற்சிலம்புகள் பூட்டுவிட்டுக் காலிற் சூழ்வனவும், பாதம் வைக்குந்தொறும் மணிக் காஞ்சி அற்றுத் தாழ்வவும் – கால்களை வைக்குந்தோறும் (அரையிலணிந்த) மணிகளையுடைய காஞ்சியென்னும் ஆபரணம் அறுந்து தொங்குவனவும், கலசக் கொங்கை குங்குமத் தளங்கள் சிந்தி வீழ்வவும் – குடம்போலும் முலைகளிலணிந்த குங்குமச்சேறு சிந்திவீழ்வனவுமே, வினையேல் – தொழிலாகுமாயின், மின்னனார் எங்ஙன் ஏகுவார் – பெண்கள் எப்படி ஓடுவார்கள். எ–று,

ஓடும்பொழுது சிலம்புகள் அடிக்கடி பூட்டுவிடுதலாலும், காஞ்சி தாழ்ந்து காலிற் பின்னிக்கொள்ளுதலாலும், குங்குமச்சேறு காலை வழுக்குதலாலும், அவைகள் தீவினைபோலக் காலைத் தடுத்தலால் ஓடமுடியாமலிருந்ததென்பார் வினையேல் என்றார், வினையேல் என்பதற்கு தீவினையாகுமாயின் என்பாருமுளர். (௬௭)

வெற்றிசெய் துணைக்கண் வேலும் வெம்முலைக் களிறுஞ் செய்யுங்
குற்றமி லெம்ம னோரைக் கொல்லவோ படைத்த தெல்லாம்
மற்றிதன் மேற்செ லாவோ மாதரீ ரென்ன வண்கைப்
பற்றுபு பிடியன் னாரைப் பையயக் கொண்டு போவார்.

இ–ள்: மாதரீர் – பெண்களே!, வெற்றிசெய் துணைக்கண் வேலும் – வெற்றியைச் செய்கின்ற இருகண்களாகிய வேலையும், வெம்முலைக் களிறும் – வெவ்விய முலைகளாகிய களிற்றுயானைகளையும், படைத்தது எல்லாஞ் செய்யும் குற்றமில் எம்மனோரைக் கொல்லவோ – நீவிர் பெற்றுக் கொண்டதெல்லாம் செய்யுங் குற்றமொன்றுமில்லாத எம்போலியரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரங் கொல்வதற்காகவா?, மற்று இதன்மேற் செலாவோ - (செய்யுங் குற்றத்தையுடைய) இந்த யானையின்மீது சென்று கொல்லமாட்டாரோ?, என்ன - என்று கூறி, வண்கைப் பற்றுபு - அழகிய கையாற் பற்றிக்கொண்டு, பிடியன்னாரைப் பையக் கொண்டுபோவார் - பிடி போன்றவர்களாகிய மகளிர்களை மெல்லமெல்லக் கொண்டுபோவார்கள். எ-று.

மற்று - வினைமாற்று. எனப் பற்றுபு கொண்டுபோவர் என வினை முடிக்க. எல்லாம் இதன்மேற் செலாவோ எனக் கூட்டிப் பொருள் கொள்ளினு மமையும். (௯அ)

பிடியன நடையு ருது பெரும்பயங் கொண்டு மாழ்கித்
துடியன விடையி னோடுந் துவண்டனர் சோர்ந்து நில்லாக்
கடியன கவன மிக்க கால்பொர நடுங்கி நிற்குங்
கொடியென லானார் வஞ்சிக் கொம்பன கோதை நல்லார்

இ-ள்: வஞ்சிக் கொம்பன கோதை நல்லார் - வஞ்சிக்கொம்பை யொத்த கூந்தலையுடைய மகளிர்கள், பிடியன நடையுறாது - பிடி போன்ற நடையைப் பொருந்தாது (எனவே ஓடி என்றபடி), பெரும் பயம் கொண்டு மாழ்கி - பெரிய பயத்தைக்கொண்டு வருந்தி, துடியன இடையினோடும் துவண்டனர் சோர்ந்து நில்லா - துடிபோன்ற இடையோடும் துவண்டு சோர்ந்து நின்று, கடியன கவனமிக்க கால்பொர நடுங்கி நிற்கும் கொடி எனல் ஆனார் - கடுமையான வேகமிக்க காற்று வந்து பொர அதனால் நடுங்கி நிற்கின்ற கொடியென்று சொல்லுதலைப்பொருந்தினார். எ-று.

உருது நில்லா ஆனார் என முடிக்க. கொம்பன நல்லார் என இயைக்க. (௯௯)

கழைபுகு மின்சொ னல்லார் காமரு கடைக்க ணோக்கத்
துழைபுகு நாட்ட நோக்கி யூடிய வூட றீரா
மழைபுகு தடக்கை வேலர் மருங்குபோ யொல்கி மார்பிற்
குழைமுக முறுத்தி நிற்பார் சிற்சில கொடியன் னாரே.

இ-ள்: சிற்சில கொடியன்னார் - சிற்சில மகளிர்கள், கழை புகும் இன்சொல் நல்லார் காமரு கடைக்கண் நோக்கத்து உழைபுகும் நாட்டம் நோக்கி - கரும்பின் றன்மைபுக்க இன்சொலையுடைய பிறமகளிரது கடைக்கண் பார்வையிடத்துப் புகுந்த தம் நாயகருடைய பார்வையைத் (தாம்) நோக்கி, ஊடிய ஊடல் - வெறுத்த அவ்வெறுப்பை, தீரா - (இந்த யானையைக் கண்டு அஞ்சுதலாலே) தீர்ந்து, மழை புகு தடக்கை வேலர் மருங்குபோய் ஒல்கி - மழையின் றன்மைபுக்க நீண்ட கைவேலையுடையவர்களாகிய நாயகர்களுடைய பக்கத்திற்போய்த் துவண்டு, மார்பில் குழைமுகம் உறுத்தி நிற்பார் - மார்பிலே குழையையுடைய முகத்தை வைத்துக்கொண்டு நிற்பார்கள். எ-று.

கொடியன்னார் தீராப்போய் ஒல்கி நிற்பார் எனமுடிக்க. நாயகர் பலவாறு தீர்க்கவும் தீராத ஊடலைத் தாமே தீர்ந்துபோன நாணத்தினாற் றலைகுனிந்து நின்றார் என்பார் மார்பிற் குழைமுகமுறுத்தி நிற்பார் என்றார். இது சமாகித அணி. (௧௦௦)

இலங்கிழை மடவார் நொய்தி னேகலுற் றெறியப் பட்ட
கலங்களைக் கடந்து போவ தெங்ஙனே கடங்க டோறும்
பொலங்குழை யிடைபொற் றோடு புடைமணிச் சிலம்புகோவைக்
குலங்கண்முன் பின்னரம்பொற் கோற்றொடிக் குவால்களன்றே.

இ-ள்: இலங்கிழை மடவார் நொய்தின் ஏகலுற்று எறியப்பட்ட - விளங்குகின்ற ஆபரணங்களையணிந்த மகளிர் விரைவோடு ஓடுதலால் எறியப்பட்டுள்ள, கலங்களைக் கடந்து போவது எங்ஙன் - ஆபரணங்களைக் கடந்துபோவது எப்படி (க்கூடும்)? என்னையெனின், கடங்கடோறும் பொலங் குழை இடை - காடுகடோறும் பொற்குழைகள் இடையேயுள்ளன, பொன் தோடு புடை - பொற்றோடுகள் பக்கங்களிலேயுள்ளன, மணிச்சிலம்பு கோவைக்குலங்கள் முன் - இரத்தினச்சிலம்புகளும் கோவைக்கூட்டங்களும் முன்னர் உள்ளன, அம் பொன் கோல் தொடிக் குவால்கள் பின்னர் - அழகிய பொன்னாலாகிய திரண்டவளை பல்கள் பின் உள்ளன. எ-று.

எறியப்படுதல்-வீசுண்ணுதல். எங்ஙன் என்பது ஈண்டுக் கூடாமை குறித்து நின்றது. மணி - பரலுமாம். உள்ளன என்றால் கடப்பது எப்படி என்றபடி. (௧௦௧)

ஒன்றிய பழுவ டங்க வுலாவிசைக் கைய ராகி
மின்றிகழ் குதிச்சு வட்டின் பெருவிரன் மதிப்ப வோடிக்
கன்றிய முழமோர் நாலு கடந்தபின் காத மொன்று
சென்றென வுள்ளஞ் சோர்ந்து தியங்குவார் சிந்த ரெல்லாம்.

இ-ள்: சிந்தரெல்லாம் - சிந்தர்களெல்லாம், ஒன்றிய பழுவடங்க விசை உலா கையராகி - பொருந்திய பழுமுழுதும் விசையாக வுலாவுகின்ற கைகளையுடையவர்களாகி, மின்திகழ் குதிச்சுவட்டின் பெருவிரல் மிதிப்ப ஓடி - ஒளிபொருந்திய குதிக்காற்சுவட்டிலே மற்றைக் காற்பெருவிரல் மிதிக்கும்படி ஓடி, கன்றிய முழம் ஓர் நாலு கடந்தபின் - (கால்கள்) கன்றும்படி முழம்நான்கு சென்றபின், ஒன்று காதஞ் சென்றென உள்ளம் சோர்ந்து தியங்குவார் - ஒருகாததூரஞ் சென்றாற்போல மனஞ் சோர்ந்து வருந்துவார்கள். எ-று.

சிந்தர் - குறளிற் சிறிதுயர்ந்தோர். (௧௦௨)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுக்குமா லந்த ணீர்கா ணவிலுமிங் கிதனை நன்னர்
தடுக்குமா றரிய வேதந் தானென நக்கு நக்காங்
கடுக்குமா றங்கை பற்றி யங்கவ ராவி தன்னைக்
கொடுக்குமா றெண்ணி வல்லே சேட்புலங் கொண்டு போவார்.

இ-ள்: அந்தணீர்காள் – அந்தணர்களே!. நடுக்கும் – இந்த யானை நடுங்கச்செய்கின்றது, இதனை நன்னர் தடுக்குமாறு அரிய வேதம் நவிலுமென நக்கு நக்கு – இதனை நன்கு தடுக்கும்படி வேதமந்திரங்களைச் சொல்லுங்களென்று சிரித்துச் சிரித்து, ஆங்கு அடுக்குமாறு அங்கை பற்றி – அங்கே ஏற்றவிதமாக அழகிய கையிற்பிடித்துக்கொண்டு, அங்கவர் ஆவி தன்னைக் கொடுக்குமாறு எண்ணி வல்லே சேட்புலங் கொண்டு போவார் – அவர்கள் உயிரைக் கொடுக்கும்படி நினைத்து விரையத் தூரிதான இடத்திற்குக் கொண்டுபோவார்கள். எ-று.

தான் – அசைநிலை. பற்றி எண்ணிக் கொண்டுபோவாரென முடிக்க. (௧௦௩)

கைத்தல மொன்று நீண்ட காய்ப்புடை வெரிநிற் போட்ட
பைத்தலை பிடிப்ப வொன்று புகாதலைப் பாகு பற்ற
மொய்த்தலை வெய்திப் பின்முன் பார்த்திடு முகத்தராகி
யெய்த்தலி னிருதாள் சோர வேகுவார் வணிக ரெல்லாம்.

இ-ள்: கைத்தலம் ஒன்று நீண்ட காய்ப்பு உடை வெரிநின்போட்ட பைத்தலை பிடிப்ப – ஒருகை மிகுந்த காய்ப்பையுடைய முதுகிற்போட்ட பையின் தலையை இறுகப் பிடித்துக்கொள்ள, ஒன்று புகா தலைப்பாகு பற்ற – ஒருகை சென்று (விழாதபடி) தலைப்பாகையைப் பற்றிக்கொள்ள (ஓடிச்சென்று), வணிகரெல்லாம் அலைவு எய்தி மொய்த்து – வணிகர்களெல்லாம் அலைவடைந்து பின்வந்து கூடி, பின்முன் பார்த்திடும் முகத்தராகி – பின்னும் முன்னும் பார்க்கின்ற முகத்தை யுடையவர்களாய், எய்த்தலின் இருதாள் சோர ஏகுவர் – ஓடி இளைத்தலினால் இருகால்களுஞ் சோரச் செல்வார்கள். எ-று.

யானை வருகின்றதோ என்னும் அச்சத்தால் பின்னும், வழிதப்பாமல் முன்னும் பார்ப்பர் என்பார், முன்பின் பார்த்திடு முகத்தராகி என்றார். பிடிப்ப பற்ற (ஓடிச்சென்று) ஆகி அலைவு எய்தி மொய்த்து ஏகுவார் என முடிக்க. எய்த்தலின் என வருதலின் ஓடுதல் பெற்றாம். (௧௦௪)

துதைந்தவார் புரிநாண் கோடி தொடும்படி துங்க வல்வி
லுதைந்தகால் வாங்கி யஞ்சி யோடுவா ருளைய ராகத்
ததைந்தபா தவங்க டன்னிற் றடைசலாற் றழைத்த தட்டுச்
சிதைந்தயா னங்க டம்மை நீத்தனர் செல்லு வாரும்.

இ-ள்: துதைந்தவார் புரிநாண் கோடி தொடும்படி – செறிந்த நீண்ட முறுக்கையுடைய நாண் நுதியைத் தீண்டும்படி, துங்க வல்வில் உதைந்த கால்வாங்கி – உயர்ந்த வலிய வில்வில் உதைந்த காலையெடுத்து, அஞ்சியோடுவார் உளையராக – அஞ்சியோடுவார் அதனிடத்துள்ளோராக, ததைந்த பாதவங்கள் தன்னில் தடைசலால் – நெருங்கிய விருக்ஷங்களிற் போய்த் தாக்குண்ணுதலால், தழைத்த தட்டுச் சிதைந்த யானங்கள் தம்மை நீத்தனர் செல்லுவாரும் – கட்டிய தட்டுக்கள் உடைந்த தேர்களை நீக்கிச் செல்லுவாரும். எ-று.

தடைசலாற் சிதைந்த யானங்கள் என இயைக்க. செல்லுவார் என்றது பாகரை. (௧௦௫)

நுதலிய பராரைத் தாருப் பொதும்பரை நோக்கு கிற்பார்
மதலிகை மலிந்த வட்ட மணிக்குடை வைத்துச் செல்வார்
புதலிடைப் படைகள் நோக்கிப் போதுவார் புதிய செவ்விக்
கதலிகை யோடு கற்றைக் கவரிகை விடுத்துப் போவார்.

இ-ள்: நுதலிய பரு அரைத் தாருப் பொதும்பரை நோக்கி நிற்பார் – (சிறந்ததாகக்) கருதப்பட்ட பருத்த அரையையுடைய மரங்கள் பொருந்திய சோலையை நோக்கியோடுவாரும், மதலிகை மலிந்த வட்ட மணிக்குடை வைத்துச் செல்வார் – தூக்கங்கள் மிகுந்த வட்டமான மணிகளையுடைய குடைகளை வைத்துச் செல்பவர்களும், புதலிடைப் படைகள் போக்கிப் போதுவார் – பற்றைகளிடத்தே படைகளை யெறிந்துவிட்டுப் போபவர்களும், புதிய செவ்விக் கதலிகையோடு கற்றைக் கவரிகை விடுத்துப் போவார் – புதிய அழகையுடைய கொடிகளையும் மயிர்த் தொகுதியையுடைய சாமரைகளையும் கைவிட்டுச் செல்பவர்களும். எ-று.

ஓடு எண்ணுப்பொருட்டு. உடனிகழ்ச்சியுமாம். (௧௦௬)

குலங்கள் பொற்றொடையினோடு கோசிகஞ் சிந்து வார்பொன்
னலங்கணிப் பேழை கைவிட் டவலிப்பா ரஞ்சி நெஞ்சங்
கலங்கலிற் சரிபு காது கானகங் காண்ப ரோடி
விலங்கலிற் பாதந் தெற்றி மெய்நடுக் குற்று வீழ்வார்.

இ-ள்: குலங்கொள் பொற்றொடையினொடு கோசிகஞ் சிந்துவார் – கூட்டமான பொன்னரிமாலைகளோடு பட்டுக்களையுஞ் சிந்துபவர்களும், பொன்னலங்கு அணிப் பேழை கைவிட்டு அவலிப்பார் – பொன்னாலாகிய விளங்குகின்ற ஆபரணப் பேழைகளைக் கைவிட்டு வருந்துபவர்களும், அஞ்சி நெஞ்சங் கலங்கலின் சரிபுகாது கானகம் காண்பார் – அஞ்சி மனங் கலங்குதலினால் வழியிற் செல்லாமையினாலே காட்டைக் காண்ப

௭

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களும், ஓடி விலங்கலின் பாதம் தெற்றி மெய்ந்நடுக்குற்று வீழ்வார் — ஓடி விலகுதலினாலே பாதம் பின்னிச் சரீரம்நடுங்கி வீழ்வார்களும் (ஆயினார்கள் அச்சோலையின்கண்ணுள்ள வீரர்கள்.) எ—று.

குலம் உயர்ச்சியுமாம். சரிபுகாது கானகம் காண்பார் என்பதற்கு வழியிற் செல்லாது காட்டைநோக்கியோடுவார் என்றல் இத்துணைச் சிறப்பின்று. (க0எ)

இனையன வினைய மாகி யிலங்கிழை மடவா ரோடு
மனையன சேனை யெல்லா மலந்தலை யாய போதில்
வினையன மதமா வெம்போர் வேட்டெழு சீயமொக்கத்
துனையன துடிப்பி னோடு மெழுந்தனன் துங்க வேலான்.

இ—ள்: இனையன வினையம் ஆகி — இவைபோன்ற தொழிலையுடையவர்களாகிய, இலங்கு இழை மடவாரோடும் — விளங்குகின்ற ஆபரணங்களையணிந்த மகளிரோடும், அனையன சேனையெல்லாம் அலந்தலையாய போதில் — அந்தச் சேனைகளெல்லாம் தடுமாற்றமடைந்த பொழுதில், வினையன மதமா வெம்போர் வேட்டெழு சீயம் ஒக்க — போர்த்தொழிலையுடைய மதயானையின் கொடிய போரை விரும்பி எழுகின்ற சிங்கத்தையொக்க, துங்கவேலான் — உயர்ச்சி பொருந்திய வேற்படையையுடையவனாகிய அயன், துனையன துடிப்பினோடும் எழுந்தனன் — விரைவையுடைய சுறுசுறுப்போடும் எழுந்தான். எ — று.

ஒக்க எழுந்தான் என முடிக்க. (க0அ)

மணிக்கழ லரற்றா மாலை புரண்டிடா மருங்கு கோடா
வணிக்குழை யலம்பா குஞ்சி யசைந்திடா வங்கையாடா
தணிக்கரும் விசையி னோடித் தளம்பிடா தரித்தி யார்க்கும்
கணிக்கரும் கதத்த வேகக் கடாமலை யதனைக் கண்டான்.

இ—ள்: மணிக்கழல் அரற்றா — மணிகளையுடைய கழல் ஒலியாதும், மாலை புரண்டிடா — மாலை புரளாதும், மருங்கு கோடா — இடை வளையாதும், அணிக்குழை அலம்பா — அழகிய குண்டலம் அசையாமலும், குஞ்சி யசைந்திடா — குடுமி யசையாதும், அம் கை ஆடா — அழகிய கைகள் ஆடாமலும், தணிக்கஅரும் விசையினோடி — தடுத்தற்கரிய விசையோடும்ஓடித், தளம்பிடா தரித்து—அசையாமற் றரித்துநின்று, யார்க்கும் கணிக்க அரும் கதத்தவேகக் கடாமலையதனைக் கண்டான் — எவர்க்கும் அளவிடற்கரிய வேகத்தையுடைய யானையைக் கண்டான். எ—று.

ஓடும்போது கழலரற்றன் முதலியன நிகழாமல் ஓடுவதே வீரர்க்குரிய சாதுரியமாதலின் இவ்வாறுகூறினார். அது-பகுதிப்பொருள்விகுதி (க0கூ)

மையதே கொண்ட வண்ண வரையன விதனை வாட்ட
நொய்யதே பிறருக் கென்னா நுனிக்குவா னுதலை நொய்திற்
கையதே கொண்ட வில்லின் முனம்வளைத் ததையாற் கன்றி
வெய்யதே விளைக்கு மந்த வேழத்தின் வேக மாதோ.

இ—ள்: மைகொண்ட வண்ண வரைஅன்ன இதனை வாட்ட — கருநிறமான மலையையொத்த இந்த யானையை மெலிவுசெய்ய, பிறருக்கு நொய்யதே என்னா — பிறருக்கு இலகுவாமா என்று, நுனிக்கு வான் நுதலை — கருதுபவனுடைய நெற்றியை, கன்றி வெய்யதே விளைக்கும் அந்த வேழத்தின்வேகம் — அடிப்பட்டுத் தீமையையே விளைக்கும் அந்த யானையின் வேகம், நொய்தில் கையதே கொண்ட வில்லின் முன்னம் வளைத்தது — விரைவிற் கையிற்பொருந்திய வில்லு வளைதற்கு முன்னமே வளையச் செய்தது. எ—று.

அது பகுதிப்பொருள் விகுதி. ஏகாரம் அசைநிலை. ஐ சாரியை. நொய்யதே என்பதிலுள்ள வினா வேகாரம் எதிர்மறை. (ககo)

வல்லவெஞ் சமத்தி னன்றி மதிக்குறை மருப்பு மாவைக் [ளா
கொல்லுத றிருவை வேட்டோர் குறிப்பரோ வெனவுட் கொள்
ளொல்லெனு வுரவு நோன்றா ளொண்சிலை குனிவித் துய்த்தா
னில்லெனத் தடுக்கு மாறோர் நெடுங்கணை யதனை யன்றே.

இ—ள்: வல்ல வெம் சமத்தின் அன்றி — (தாம்) வல்ல வெவ்விய போரிலன்றி, மதிக்குறை மருப்பு மாவைக் கொல்லுதல் — மற்றையவிடத்துப் பிறைபோன்ற கோட்டையுடைய யானையைக் கொல்லுதலை, திருவைவேட்டார் குறிப்பரோ என உட்கொள்ளா — வீரலக்குமியை விரும்பினோர் கருதுவார்களா? என்று கருதி, ஒல்லென உரவு நோன்தாள் ஒண்சிலை குனிவித்து — விரைவாக மிக்க வலிமை பொருந்திய ஒள்ளிய வில்லை வளைத்து, நில்லெனத் தடுக்குமாறு ஓர் நெடுங்கணையதனை யுய்த்தான் — நில்லென்று தடுக்கும்படி ஒரு நெடிய அம்பினைச் செலுத்தினான். எ—று.

அரசர்களுடைய வனகரியாதலின் இதனைக் கொல்லல் கூடாதென்று கருதினான் என்பார் குறிப்பரோ என வுட்கொள்ளா என்றார். உட்கொள்ளா குனிவித்து உய்த்தான் என முடிக்க. (ககக)

நிற்றிபிக் கடரே லென்ன வுணர்த்துவா னெறியி னெற்றி
கொற்றொழிப் பகழி யற்பங் கூர்ந்தலை குழித்த லோடும்
பற்றிய சாப வேழப் படிவம்விட் டலங்கு சோதி
செற்றிய வுருக்கொண் டாங்கோர் தேவினிற் றோன்றி நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ-ள்: நிற்றி மிக்கு அடரேல் என உணர்த்துவான் நெறியின் - நிற்குதி மிக்க நெருக்காதே என்று உணர்த்துவானுடைய முறைமைபோல, நெற்றிக் கொல் தொழில் பகழி கூர்ந்தலை குளித்தலோடும் - நெற்றியிலே கொற்றொழிலையுடைய அம்பானது கூரிய நுதி சிறிது ஊடுருவிய அளவில், பற்றிய சாப வேழப் படிவம் விட்டு - தன்னைப்பற்றிய சாபத்தாலடைந்த யானை வடிவையொழித்து, அலங்கு சோதி செற்றிய உருக் கொண்டு - விளங்குகின்ற ஒளிசெறிந்த வடிவைக் கொண்டு, ஆங்கு ஓர் தேவினில் தோன்றி நின்றான் - அங்கே ஒரு தேவனைப் போலத் தோன்றி நின்றான். எ-று.

உணர்த்துவான் என்பதைத் தொழிற்பெயராகக் கோடலுமாம். குளித்தலோடும் விட்டுத் தோன்றி நின்றான் என முடிக்க. (ககஉ)

மாமயந் திவ்விய காந்தி மண்டலம் சூழ நாப்பண்
காமரு முருவிற் றோன்றிக் காட்சியிற் றலையாய் நின்றோன்
கோமகன் றன்மேற் றன்னு ணினைப்பினிற் கொண்ட தண்டார்த்
தேமரு தருவின் வாசச் செழுமலர் தூவிச் செப்பும்.

இ-ள்: மாமயந் திவ்ய காந்தி மண்டலம் சூழ - திருவின் மயமான மேலான காந்திமண்டலஞ்சூழ, நாப்பண் காமரும் உருவின் தோன்றி - நடுவே விரும்பப்படுகின்ற வடிவோடு தோன்றி, காட்சியின் தலையாய் நின்றோன் - தோற்றத்தினால் சிறந்து நின்றவன், கோமகன் தன்மேல் - அரசனாகிய அயன்மீது, தன் உள் நினைப்பினின் கொண்ட - தன் மன நினைப்பாற் கொண்ட, தண் தார்த் தருவின் தேமரு வாசச் செழுமலர் தூவிச் செப்பும் - தண்ணிய பூவரும்பையுடைய கற்பகதருவின் தேனைக் கொண்ட வாசனைபொருந்தியசெழுமையாகிய பூக்களைத்தூவிச் சொல்லுவான். எ-று.

சூழத் தோன்றி நின்றோனென இயைக்க. (ககங)

தந்திர குலத்துட் டோன்றும் பிரியதரி சனனே தானென்
தந்தையென் நாமந் தானும் பிரியம்வத னென்ன லாமா
லந்தமின் மதங்க நாம முனிவனெற் கரிய சாபந்
தந்திட வவன்றன் செம்பொற் றாண்மல ரிறைஞ்சி யேத்தா.

இ-ள்: என் தந்தை - என் பிதா, தந்திரகுலத்துள் தோன்றும் பிரியதரிசனனே - வித்தியாதர குலத்துட் டோன்றிய பிரியதரிசனனேயாம், என் நாமந் தானும் பிரியம்வதன் என்னலாம் - என்பெயரும் பிரியம்வதன் என்று சொல்லலாம், அந்தம் இல் மதங்க நாம முனிவன் எற்கு அரியசாபம் தந்திட - அழிவில்லாத மதங்கர் என்னும் பெயரையுடைய முனிவர் எனக்கு அரிய சாபத்தைத் தர, அவன் தன் செம்பொன் தாள்மலர் இறைஞ்சி ஏத்தா - யான் அவருடைய சிவந்த பொன்மயமாகிய பாததாமரைகளை வணங்கித் துதித்து. எ-று.

ஏத்தா என்பது வருஞ் செய்யுளில் என்னவென்பதனோடு முடியும். இது முதலிய ஆறுசெய்யுள்களும் ஒருதொடர். (ககச)

ஐயவென் மதத்தி னானி னகத்தெழு சீற்ற மாற்ற [னத்
வையசொற் றலைமேற் கொண்டேன் மாறுமா றுரைமி னென்
துய்யமண் புரக்கு மிக்கு வாகுவின் மரபிற் றோன்றுஞ்
செய்யவ னயனென் றோதுஞ் செம்மலிற் றீரு மென்றான்.

இ-ள்: ஐய என் மதத்தினால் நின் அகத்து எழு சீற்றம் மாற்ற - ஐயனே! என் அகங்காரத்தினாலே உன் மனத்திலுண்டான கோபத்தை நீக்குக, வைய சொல் தலைமேல் கொண்டேன் - நீர் சபித்த சொல்லை என் சிரமேற் கொண்டேன், மாறும் ஆறு உரைமின் என்ன - அது நீங்கும் வழியைச் சொல்லுமின் என்று கூற, துய்ய மண் புரக்கும் இக்குவாகுவின் மரபில் தோன்றும் - பரிசுத்தமாகிய பூமியைக் காக்கின்ற இக்குவாகு என்னும் அரசனுடைய வம்சத்திற் றோன்றும், செய்யவன் அயன் என்று ஓதும் செம்மலின் தீரும் என்றான் - செம்மையையுடையோனாகிய அயன் என்று கூறும் பெருமையிற் சிறந்தவனாகிய அரசனால் (இச்சாபம்) நீங்குமென்று கூறினான். எ-று.

மாற்ற என்றது அகரவீற்று வியங்கோள் வினைமுற்று, இனி ஆற்ற எனக் கண்ணழித்துத் தணிக்குக எனப் பொருள்கோடலுமாம். சீற்றம் ஆற்ற என்பதற்கு சீற்றம் உண்டாக்க எனப் பொருள்கூறி, ஆற்ற என்னுஞ் செயவெனெச்சத்தை வைய என்பதனோடு முடித்தலுமாம். (ககரு)

செம்மையிற் சீத நீர்வெந் தீயினா தபத்தி னொன்றின்
வெம்மையுற் றொழிந்த காலைத் தன்குணம் விளக்கு மாபோ
லம்முனி யுரைத்த சொற்கொண் டன்றுதொட் டின்று காறு
மைம்மலர்க் கானந் தன்னில் வழுவையாய் வதிந்திட் டேனே.

இ-ள்: செம்மை சீத நீர் - செம்மையான குளிர்ந்த நீரானது, வெந் தீயின் ஆதபத்தின் ஒன்றின் வெம்மையுற்று - வெவ்விய அக்கினியின் கண் (அல்லது) வெய்யிலின்கண் பொருந்தின் வெப்பத்தைப்பொருந்தி, ஒழிந்த காலைத் தன்குணம் விளக்குமாபோல் - (அவற்றோடு பொருந்துதலை) ஒழிந்த காலத்தில் தன் குணத்தைக் காட்டுமாறுபோல (த் தனக்குரிய சாந்தகுணத்தைப் பொருந்தி), அம்முனி யுரைத்த சொல் கொண்டு - அம்முனிவர் சொல்லியஅவ்வார்த்தையை யேற்று, அன்றுதொட்டின்று காறும் - அன்று தொடங்கி யின்று வரைக்கும், மைமலர் கானம் தன்னில் வழுவையாய் வதிந்திட்டேன் - கரியமலர்களையுடைய காட்டிலே யானையாகி (உன் வருகையை நோக்கி) இருந்தேன். எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன் சாரியை. விளக்குமாபோல் பொருந்தி உரைத்த சொல் என இயைக்க. தனக்குரிய சாந்தகுணத்தைப் பொருந்தி என்னுஞ் சொற்றொடர் அவாய்நிலையானே வருவிக்கப்பட்டது. வெந்தீயின் ஆதபத்தின் ஒன்றின் என்பதற்கு வெவ்விய அக்கினியினுலாவது வெய்யிலினுலாவது எனப் பொருள்கோடலுமாம். (௧௧௬)

பந்தவல் வினையின் சும்மைப் பையுள்வன் வடிவ மாறி
யுய்ந்தன னின்னாற் கைம்மா றொன்றுசெய் தொழியே னேலென்
சுந்தர நிலைமை யென்னு நங்குலத் தொல்லோ ராய
தந்திரர்க் குரிய பாணந் தருகுவ னென்னச் சாற்றா.

இ-ள்: பந்த வல் வினையின் சும்மைப் பையுள் வன் வடிவம் மாறி – (அங்ஙனமிருந்த யான்) பந்தமான வலிய வினையின் பாரத்தையுடைய துன்பத்தைத் தரும் வலிய (யானையின்) வடிவம் நீங்கி, நின்னால் உய்ந்தனன் – உன்னால் உய்ந்தேன், கைம்மாறு ஒன்று செய்து ஒழியேனேல் – இதற்குப் பிரதியுபகாரமொன்றை யுனக்குச் செய்து விடேனேல், என் சுந்தர நிலைமை என்னும் – என் அழகிய நிலை என்னவாகும், நம் குலத் தொல்லோராய தந்திரர்க்கு உரிய பாணம் தருகுவன் என்னச் சாற்றா – நங்குலத்திலுள்ள பழையோராய வித்தியாதரர்க்குரிய பாணத்தைத் தருவேன் என்று சொல்லி. எ-று.

சாற்றா என்பது ௧௧௯-ம் செய்யுளில்வரும் என்றான் என்பதோடு முடியும். செய்தொழியேனேல் என்பதில் ஒழி துணிவுப்பொருள் விகுதி. இதற்குச் செய்துபோகேனேல் எனப் பொருள்கூறலுமாம். (௧௧௭)

ஆங்கெதிர் விடலொன் றாட லங்கையி னுப காலை
வாங்கிடி லொன்றி ரண்டு மந்திரத் ததுவா லாவித்
தீங்கிது செய்யா மோகஞ் செய்திடுஞ் செருவிற் றெவ்வ
ரீங்கிதன் பெயருஞ் சம்மோ கனமென வியம்ப லாமே.

இ-ள்: ஆங்கு எதிர் விடல் ஒன்று – இப்பாணம் ஆங்கே எதிராக விடவிரும்பினால் ஒரு மந்திரமும், ஆடல் அங்கையின் ஆயகாலை வாங்கிடில் ஒன்று – வெற்றி அழகிய கையின்கணுய பொழுதே (கிடைத்த பொழுதே) வாங்க விரும்பினால் ஒரு மந்திரமுமாக, இரண்டு மந்திரத்து – இரண்டு மந்திரங்களை யுடையது, இது செருவில் ஆவித் தீங்கு செய்யா மோகஞ் செய்திடும் – இது போரிலே பகைவருக்கு உயிரைத் தீங்கு செய்யாது மயக்கஞ் செய்யும், இதன் பெயருஞ் சம்மோகனம் என இயம்பலாம் – இதன் பெயருஞ் சம்மோகனம் என்று கூறலாம். எ-று.

ஆங்கு என்பது செருவைச் சுட்டிநின்றது. சம்மோகனம் – நன்கு மயக்குவது. (௧௧௮)

சிக்குறத் தீங்கு செய்யாப் பிறர்க்கின்னு செய்தே மென்றுண்
னெக்குள மெலியா நின்றாய் நிலைமைய தன்று நாணன்
மிக்குள மறுப்பா யல்லை வென்றியோ யிரத்து முன்னை
யிக்கணை கோடி யென்றா னிளவலு மிதய மொத்தான்.

இ-ள்: சிக்குறத் தீங்குசெய்யாப் பிறர்க்கின்னு செய்தேம் என்று – அகப்படத் தீங்கு செய்யாத பிறருக்குத் துன்பம் செய்தேம் என்று, உள் நெக்கு உளம் மெலியா நின்றாய் – உள்ளே கசிந்து மனம் மெலிந்து நின்றாய், நிலைமையது அன்று – (அது) தகுதியுடைய தன்று, நாணன் மிக்கு உளம் மறுப்பாயல்லை – நாணினால் மிகுந்த மனம் மறுக்காதே, வென்றியோய் இரத்தும் – வெற்றியை யுடையவனே உன்னை இரப்பேம், இக்கணை கோடி என்றான் – இப்பாணத்தை ஏற்றுக் கொள்ளுதி என்றான், இளவலும் இதய மொத்தான் – இளமைப் பருவத்தை யுடையோனாகிய அயனும் மனமியைந்தான். எ-று.

உம்மை – சிறப்பும்மை. (௧௧௯)

திருந்துமன் னுயிர்கட் கெல்லாந் தாய்முலைப் பாலிற் றெண்ணீ
ரருத்துநன் மதைநீ ரேந்தி யாசம னஞ்செய் தன்பா
லுருத்தெரி வரிய மார னுளத்தையு முயிர்கொள் காலன்
கருத்தையு மயக்கு மோகக் கணையது கைக்கொண் டானே.

இ-ள்: திருந்துமன் உயிர்கட் கெல்லாம் தாய் முலைப்பாலின் தெண்ணீர் அருத்தும் – சிறந்த நிலையான உயிர்களுக் கெல்லாம் தாய் முலைப்பாலை ஊட்டுதலைப்போலத் தெளிந்த நீரையூட்டுகின்ற, நன்மதை நீர் ஏந்தி ஆசமனஞ் செய்து – நன்மதை யாற்றின் நீரை யள்ளி ஆசமனஞ் செய்து, அன்பால் – அன்போடு, உருத் தெரிவரிய மாரன் உளத்தையும் உயிர்கொள் காலன் கருத்தையும் மயக்கும் – அரூபியாகிய மன்மதனுடைய மனத்தையும் உயிர்களைக் கொள்ளுகின்ற இயமனுடைய அறிவையும் மயக்குகின்ற, மோகக் கணை அது கைக்கொண்டான் – மோகக் கணையாகிய அதனைக் கையிற்கொண்டான். எ-று.

திருந்து – விகாரம். ஊட்டுதல் என்னும் வினை அவாய்நிலையானே வருவிக்கப்பட்டது. உயிர்களை மயக்குவோரையும் மயக்குங் கணை என்பார் உருத்தெரியாத........மயக்குங்கணை என்றார். (௧௨௦)

அம்பொடு விஞ்சை தானு மளித்தவ னகன்றிட் டன்னான்
சம்பர நளின வாவிச் சயித்திர விரத மென்னு
மும்பரொண் சோலை புக்கா னுலகினுக் கொருவனுய
நம்பியும் விதர்ப்ப மென்னு நாமநன் னாடு சேர்ந்தான்.

84689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ-ள்: அம்பொடு விஞ்ஞை தானும் அளித்து - அம்பையும் மந்திரத்தையும் கொடுத்து, அவண் அகன்றிட்டு - அவ்விடத்தை நீங்கி, அன்னான் சம்பர னளின வாவிச் சயித்திர விரத மென்னும் உம்பர் எண் சோலை புக்கான் - அவன் நீர் பொருந்திய தாமரைத்தடாகத்தையுடைய சயித்திரவிரத மென்று சொல்லும் தேவர்கள் மதிக்கின்ற சோலையையடைந்தான், உலகினுக் கொருவனய நம்பியும் விதர்ப்பம் என்னும் நாம நல்நாடு சேர்ந்தான் - உலகத்திற்கு ஏகசக்கிராதிபதியாகிய அயனும் விதர்ப்பமென்று சொல்லும் பெயரையுடைய நல்ல நாட்டை அடைந்தான். எ-று. நம்பியும் என்புழி உம்மை - எச்சம். (கஉக)

வேறு.

நிரம்பொளிப்பங் கயக்கானி னிடையொதுங்கி நிலாமுக்கி
குரம்பொளிக்கும் வயறோறுங் குவைத்தாளக் குலக்கொடியின்
பரம்பொளிக்கு மதியினிலா நலப்பாடு பருகுவான்
வரம்பொளித்து வரநாணி மடையொளிக்கும் வளையெல்லாம்.

இ-ள்: குரம்பு ஒளிக்கும் வயல்தோறும் நிலாமுகி நிரம்பு ஒளிப் பங்கயக்கானிடை ஒதுங்கி - பாழ்நிலங்கரந்த வயறோறுங் நிலாமுகிகள் நிறைந்த ஒளியையுடைய தாமரைக்காட்டினிடத்தே நடந்து, குவைத்தாளக் குலக்கொடியின் பரம்பு ஒளிக்கு-குவியலான முத்துக்கூட்டங்களின் ஒழுங்கினது பரம்பிய ஒளிக்கு, மதியின் நிலா நலப்பாடு பருகுவான் வரம்பு ஒளித்துவா - சந்திரனுடைய நிலாவிலுள்ள நன்மைப்பாட்டை அவற்றினிடத்தே பருகும்படி வரம்புகளில் ஒளித்துவர, நாணி வளையெல்லாம் மடையொளிக்கும் - (அவற்றின் வரவிற்கு) நாணிச் சங்குகளெல்லாம் நீர்மடைகளில் ஒளிக்கும். எ-று.

ஒளிக்குவர வளையெல்லாம் நாணி ஒளிக்கும் என இயைக்க. ஈனும் பொழுது வருதலின் நாணி ஒளிக்கும் என்க. (கஉஉ)

கிளராமை யில்வரம்பின் கிளைத்தேரை யொலியோசை
தளராமே தகுமொழியு மிரங்கலுஞ்சாற் றலினுக
வுளராமை கொடுபணில மணியீன வொருபாலின்
வளராமை சினையுளைந்து மனையிரங்கு மறுபாலே.

இ-ள்: கிளராமை இல் வரம்பின் கிளைத்தேரை ஒலி ஓசை - உயர்ந்த வரம்பிலுள்ள கூட்டமான தேரைகளின் ஒலியின் சத்தம், தளராமே தகுமொழியும் இரங்கலும் சாற்றலினுக-தளராதபடி தகுதி பொருந்திய வார்த்தைகளையும் இரங்கல் வார்த்தைகளையும் சொல்லுதல்போலாக, உளராமை கொடு பணிலம் மணி ஒரு பாலின் ஈன - அசையாமைகொண்டு சங்குகள் ஒருபாலிலே முத்துக்களையீன, மறுபால் வளர் ஆமை சினை உளைந்து மனை இரங்கும் - மறுபக்கத்தில் இளமை வளராகின்ற ஆமைகள் சூலுளைந்து தம் அளைகளாகிய மனைகளில் இரங்காநிற்கும். எ-று.

ஆக ஈன இரங்கும் எனமுடிக்க. கருப்பவேதனை யுறுவார்க்குப் பக்கத்திலுள்ளோர் ஆறுதல்மொழியும் இரங்கல்மொழியும் கூறுத லியல்பாதலின் அதனைத் தேரையின்மேலேற்றி, தேரை யொலியோசை ...... சாற்றலினுக என்றார். (கஉங)

விரியவரு மயற்புலத்து விளங்கலவன் வரவோர்ந்து
தெரியவரும் பேராசைச் சிறுகூழு முளதாக
மரியவரும் பெருநாரை வலியப்பான் மறுத்தேகிற்
பெரியதென விருந்தயர வழிவிலக்கும் பெடைஞெண்டே.

இ - ள்: பெடைஞெண்டு - பெடைஞெண்டானது, விரிய வரும் அயற்புலத்து விளங்கு அலவன் வரவு ஓர்ந்து - பரந்த அயற்புலத்தில் விளங்குகின்ற ஆண் ஞெண்டின் வரவை அறிந்து சென்று, தெரிய அரும் பேர் ஆசைச் சிறுகூழும் உளதாக - தெரிதற்கரிய பேராசையைத்தரும் சிற்றுணர்வுமுளதாக, அப்பான் மறுத்தேகில் பெருநாரை மரியவரும் வலிபெரியது என - அப்பால் மறுத்துச் செல்லுகில் பெரிய நாரை (நீர்) இறக்கும்படி வரும், அதன்வலியோ மிகப்பெரிது என்று, விருந்தயரவழிவிலக்கும் - விருந்துசெய்யும்படி வழியைவிலக்கும். எ-று.

ஓர்ந்துவிலக்கும் எனவிலக்கும் அயரவிலக்கும், எனத் தனித்தனி கூட்டி முடிக்க. மரீஇய என்பது மரிய என விகாரமாய் நின்றது. அணுக வரும் எனினுமாம். இருந்தயர என்றல் பொருத்தமின்று. (கஉச)

மணப்பதுமப் பொகுட்டூறு மதுவருந்தி யருந்தியினப்
பிணக்கிநெடுங் கான்மயக்குந் தலைமயக்கும் பெரிதாக
விணக்கினிமிர் கழைக்கரும்பு நனிகொடுத்த விலைக்கரத்தின்
றணப்பறநின் றிருப்பாலுந் தள்ளாடுந் தடஞ்சாலி.

இ - ள்: தடஞ்சாலி-பெருமைபொருந்திய நெல்லானது, மணப்பதுமப் பொகுட்டு ஊறும் மது அருந்தி யருந்தி - நறுமணத்தையுடைய தாமரைப்பொகுட்டி லூறிய மதுவைக் குடித்துக்குடித்து, இனப்பிணக்கி நெடும் கால்மயக்கும் தலைமயக்கும் பெரிதாக - (காற்றின் அசைதலினல் தன்) இனநெற்களோடு மாறுபடுதலும் அடிகள் ஒன்றோடொன்று கலத்தலும் தலைகள் மயங்கலும் பெரிதாகப் பொருந்த, இணக்கில் நிமிர் கழைக்கரும்பு நனிகொடுத்த இலைக்கரத்தின் தணப்பு அற நின்று -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை இணக்குதலோடு உயர்ந்த கழைக்கரும்பு மிகவுங்கொடுத்த இலையாகிய கையில் நீக்கமறநின்று. இருபாலும் தள்ளாடும் – இருபாலும் அசையும். எ – று.

இணக்கின் கொடுத்த இலைக்கரம் என இயைக்க. இணக்குதலின்கண் மிக்க கரும்பு எனினுமாம். கழைக்கரும்பு – நாணற்கரும்பு இதன்கண்சாலி கள்ளைக்குடித்து அதனாலே இனத்தொடு பிணங்குதலையும் காற்பிணக்கத்தையும் தலைமயக்கத்தையும் பொருந்தி கரும்பாகிய தன்னைத் தேற்றும் சினேகிதன் கீழேவிளாதபடி தாங்குமாறு கொடுத்த இலையாகிய கையில் நின்று இருபக்கத்திலும் தள்ளாடும் என்பதுந் தொனித்தல் காண்க.

குழுமுதிருஞ் சுரும்பினினங் குடையமலர்க் கொழுந்தாது
கெழுமிநிலத் துகாதுபுனற் கிளர்தாரை வரம்படைப்பத்
தழைமுகவஞ் சினைபோக்கி விசும்பளந்து தகுகால
மழைமுகிலின் வயினுடைத்து மடைதிறக்கும் மலர்ச்சோலை.

இ – ள்: குழு முதிருஞ் சுரும்பு இனம் குடைய – கூட்டத்தான் மிக்க வண்டுகளின் இனங்கள் குடைய, மலர்க் கொழுந்தாது கெழுமி – மலரிலுள்ள கொழுவிய தாதுக்கள் கூடி, நிலத்து உகாது கிளர் புனல் தாரைவரம்பு அடைப்ப – நிலத்திற் சொரியாதபடி மேகத்தினது கிளருகின்ற நீர்த்தாரையின் எல்லையை அடைக்க, மலர்ச்சோலை – மலரையுடைய சோலைகள், தழைமுக அம் சினைபோக்கி விசும்பு அளந்து – தழைத்த முகத்தையுடைய அழகிய சினைகளைச் செலுத்தி ஆகாயத்தை அளந்து, தகு காலமழைமுகிலின் வயினுடைத்து மடைதிறக்கும் – தக்க காலமழையைச் சொரிகின்ற அம்மேகங்களின் வயிற்றையுடைத்து மடையத்திறக்கும். எ – று.

அடைப்பத் திறக்கும் எனமுடிக்க. மடை – அடைப்பு. (௧௨௬)

கடிகாட்டும் பெருவளத்தி னிரந்துமிகைக் கவின்காட்டப்
படிகாட்டு நிலக்குநில மெளியவோ வயற்பானற்
செடிகாட்டுஞ் சசிபதிநற் சேய்காட்டுந் திமிசுமுட
மடிகாட்டும் புனற்றேவு மால்காட்டு மலர்க்காயா.

இ – ள்: கடிகாட்டும் பெருவனத்தின் நிரந்து மிகைக் கவின் காட்ட – மிகுதியைக் காட்டுகின்ற பெரிய வனத்தினால் நிறைந்து மேலான அழகைக் காட்டுதற்கு, படிகாட்டும் நிலக்கு நிலம் எளியவோ – பூமிகாட்டுகின்ற ஒரு நிலத்திற்கு ஒரு நிலம் எளியதோ? (அன்று. என்னையெனில்,) வயற்பானற்செடி சசிபதி காட்டும் – வயலிலுள்ள கருங்குவளைச்செடிகள் இந்திரனைக் காண்பிக்கும், திமிசு சேய் காட்டும் –

(குறிஞ்சியிலுள்ள) வேங்கைகள் குமரனைக் காட்டும், முடமடி புனற்றேவு காட்டும் – (நெய்தலிலுள்ள) தாழைகள் வருணனைக் காட்டும், மலர்க் காயா மால் காட்டும் – மலரையுடைய காயாமரங்கள் விஷ்ணுவைக் காட்டும். எ – று.

ஓ – எதிர்மறை. தம் வளஅழகைக் காட்டுதற்கு நிலங்கள் ஒன்றற்கொன்று தோல்வியடைவனவல்ல, என்னையென்றால், மருதம் இந்திரனைக் காட்டக் குறிஞ்சி குமரனைக் காட்டும்; அது குமரனைக்காட்ட நெய்தல் வருணனைக் காட்டும்; அது வருணனைக் காட்ட, முல்லை விஷ்ணுவைக் காட்டும் என்பது கருத்து. குவளை கருநிறத்தால் இந்திரனையும், வேங்கை செந்நிறத்தால் முருகனையும், தாழை வெண்ணிறத்தால் வருணனையும், காயா நீலநிறத்தால் விஷ்ணுவையும் காட்டும் என்க. (௧௨௭)

வேறு.

கனவளத் தெழிலுங் கோட்டுக் கல்லகக் கவினுங் காமர்
வனவளத் தியலு நன்னீர் வயல்வளத் தழகும் வாய்ந்த
வினவளத் தியன்ற செவ்வி யீர்ம்புன னாட்டின் செல்வம்
புனைவளத் திலங்கு பூணு னோக்குபு போயி னானே.

இ – ள்: கனம் வளத்து எழிலும் – நீரையுடைய கடல் வளத்தின் அழகும், கோட்டுக் கல்லகக் கவினும் – சிகரத்தையுடைய மலைகளிலுள்ள வளத்தின் அழகும், காமர் வனவளத்து இயல்பும் – அழகிய காட்டிலுள்ள வளத்தினழகும், நன்னீர் வயல்வளத்து அழகும் – நல்ல நீரையுடைய வயல்வளத்தின் அழகும் ஆகிய, வாய்ந்த இன்ன வளத்து இயன்ற செவ்வி ஈர்ம்புனல் நாட்டின் செல்வம் – சிறந்த இத்தன்மையான வளங்களாலான அழகையுடைய குளிர்ந்த நீர்நாடாகிய விதர்ப்ப நாட்டின் செல்வத்தை, புனை வளத்து இலங்குபூணான் நோக்குபு போயினான் – அணிந்த வளத்தோடு விளங்கிய ஆபரணங்களையுடையவனாகிய அயன் பார்த்துக் கொண்டு சென்றான். எ – று.

வாய்ந்த வளம் என இயைக்க. (௧௨௮)

துனை துதைந் தறுகா றம்மிற் றொழுதியிற் கொழுதிச் சூழ்ந்து
நனை துதைந் துழக்கும் பைந்தார் நம்பிதன் வரவு கேளா [செல்
வினை துதைந் திலங்கு வெள்வேல் விதர்ப்பர்கோன் மதிக்கு முன்
கனை துதைந் தாற்று வாவின் கடலென வெதிர்கொண் டானே.

இ – ள்: அறுகால் துனை துதைந்து தம்மில் தொழுதியில் கொழுதிச் சூழ்ந்து – வண்டுகள் செறிவுபொருந்தித் தம்முள்ளே கூட்டத்தோடுகுடைந்து சூழ்வுற்று, நனை துதைந்து உழக்கும் பைந்தார் – அரும்

பிற்செறிந்து உழக்குகின்ற பசியமாலையை அணிந்த, நம்பிதன் வரவு கேளா — ஆடவருட் சிறந்த அயனுடைய வரவைக்கேட்டு, விளை துதைந்து · இலங்கு வெள்வேல் விதர்ப்பர்கோன் — போர்த்தொழிலமைந்து விளங்குகின்ற, வெண்மையாகிய வேற்படையையுடைய விதர்ப்பராசன், மதிக்கு முன்செல்க கனைதுதைந்து ஆற்று உவாவின் கடலென எதிர்கொண்டான் — சந்திரனுக்கு முன்னே பிரவாகித்துச் செல்கின்ற செறிவுபொருந்தி ஒலிக்கின்ற பூரணைகாலத்துக் கடலைப் போல எதிர்கொண்டான். எ — று.

மங்கலவாத்திய முதலியவற்றோடு எதிர்கொண்டானுதலின் கனைதுதைந்தாற் றுவாவின் கடலென என்றும், பிரவாகம் சந்திரனை நோக்கிச் செல்லுதல்போல அயனுக்கு முன்னே சேனைவெள்ளத்தோடுஞ் சென்று எதிர்கொண்டான் என்பார் மதிக்குமுன்செல் கடலென என்றுங் கூறினர். (கஉகூ)

வந்துளோன் விதர்ப்ப ராசன் மற்றையவ் விதர்ப்ப நாடா
ளிந்திர திருவி னனிவ் விளவலென் றியாரு மெண்ண
வெந்திறற் போசன் றன்பாற் றிருவெலாம் வேள னார்க்குச்
சிந்தைகொள் வணக்கத் தோடும் சிறப்பொடும் வழங்கி னானே.

இ — ள்: வந்துளோன் விதர்ப்பராசன் — புதிதாக வந்தவனாகிய அதிதியே விதர்ப்பராசன் என்றும், அவ்விதர்ப்ப நாடு ஆள் இந்திர திருவினன் இ இளவலென்று — அந்த விதர்ப்பநாட்டை யாளுகின்ற இந்திர செல்வத்தையுடையவனாகிய அரசன் இந்த அயன் என்றும், யாரும் எண்ண — தன்னுடன் வந்தோர் அனைவருங் கருதி நடக்கும்படி, வெந்திறற் போசன் — வெவ்விய திறலையுடைய போசராசன், தன்பால் திரு எலாம் — தன்னிடத்திலுள்ள அரசசெல்வங்களையெல்லாம், வேளனார்க்கு சிந்தைகொள்வணக்கத்தோடும் சிறப்பொடும் வழங்கினான் — மன்மதனை யொத்தவனாகிய அயனுக்கு மனத்திற்கொண்டவணக்கத்தோடும் சிறப்போடுங் கொடுத்தான். எ — று.

மற்று — அசை. ஐ சாரியை. தனக்குரிய முதன்மைகள் யாவற்றையும் கொடுத்தான் என்பார் தன்பாற் றிருவெல்லாம் .... வழங்கினான் என்றார். சிறப்பு உபசாரம். (கஙo)

எண்படாக் காத லார்க்குக் காவலின் றென்ப போலக்
கண்படா மதனன் னானைக் காணிய கருதிக் காவற்
திண்படா நிமிர்ந்த வாரை கடந்துமேற் றிகழ்ந்து மேக
வெண்படாத் திடையி னொல்கித் தோன்றினள் மாடமின்னே.

இ — ள்: மாடமின் — மாடமாகிய பெண்ணானவள், கண்படா மதன் அன்னானைக் காணிய கருதி — கண்ணுக்குத் தோன்றாத மன்மதனை யொத்தவனாகிய அயனைக் காணும்படி விரும்பி, எண்படாக் காதலர்க்குக் காவல் இன்று என்பபோல — அளவுபடாத காதலையுடையார்க்குக் காவல் இல்லை என்பதுபோல, காவல்திண்படாம் நிமிர்ந்த ஆரை கடந்து மேல் திகழ்ந்து — காவலைக் கொண்டதாகிய திண்ணிய கொடிகள் நிமிர்ந்துள்ள மதிலைக் கடந்து மேலே விளங்கி, மேக வெண்படாத்து இடையின் ஒல்கித் தோன்றினள் — (வெண்) மேகமாகிய வெள்ளைப் புடைவையின் இடையே ஒடுங்கித் தோன்றினாள். எ — று.

காவல் ஆரை என இயைக்க. இது தற்குறிப்பும் உயர்வு நவிற்சியும், உருவகமும் கலந்துவந்த சங்கீரணவணி. (கஙக)

சேண்விடா தெழுந்து செல்வ மணவினைத் திருவின் செவ்வி
மாண்விடா திலங்கு மாயின் மனம்பிற வவ்வ லெங்கே
யெண்விடா திசைந்து கொள்ளக் கண்விடா னியன்று நோக்கிப்
பூண்விடா திலங்கு மார்பன் புனைநெறிப் போயி னானே.

இ — ள்: செல்வ மணவினைத் திருவின் செவ்வி — வளம்பொருந்திய மணத்தொழிலுக்குரிய அலங்காரத்தின் சிறப்பு, சேண்விடாது எழுந்து மாண்விடாது இலங்குமாயின் — தூரத்திலேயே நீங்காது எழுந்து மாட்சிமையை விடாமல் விளங்குமாயின், மனம் பிற வவ்வல் எங்கு — மனம் பிறவற்றைக் கவர்வது எப்படி? (அவற்றையே பற்றுமென்றபடி,) எண்விடாது இசைந்துகொள்ள — (அம்மனம்) வலிமையோடு விடாது பற்றிக்கொள்ள, கண்விடான் இயன்று நோக்கி — கண்ணை (வேறு விடயத்தில்) விடாதவனாய் முயன்று பார்த்து, பூண் விடாது இலங்கு மார்பன் புனைநெறிப் போயினான் — ஆபரணம் நீங்காது விளங்குகின்ற மார்பையுடையவனாகிய அயன் அலங்கரிக்கப்பட்ட வழியிற் சென்றான். எ — று.

நோக்கிப் போயினான் எனமுடிக்க. (கஙஉ)

சேய்க்கொண்ட வகழிக் கஞ்சத் திருமனை யிருந்த கன்னி
யேய்க்கொண்ட வன்னம் பாங்க ரெய்திளஞ் சேவற் கின்பப்
பேய்க்கொண்ட காதல் பொங்க வகவிதழ் பிடுங்கிச் செய்ய
வாய்க்கொண்டு சூட்ட நோக்கி மணிமதில் வாயில் புக்கான்.

இ—ள்: சேய்க்கொண்ட அகழிக் கஞ்சத் திருமனை இருந்த—நீண்ட அகழியிலுள்ள தாமரை மலராகிய அழகிய வீட்டிலிருந்த, கன்னி எய்க்கொண்ட அன்னம் — கன்னிப்பருவ மிளையந்த ஓர் பெடை அன்னம், பாங்கர் எய்து இளம் சேவற்கு — பக்கத்தே பொருந்திய ஒரு இளஞ் சே

வலுக்கு, இன்பப் பேய்க்கொண்ட காதல் பொங்க – இன்பத்தைத் தருகின்ற பேயைப்போல் நீங்காத ஆசையானது மேற்பட, அகவிதழ் பிடுங்கிச் செய்ய வாய்க்கொண்டு சூட்ட – (அத்தாமரைப்பூவிலுள்ள) அகவிதழைப் பிடுங்கிச் சிவந்தவாயிற் கொண்டு சூட்ட, நோக்கி – (அதனைப்) பார்த்து, மணிமதில் வாயில் புக்கான் – அழகிய மதிலின் வாயிலை அடைந்தான். எ–று.

இந்தச் சோபனநிகழ்ச்சியினாலே தனக்கு மாலைசூட்டப்படும் என்பதை மனதிற் குறித்துச் சென்றான் என்பார், சேய்க்கொண்ட........ நோக்கி என்றார். இளஞ்சேவல் – இளமைப்பருவத்தை யுடையதாகிய சேவல். இன்பக்காதல் என இயைக்க. (௧௩௩)

ஒண்மணப் பதும வீடு திறந்துவந் தொருது செம்பொற்
பெண்மணப் புடைய ளாகிப் பிரிகலாள் பிறங்கி வைகத்
தண்மணப் போது சிந்திச் சந்தனந் தெளித்து முத்த
வெண்மணற் பரப்பியிட்ட வீதிவாய் வியந்து போனான்.

இ–ள்: செம்பொன் பெண் – அழகிய இலக்குமியாகிய பெண், ஒண் பதும வீடுதிறந்து வந்து – ஒள்ளிய வாசனைபொருந்திய பதுமமாகிய மனையின் (இதழ்க்கதவைத்) திறந்துகொண்டு வந்து, மணப்பு உடையள் ஆகி பிரிகலாள் ஒருது பிறங்கி வைக – கலத்தலுடையவளாகிப் பிரியாதவளாய்க் குறையாது விளங்கியிருக்கும்படி, தண் மணப்போது சிந்தி – தண்ணிய மணத்தையுடைய பூக்களைத் தூவி, சந்தனம் தெளித்து – சந்தனத்தைத் தெளித்து, முத்த வெண்மணல் பரப்பியிட்ட – முத்துக்களாகிய வெள்ளிய மணலைப்பரப்பிய, வீதிவாய் வியந்து போனான் – வீதியினிடத்தே வியந்து சென்றான். எ–று.

வைக என்னும் செயவெனெச்சம் காரியப்பொருட்டு. அது பரப்பியிட்ட என்னும் பெயரெச்சத்தோடு முடியும். (௧௩௪)

ஏரியங் கலர்ப்பா ணந்தொட் டிருவரு மறியா தேவெல்
கூரிய னழக னேனு மழகினுட் குடிபுக் கென்ன
வாரியன் விதர்ப்ப ராசன் சிந்தையின் வழிச்சென் றாரப்
பூரியம் பற்ப ராகப் புதியதோர் கோயில் புக்கான்.

இ–ள்: ஏர் இயங்கு அலர்ப் பாணம் தொட்டு – அழகுபொருந்திய புட்பபாணத்தைச் செலுத்தி, இருவரும் அறியாது வெல் கூரியன் அழகனேனும் – (ஆணும் பெண்ணுமாகிய) இருவரும் அறியாதபடி (அவரை) வெல்லுகின்ற நுண்ணிய புத்தியினையுடையோனாகிய மன்மதன் இயற்கையிலே அழகுடையவனாயினும், அழகினுள் குடிபுக்கென்ன – அழகினிடத்தே குடிபுகுந்தாற்போல, ஆரியன் – பூசிக்கப்படுவோனாகிய அயன், விதர்ப்பராசன் சிந்தையின் வழிச்சென்று – விதர்ப்பராசனுடைய மனக்கருத்தின்வழியே சென்று, ஆரப் பூரியம் பற்பராகப் புதியதோர் கோயில் புக்கான் – நிறைவு பெறும்படி பொன்னாலாகிய பதுமராக மணிகளையுடைய நூதனமான ஒப்பற்ற மாளிகையினிடத்தே போனான். எ–று.

ஆரப் புக்கான் என இயையும். மன்மதன் இயற்கை யழகுடையனாயினும் இன்னும் அதனைச் சிறப்பித்தற்குரிய அழகினிடத்தே அவன் குடிபுகுந்தாற்போல, ஆரியன் இயற்கையிலே சிறப்புடையனாயினும் இன்னும் அது சிறந்து காட்டற்குரிய சிறந்த ஒரு மாளிகையிற் புகுந்தான் என்பது கருத்து. (௧௩௫)

உரையொக்க விளங்கும் வெய்ய மண்டில முவரி வீழப்
புரையொக்க வெழுந்த திங்கள் புழுங்கிய புணரி யாற்று
திரையொக்க வலறி விண்ணின் வெடிப்பவான் சிவக்கப்பட்ட
நுரையொக்க மீன்க ளொத்த நுண்டுளித் தெறிப்பை யம்மா.

இ–ள்: உரை ஒக்க விளங்கும் வெய்ய மண்டிலம் உவரி வீழப் புரை ஒக்க எழுந்த திங்கள் – கீர்த்தி பொருந்த விளங்கும் சூரிய மண்டலம் கடலில் வீழ மேன்மை பொருந்த எழுந்த சந்திரன், புழுங்கிய புணரி ஆற்று திரை ஒக்க அலறி விண்ணின் வெடிப்ப – (அந்த வெய்ய மண்டிலம் வீழ்தலாலே) புழுங்கிய கடலானது அவ்வெப்பத்தை ஆற்றமுடியாமல் திரையினால் ஒருசேர அலறி விண்ணிலே கிளர்தலால், வான் சிவக்கப்பட்ட நுரை ஒக்க – ஆகாயம் சிவக்கும்படிபட்ட நுரையையொக்க, மீன்கள் நுண் துளித் தெறிப்பை ஒத்த – நட்சத்திரங்கள் நுண்ணிய துளியின் தெறிப்பை யொத்தன. எ–று.

அம்மா அசைநிலை. திங்கள் நுரையை யொக்க, மீன்கள் துளித் தெறிப்பை யொததன என்க. (௧௩௬)

குகரந்த வாத கோட்டுக் குன்றெடுத் துடைய கோலப்
பகரந்த நெடுங்கல் லோலப் பாற்கடற் பள்ளி யானி
னிகரந்த மிறந்த செவ்வி மல்லிகை நிறைந்த வாச
மகரந்த மலர்மென் சேக்கை வதிந்தனன் மடங்க லன்னான்.

இ–ள்: குகரம் தவாத கோட்டுக் குன்று எடுத்துடைய – முழைஞ்சு நீக்காத சிகரத்தையுடைய கோவர்த்தனகிரியைக் குடையாக உயர்த்திய, கோலப் பகர் அந்த நெடும் கல்லோலப் பாற்கடற் பள்ளியானின் – அழகைக்கொண்ட அந்த நெடிய திரைபொருந்திய பாற்கடற் சயனத்தையுடையராகிய விஷ்ணுவைப் போல, மடங்கல் அன்னான் – சிங்கேற்றை ஒத்தவனாகிய அயன், நிகர் அந்தம் இறந்த செவ்வி மல்லிகை நிறைந்த வாச மகரந்த மலர் மென் சேக்கை வதிந்தனன் – ஒப்பும் முடிவுமில்லாத அழகையுடைய மல்லிகையின் நிறைந்த வாசத்தையுடைய மகரந்தம் பொருந்திய மலர்களாலாகிய சயனத்தில் இருந்தான். எ–று.

இது நிறம்பற்றி வந்த உவமாலங்காரம். (௧௩௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதிதன் கரங்க ணீட்டிப் பற்றிடுந் தோறும் பாங்க
ரிருவரும் பிரியார் யான்வந் தெய்துவ தெங்ங னென்றுக்
கருவரி யளகக் கங்குற் கணிகைகை கடப்பக் காமத்
தொருவரை பாய்வான் போல வுதயவெற் புற்ற தன்றே.

இ-ள்: பரிதி - சூரியன், தன் கரங்கள் நீட்டிப் பற்றிடுந்தோறும் - தன்கைகளை நீட்டிப் பற்றுந்தோறும், பாங்கர் இருவரும் பிரியார் யான் வந்து எய்துவது எங்ஙன் என்று - பக்கத்திலே (சாயை, உடை என்னும்) இருவரும் பிரியார்கள் (அங்ஙனமாக) யான் வந்து அடைவது எப்படி என்று, கருவரி அளகக் கங்குல் கணிகை கைகடப்ப - இருளாகிய கூந்தலையுடைய இராக்காலமாகிய பரத்தையானவள் கைகடந்து செல்ல, காமத்து ஒருவரை பாய்வான் போல உதய வெற்பு உற்றது - காமத்தினால் ஒப்பற்ற வரையினின்று பாய்தலைப்போல உதயமலையையடைந்தது எ-று.

பாய்வான் தொழிற்பெயர். பரிதி உற்றது எனமுடிக்க. பாய்தல் - குதித்தல். அகப்பொருணூலிற் கூறிய வரைபாய்தற்றுறையைக் குறித்து இங்ஙனங் கூறினர். இது தற்குறிப்பேற்ற மென்னுமலங்காரம். (௧௮)

மறுகுளக் கடிகை மாக்கள் வைகறைப் புகழ வண்டார்
நறுமலர்த் துணர்ப்பூஞ் செவ்வி நானநன் னலங்கொ டாரான்
செறியனத் திரள்க ளார்ப்பச் சேக்கைமென் புளின நின்றங்
கெறும்வலிச் சுப்பிர தீப மெழுந்தெனத் துயிலெழுந்தான்.

இ-ள்: மறுகு உளக் கடிகை மாக்கள் வைகறைப் புகழ - சுழலுகின்ற மனத்தையுடைய கடிகை மாக்கள் புலரிக்காலத்திலே (வந்து) புகழ, வண்டு ஆர் துணர் நறுமலர் பூ செவ்வி நான நல் நலம் கொள் தாரான் - வண்டுகள் நிறைந்த கொத்தின்கணலர்ந்த நறிய மலர்களாலாகிய பொலிவான செவ்வியையுடைய மிருகமதத்தின் வாசனையைக்கொண்ட மாலையை யணிந்தவனாகிய அயன், செறி அனத்திரள்கள் ஆர்ப்ப - செறிந்த அன்னத்திரள்கள் ஆரவாரிக்க, சேக்கைமென் புளினம் நின்று - சயனமாகிய மெல்லிய மணற்றிடரினின்றும், அங்கு எறும்வலிச் சுப்பிர தீபம் எழுந்தென - அங்கே மிக்க வலியையுடைய சுப்பிரதீபம் என்னும் யானை துயிலெழுந்தாற் போல, துயில் எழுந்தான் - நித்திரையை விட்டு எழுந்தான். எ-று.

தாரான் எழுந்தான் எனமுடிக்க. புகழஎழுதல், ஆர்ப்பஎழுதல் போலும் என்க. (௧௯)

அயனெழுச்சிப்படலமுற்றிற்று.

Digitized
noolaha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org